# பொருளியலாளன்

மலர் 3 இதழ் 2 யூன் 1989

✶ அபிவிருத்திக் குறிகாட்டிகள்

✶ பெருந்தோட்டம்: எண்ணக்கரு

✶ பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம்

✶ வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்பிரிவு

Phone 2363
Jaffna
20.0

# PORULIYALALAN

## YOUNG ECONOMISTS ASSOCIATION


EDITOR

**Mr. N. Perinpanathan**
*B. A. Hons. (Cey.) M. A. (Jaffna)*
Senior Lecturer, Dept. of Economics,
University of Jaffna.

ASSISTANT EDITOR

**Mr. M. Sinnathamby**
*B. A. B., Phil. Hons (Cey.), Dip. in Ed.*
Tutorial staff
Jaffna Hindu College

MANAGING EDITOR

**Mr. C. S. Ananthan**
*B. A. Hons. (Cey.)*

ADVISORY COMMITTEE

**Prof. S. Rajaratnam** *B. A. Hons. (Cey.). M. Sc. (Lon.)*
Head Dept. of Commerce and Management, University of Jaffna.

**Prof. N. Balakrishnan** *B. A. Hons. (Cey.), M. Phil. (Leeds)*
Dean, Faculty of Arts, University of Jaffna.

**Mr. M. Sinnathamby** *B. A. Hons. (Cey.) M. A. (Manchester)*
Senior Lecturer, Dept. of Economics, University of Peradeniya.

**Dr. V. Nithianandam** *B, A. Hons. (Cey.) Ph. D. (Reading)*
Head, Dept. of Economics, University of Jaffna.

EDITORIAL BOARD

**Mr. V. P. Sivanathan** *B. A. Hones. (Cey.) M. A. (Jaffna).*
Lecturer in Economics, University of Jaffna.

**Mr. A. Senthilvadivel** *B. A. (Cey.) M. A. (Jaffna) S. L. A. S*
Deputy Director, General Treasury, Colombo.

**Mr. R. Nanthakumaran** *B. A. Hons (Jaffna) M. A. (Jaffna), M. Sc. (England)*
Assistant Director,
National Planning Division
Colombo.

**Miss S. Ambikadevi** *B. A. Hons. (Cey.)*
Assistant Lecturer in Economics, University of Jaffna.

சித்திவிநாயகர் நூல் நிலையம்

20

YOUNG ECONOMISTS ASSOCIATION SRILANKA
Social Justice Through Knowledge

# பொருளியலாளன்

ஜூன் 1989


- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் அபிவிருத்திக் குறிகாட்டிகளும் — 1
  ந. பேரின்பநாதன்
- இலங்கையின் தற்காலப் பொருளியல் வரலாற்றிற்கு ஓர் அறிமுகம் — 14
  ஐ. ஏச். வன்டன்டிரிசன்
- பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் — 27
  மா. சின்னத்தம்பி
- 'பெருந்தோட்டம்' : ஓர் எண்ணக்கரு ரீதியான அறிமுகம். — 41
  வி. நித்தியானந்தம்
- அரச அடமான முதலீட்டு வங்கி. — 53
- இலங்கையின் அடிப்படைப் பொருளாதாரத் தகவல்கள். — 54
- இலங்கையில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்பாடுகள் — 57
  சி. அம்பிகாதேவி


கட்டுரையில் காணப்படும் கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளர்களாவர்.

## கட்டுரையாளர்கள் :


- **ந: பேரின்பநாதன்**
  B. A, Hons (Cey.), M. A. (Jaf.)
  பிரதம ஆசிரியர். பொருளியலாளன்
  சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற்துறை.
  யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

- **ஐ. ஏச். வண்டன்டிரிசன்**
  முன்னாள் விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்.

- **மா. சின்னத்தம்பி**
  B. A., B. Phil. Hons (Cey.), Dip-in-Edu.
  துணை ஆசிரியர், பொருளியலாளன்
  ஆசிரியர் இந்துக்கல்லூரி.

- **வி. நித்தியானந்தம்**
  B. A, Hons. (Cey.) Ph. D. (Reading)
  தலைவர், பொருளியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

- **சி. அம்பிகாதேவி**
  B. A. Hons. (Cey,)
  உதவி விரிவுரையாளர், பொருளியற்துறை.
  யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

# அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் அபிவிருத்திக் குறிகாட்டிகளும்

ந. பேரின்பநாதன்

இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் உலகநாடுகளை அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடையாத நாடுகள் என அவற்றின் அபிவிருத்தி அடிப்படையில் பிரித்து நோக்குவது வழக்கமாக இருந்தது. அபிவிருத்தி அடையாத நாடுகளே இன்று வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் என்றும் மூன்றும் உலக நாடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. அவை குறைந்த தலாவருமானம், அதிக சனத்தொகை வளர்ச்சி, தங்கியிருப்போர் சுமை கூடுதலாக இருத்தல், உயர்ந்தளவு வேலையின்மை, கீழுழைப்பு நிலை காணப்படுதல், குறைந்த சுகாதார வசதி, குறைந்த கல்வித்தரம், விவசாயத்தில் அதிகம் தங்கியிருத்தல், இரட்டைப் பொருளாதாரநிலை காணப்படுதல், குறைந்த உற்பத்தித்திறன், முதல் விளைவுப் பொருட்களின் ஏற்றுமதியில் தங்கி இருத்தல் போன்ற பல பொதுவான பண்புகளைக் கொண்டுள்ளன. அப்பண்புகள் பற்றி ஓரளவு விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### குறைந்த தலா வருமானம்

குறைவிருத்தி நாடுகளின் முக்கிய பண்புகளில் ஒன்று அவற்றின் தலாவருமானம் குறைவாக இருப்பதாகும். அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தலாவருமானத்துடன் ஒப்பிடும்போது குறைவிருத்தி நாடுகளின் தலாவருமானம் மிகக் குறைவாக உள்ளது. ஒரு நாட்டின் தலாவருமானத்தை குறிப்பிட்ட ஆண்டின் தேசிய வருமானத்தினை அவ்வாண்டின் நடுப்பகுதியிலிருந்த சனத்தொகையின் அளவினால் பிரிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். 1984 ஆம் ஆண்டளவில் உலகில் உள்ள சகல நாடுகளினதும் மொத்த தேசிய வருமானம் 12500 மில்லியன் அமெரிக்க டொலர்களிற்கு மேலாக இருந்தது. இதில் 9750 மில்லியன் அமெரிக்க டொலர்களிற்கு மேலான அளவு வளர்ச்சியடைந்த நாடுகளிற்கு உரியதாகவும் 2750 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குறைந்தளவே வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிற்குரியதாகவும் இருந்தது. ஆனால் உலகின் சனத்தொகையில் இதே காலத்தில் 76 சதவீத வீதமானவர்கள் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளிலும் 24சதவீதமானவர்கள் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வசித்தனர். இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் உலகின் சனத்தொகையில் 76% சதவீத பங்கினை கொண்டிருந்த வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் உலகின் மொத்த வருமானத்தில் 27% பகுதியைப் பெற உலக சனத்தொகையில் 24% பங்கினைக் கொண்டிருந்த வளர்ச்சியடைந்த நாடுகள் உலக வருமானத்தில் 73% பகுதியினைப் பெற்றனர் என்பதாகும்.

இதனுல் இவ்விருவகை நாடுகளுக்கு மிடையேயான தலா வருமானத்தில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. ஆனுல் சில குறைவிருத்தி நாடுகளின் தலாவருமானம் வளர்ச்சியடைந்த நாடுகளின் தலா வருமானத்தை விட கூடுதலாக உள்ளது. உதாரணமாக குவைத்தின் தலா வருமானத்தைக் கூறலாம். இதனை அட்டவணை ஒன்றில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை 1

தலாவருமானம் 1984 (அமெரிக்க டொலரில்)

| நாடுகள் | தலா வருமானம் |
|---|---|
| அமெரிக்கா | 15,390 |
| கனடா | 13,280 |
| சுவிற்சலாந்து | 16,330 |
| யப்பான் | 10,630 |
| சுவீடன் | 11,860 |
| ஐக்கிய இராச்சியம் | 8,570 |
| நோர்வே | 13,940 |
| பிரான்ஸ் | 9,760 |
| எதியோப்பியா | 110 |
| வங்காளதேசம் | 130 |
| இலங்கை | 360 |
| பாகிஸ்தான் | 380 |
| இந்தியா | 260 |
| குவைத் | 16,720 |
| சவுதி அரேபியா | 10,530 |
| ஐக்கிய அரபுக்குடியரசு | 21,920 |

ஆதாரம்:- World Development Report 1986
Table 1 PP 181-182

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் குறைவிருத்தி நாடுகளின் தலா வருமானம் கூடுதலாக இருப்பதைக் காணலாம். இதன் காரணமாக வளர்ச்சியடைந்துவரும் நாடுகளை ஒட்டு மொத்தமாக எடுத்து அவற்றின் தலா வருமானத்தினைக் கணிக்கின்றபோது அது வளர்ச்சியடைந்த நாடுகளின் தலாவருமானத்தில் $\frac{1}{12}$ பகுதியிலும் பார்க்க குறைவாக உள்ளது.

இங்கு நாம் குறிப்பிடவேண்டிய இன்னெரு விடயம் யாதெனில் வறிய நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளிற்கும் இடையேயான தலாவருமான இடைவெளி அதிகமாக உள்ளமையாகும். இதற்கு உதாரணமாக நாம் சுவிற்சலாந்தினை நோக்கினுல் அதன் தலா வருமானம் வறிய நாடுகளிலொன்ருன எத்தியோப்பியாவின் தலா வருமானத்தினை விட ஏறக்குறைய 150 மடங்காகக் காணப்படுகின்றது. உலகவங்கி குறைவருமானம் பெறும் நாடுகள் என வகைப்படுத்தப்பட்ட 34 நாடுகளின் சராசரி தலாவருமானம் 1984 இல் 260 அமெரிக்க டொலர்களாக இருக்க வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் என வரையறுக்கப்பட்ட 19 நாடுகளின் சராசரி தலாவருமானம் 11430 அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. இங்கு நாம் பார்த்தவற்றை விட நாம் ஆச்சரியப்படக்கூடிய இன்னெரு விடயம் யாதெனில் காலப்போக்கில் தலாவருமான இடைவெளி வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் குறித்தும் வளர்ச்சி அடைந்த நாடுகள் குறித்தும் அதிகரித்துச் செல்வதாகும்.

பல மூன்ரும் நாடுகளின் மொத்த தேசிய வருமான வளர்ச்சிவீதம் வளர்ச்சியடைந்த நாடுகளின் மொத்த தேசிய வருமான வளர்ச்சியை விட குறைவாகஉள்ளது. உதாரணமாக 1960-1982க்கு மிடையில் ஐக்கியநாட்டு சபை அதிகுறைந்த வளர்ச்சி பெற்ற நாடுகள் என வகைப்படுத்தப்பட்ட நாடுகளின் (சீன, இந்தியா, நீங்கலாக) மொத்த தேசிய வருமான வளர்ச்சி வீதம் 1.1 சத வீதமாகவும், வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் என வகைப்படுத்தப்பட்ட நாடுகளின் வளர்ச்சி வீதம் 3.2 சதவீதமாகவும் இருந்தது. எல்லா நாடுகளையும் ஒன்ருக எடுத்து எண்ணெய் உற்பத்தி செய்யாத மூன்ரும் உலக நாடுகளின் வளர்ச்சி வீதம் 3.1 சதவீதமாக இருந்தது. ஆனுல் சகல வளர்ச்சி அடைந்த நாடுகளினதும் வருடாந்த வளர்ச்சி வீதம் இதே காலப்பகுதியில் 3.4 சதவீதமாக இருந்தது. இதன் கருத்து யாதெனில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்ச்சியடைந்து

வரும் நாடுகளுக்கும் இடையேயான வருமான இடைவெளி வருடாந்தம் 2.3 சதவீதத்தினுல் அதிகரித்து செல்கின்றது என்பதாகும். OPEC அமைப்புக்குள் அடங்கும் நாடுகளையும் கவனத்தில் எடுத்து நோக்கின் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் தேசிய வருமான வளர்ச்சி வீதம் இதே காலப்பகுதியில் 3.8 சதவீதமாக இருந்தது. இவ்வளர்ச்சி வீதம்(3.8) வளர்ச்சியடைந்து நாடுகளின் வளர்ச்சி' வீதத்தை (3.4) விட கூடுதலாக இருப்பினும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் மொத்த தேசிய வருமானம் வளர்ச்சியடைந்த நாடுகளின் மொத்த தேசிய வருமானத்திலும் பார்க்க பெருமளவு குறைவாக இருப்பதனுல் மேற் கூறிய வகையில் வளர்ச்சி வீதம் ஓரளவுக்கு சமனுன அளவில் காணப்பட்டாலும் நீண்ட காலத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிற்கும் இடையேயான தேசிய வருமான இடைவெளி தொடர்ந்து கொண்டே செல்லும். உதாரணமாக வளர்ச்சியடைந்த நாடுகளின் மொத்ததேசிய வருமானம் குறிப்பிட்ட ஆண்டில் 10000 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்றும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் மொத்த தேசிய வருமானம் 3000 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்றும் எடுப்பின் இவை இரண்டிற்கும் இடையேயான தேசிய வருமான இடைவெளி 7000 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந் நிலையில் வளர்சியடைந்துவரும் நாடுகளின் வளர்ச்சி வீதம் 3.8 ஆக இருப்பின் அவற்றின் அடுத்த வருட மொத்த தேசிய வருமானம் 3114 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். வளர்ச்சியடைந்த நாடுகளின் வளர்ச்சி வீதம் 3.4 ஆக இருப்பின் அவற்றின் அடுத்த வருட மொத்த தேசிய வருமானம் 10340 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். எனவே தற்போது இவ்விரு வகை நாடுகளுக்கு இடையேயான வருமான இடைவெளி 7226 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதே சமயத்தில் தலா வருமான இடைவெளியும் பெருமளவுக்கு அதிகரிக்கின்றது. இவ்விடத்தில் சனத்தொகை அதிகரிப்பினையும் கவனத்தில் கொண்டால் நிலை மோசமாக இருப்பதை உணரலாம். குறைவிருத்தி நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பானது வளர்ச்சியடைந்த நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பினை விட கூடுதலானதாகும். வளர்ச்சியடைந்த வரும் நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பானது வருடாந்தம் 2.1 சதவீதமாகவும் வளர்ச்சியடைந்த நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பு 0.5 சதவீதமாகவும் உள்ளது. இந்நிலையில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் OPEC தாபனத்தில் அங்கம் வகிக்காத மூன்றும் உலக நாடுகளிற்குமிடையே காணப்படும் உண்மையான தலாவருமான இடைவெளி வருடாந்தம் 1.9 சதவீதத்தில் அதிகரித்துச் செல்லும். மேல் உள்ளவற்றில் நாம் அறிந்து கொள்வது யாதெனில் இவ்விருவகை நாடுகளுக்குமிடையேயான தலாவருமான இடைவெளி தற்போது அதிகமாக உள்ளது மட்டுமல்லாமல் எதிர்காலத்திலும் அதனளவு அதிகரித்துச் செல்லும் என்பதாகும்.

சுகாதாரம்

3ஆம் உலக நாடுகளிலுள்ள மக்கள் குறைந்த வருமானத்துடன் மட்டுமல்லாது போஷாக்கின்மை, சுகாதாரக் குறைவு, உணவுப் பற்றுக்குறை போன்றவற்றுடனும் போராட வேண்டியுள்ளது. போஷாக்கின்மை காரணமாக இந்நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கைக் காலம் குறைவாக உள்ளது. 3ஆம் உலகில் உள்ள மக்களின் சுகாதாரம் சம்பந்தமான சில புள்ளிவிபரங்களை பின்வரும் அட்டவணை 2 காட்டுகின்றது.

அட்டவணை 2

சுகாதார சம்பந்தமான சமூக பொருளாதார குறிகாட்டிகள் 1980

| | அதிகுறைந்த வளர்ச்சி யடைந்த நாடுகள் | வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் | வளர்ச்சி யடைந்த நாடுகள் |
|---|---|---|---|
| நாடுகளின் எண்ணிக்கை | 29 | 90 | 37 |
| மொத்த சனத்தொகை (மில்லியனில்) | 283 | 3001 | 1131 |
| குழந்தை இறப்பு வீதம் | 160 | 94 | 19 |
| ஆயுள் எதிர்பார்ப்பு வருடங்கள் | 45 | 60 | 72 |
| பிறக்கும் போது 2500 அல்லது அதற்கு மேற்பட்ட கிறும்கள் எடையுடைய குழந்தைகள் வீதம் | 70 | 83 | 93 |
| தலா நபருக்குரிய சுகாதாரத்தின் மீதான பொதுச்செலவு (டொலரில்) | 1.7 | 6.5 | 244 |
| மொத்த தேசிய வருமானத்தில் சுகாதாரத்தின் மீதான பொதுச் செலவின் பங்கு | 1.0 | 1.2 | 3.9 |

ஆதாரம்: World Health Organization

மூன்றும் உலக நாடுகளில் உணவுப் பற்றுக்குறை காரணமாக பலர் இறக்கின்றனர். இந்நாடுகளில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 11மில்லியன் குழந்தைகள் வருடாந்தம் இறக்கின்றன எனக் கூறப்படுகின்றது. ஆசிய ஆபிரிக்க நாடுகளில் வாழும் மக்களில் ஏறக்குறைய 60 சதவீதமானவர்கள் குறைந்த பட்ச கலோரித் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளபோது வளர்ச்சியடைந்த நாடுகளில் தேவையான அளவுக்கு மேலான கலோரித் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதை பின்வரும் அட்டவணை 3லிருந்து அறிந்து கொள்ளலாம்.

போஷாக்கின்மையை அளவிடும் இன்னொரு அளவீடு தலா நபருக்குரிய புரத நுகர்வாகும். இது வளர்ச்சியடைந்த நாடுகளில் உயர்வாக உள்ளது. அமெரிக்காவில் ஒரு நாளுக்குரிய தலா புரத நுகர்வின் அளவு 97கிராம்கள் ஆகும். இது பிறேசிலில் 63 ஆகவும் இந்தியாவில் 48 ஆகவும் கானாவில் 43 ஆகவும் உள்ளது. 1970களில் ஒரு ஆளுக்கான சராசரி தானிய நுகர்வு விருத்தியடைந்த நாடுகளில் 650கிலோ கிராமாகவும், வளர்ச்சி குறைந்த நாடுகளில் 180 கிலோகிராமாகவும் இருந்தது. எனவே வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளவர்கள் நன்கு சாப்பிடுவதன் காரணமாக தேகசக்தியை கூடுதலாக கொண்டிருப்பதால் நோய்களிலிருந்து பெருமளவிற்கு தப்பிக் கொள்வதுடன் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதற்கும் உதவி செய்கிறுர்கள்.

வைத்திய வசதிகளை எடுத்து நோக்குகின்றபோது பல குறைவிருத்தி நாடுகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதைக் காணலாம். 1980 களின் ஆரம்பத்தில் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் 100,00 மக்களிற்கு 9.7 வைத்தியர்கள் காணப்பட வளச்சியடைந்தநாடுகளில்158வைத்தியர்கள் காணப்பட்டனர், சராசரி இந்த நிலையில் இருந்தாலும் தனித்தனியே சில நாடுகளை எடுத்துநோக்கும்போது நிலைமை மோசமாக இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். அட்டவணை 4 இதனைக் காட்டுகிறது.

அட்டவணை 3

நாளொன்றுக்குத் தேவையான குறைந்த பட்ச கலோரித் தேவையும் அத்தேவையில் நிரம்பல் செய்யப்பட்ட அளவும் 1982 - 1984

| நாடுகள் | தேவையான அளவு | தேவையில் நிரம்பல் செய்யப்படும் அளவு (சதவீதம்) |
|---|---|---|
| எதியோப்பியா | 2360 | 72 |
| நைஜீரியா | 2360 | 90 |
| வங்காளதேசம் | 2210 | 85 |
| இலங்கை | 2220 | 102 |
| பாகிஸ்தான் | 2310 | 95 |
| இந்தியா | 2210 | 96 |
| யப்பான் | 2340 | 122 |
| ஐக்கிய ராச்சியம் | 2520 | 126 |
| அமெரிக்கா | 2640 | 139 |

ஆதாரம் :- World Development Report 1986

அட்டவணை 4

ஒரு வைத்தியருக்கும் ஒரு தாதிக்குமான சராசரி சனத்தொகை 1981

| நாடுகள் | வைத்தியரிற்கான சனத்தொகை | தாதியரிற்கான சனத்தொகை |
|---|---|---|
| எதியோப்பியா | 88120 | 5000 |
| சோமாலியா | 15630 | 2550 |
| இலங்கை | 7620 | 1260 |
| உகண்டா | 22180 | 2000 |
| மொசாம்பிக் | 33340 | 5610 |
| அமெரிக்கா | 500 | 180 |
| யப்பான் | 740 | 210 |
| கனடா | 510 | 120 |
| ஐக்கிய ராச்சியம் | 680 | 120 |

ஆதாரம் :- World Developmeut Report 1986 Table 28

குறைவிருத்தி நாடுகளில் காணப்படும் வைத்தியசேவையில் கவனிக்கப்படவேண்டிய அம்சம் யாதெனில் அந்நாடுகளில் கிராமப் பகுதிகளில் வாழும் மக்கள் பலருக்கு நவீன வைத்திய வசதிகள் கிடைப்பதில்லை என்பதாகும். ஆனல் அந்நாடுகளின் மொத்த சனத்தொகையில் 25சதவீதமே வாழ்கின்ற நகரப்பகுதிகளில் தான் வைத்தியசேவைகள் செறிந்து காணப்படுகின்றன. உதாரணமாக இந்தியாவை எடுத்துக்கொண்டால் 80 சதவீதமான வைத்தியர்கள் அந்நாட்டின் சனத்தொகையில் 20சதவீதமே வாழ்கின்ற நகரப்பகுதிகளில் தமது சேவையினை ஆற்றுகின்றனர்கள். மேலும் கென்யா நாட்டின் தலைநகரான நைரோபியில் 672 பேருக்கு ஒரு வைத்தியர் என்ற விகிதப்படி இருக்க, அந்நாட்டின் சனத்தொகையில் 87 சத வீதமானேர் வாழும் கிராமியப் பகுதியில் 20,000 பேருக்கு ஒரு வைத்தியர் என்ற விகிதப்படியும் காணப்படுகிறது.

கல்வி :

குறைவிருத்தி நாடுகளில் வாழும் மக்களின் கல்வித்தரம் வளர்ச்சியடைந்த நாடு

களின் கல்வித் தரத்துடன் ஒப்பிடும்போது மிகக்குறைவாக உள்ளது. குறைவிருத்தி நாடுகளில் பலர் படிப்பறிவற்றவர்களாக உள்ளனர், 1981ஆம் ஆண்டின் அதிகுறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் கல்வியறிவுடையோர் வீதம் 37 ஆகவும், ஏனைய மூன்றும் உலக நாடுகளில் இது 63 சதவீதமாகவும் விருத்தியடைந்த நாடுகளில் இது 97 சதவீதமாகவும் இருந்தது. தனிப்பட சில நாடுகளில் இவ்வீதம் வெவ்வேறாக இருப்பதைக் காணலாம்.

**கல்வியறிவுடையோர் வீதம்**

| நாடுகள் | வீதம் |
|---|---|
| கனடா | 99 |
| அமெரிக்கா | 99 |
| ஐக்கிய ராச்சியம் | 99 |
| ரஷ்யா | 100 |
| இந்தியா | 36 |
| இலங்கை | 85 |
| பாகிஸ்தான் | 24 |
| சாம்பியா | 44 |

ஆதாரம்: P R B World Population Data' Sheet 1984

குறைந்த கல்வியறிவுடையோர் வீதம் குறைந்த உற்பத்தித் திறனுக்கே வழிவகுக்கிறது.

**குறைந்த உற்பத்தித்திறன்:**

குறைவிருத்தி நாடுகளில் ஒரு தொழிலாளருக்கான உற்பத்தித் திறன் மிகக்குறைவாக உள்ளது. இதற்குப் பல காரணங்கள் பொறுப்பாக உள்ளன. மூலதனப் பற்றுக்குறை, அனுபவம் வாய்ந்த முகாமைத்துவமின்மை போன்றன முக்கிய காரணிகளாக அமைகின்றன. இப் பற்றுக்குறையினை நீக்குவதற்கு உள்நாட்டு சேமிப்பு அதிகரிக்கப்படுவதுடன், வெளிநாட்டு முதலீடுகளும் வரவழைக்கப்படுதல் வேண்டும். மேலும் கல்வியில் முதலிட்டு மனித மூலதனத்தையும் அதிகரிக்க வேண்டும். இவ்வாறான புதிய பௌதிக வடிவிலான முதலீட்டிலிருந்தும், மனித முதலீட்டிலிருந்தும் பெறப்படும் பயனை உச்சப்படுத்த வேண்டுமாயின் நிறுவன ரீதியான அமைப்புக்களிலும் மாற்றங்கள் கொண்டு வரப்படுதல் வேண்டும். நிலச்சீர்திருத்தம் செய்தல், வங்கியமைப்புக்களை ஏற்படுத்தல், நேர்மையான, சுதந்திரமான பலம்வாய்ந்த, திறமையான, நிருவாக சேவையை உருவாக்கல், கல்வியமைப்பில் சமூகத்திற்கு தேவையான மாற்றங்களை ஏற்படுத்துதல் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு வழிவகைகள் செய்யப்படுதல் வேண்டும்.

தொழிலாளரின் உடல்நிலைக்கும் உற்பத்தித்திறனிற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. பலம்வாய்ந்த தொழிலாளியால் அதிக உற்பத்தித்திறனை மேற்கொள்ள முடியும். நாம் ஏற்கனவே நோக்கியவாறு குறைவிருத்தி நாடுகளில் காணப்படும் குறைந்த சுகாதார நிலையும், குறைந்த கல்வித்தரமும் குறைந்த உற்பத்தித்திறனுக்கு காரணமாக அமைகின்றன. போஷாக்கற்ற உணவு, பற்றுக்குறையான உணவு, சுகாதாரக்கேடு போன்றன இந் நாடுகளில் உள்ள தொழிலாளர்களின் உடல்நிலையைப் பாதித்து உற்பத்தித்திறனைப் பாதிக்கின்றது.

**அதிக சனத்தொகை வளர்ச்சியும் தங்கியிருப்போர் சுமையும்:**

அதிக சனத்தொகை வளர்ச்சியும் தங்கியிருப்போர் சுமை கூடுதலாக இருப்பதும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் தலாவருமானம் குறைவாக இருப்பதற்கு ஒரு காரணமாகும். 1987ம் ஆண்டு உலகின் சனத்தொகை 5மில்லியனைக் கடந்து விட்டிருந்தது. பின்வரும் புள்ளிவிபரங்கள் 1986ஆம் ஆண்டின் உலகின் சனத்தொகை பற்றிய சில விபரங்களைக் காட்டுகின்றது.

அட்டவணை 6

உலக சனத் தொகைத் தரவுகள்

| | உலகம் | வளர்ச்சி அடைந்த நாடுகள் | வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் | வளர்ச்சி யடைந்து வரும் நாடுகள் (சீன நீங்கலாக) |
|---|---|---|---|---|
| சனத்தொகை 1986 (மில்லியனில்) | 4942 | 1180 | 3762 | 2712 |
| பருமட்டான பிறப்புவீதம் | 27 | 15 | 31 | 37 |
| பருமட்டான இறப்புவீதம் | 11 | 10 | 11 | 12 |
| இயற்கை அதிகரிப்பு | 1.7 | 0.6 | 2 | 2.4 |
| சனத்தொகை இரட்டிப்பாக எடுக்கும் காலம் (நடைமுறை வீதத்தில்) | 41 | 122 | 34 | 29 |
| குழந்தை இறப்புவீதம் | 82 | 17 | 92 | 99 |
| 15 வயதுக்குட்பட்ட சனத் தொகை (சதவீதத்தில்) | 35 | 23 | 39 | 41 |
| 65 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகை (சதவீதத்தில்) | 6 | 12 | 4 | 4 |
| வாழ்க்கை எதிர்பார்க்கைக் காலம் | 62 | 73 | 58 | 56 |
| நகர சனத்தொகை | 43 | 72 | 34 | 34 |

ஆதாரம் :- World Population Data Sheet 1986 P R B Washington D. C, 1986

இச் சனத்தொகையில் ¾ பங்கினர் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிலும் ¼ பங்கினர் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் காணப்படுகின்றனர். இவ்விருவகைப்பட்ட நாடுகளிலும் இறப்பு வீதம், பிறப்பு வீதம் ஆகியவற்றிற்குமிடையே அதிக வேறுபாட்டைக் காணக்கூடியதாகவுள்ளது. வளர்ச்சியடைந்துவரும் நாடுகளிற்கு இடையே பிறப்பு வீதம் 30-40 வரை காணப்படுகின்றது. ஒரு சில குறைவிருத்தி நாடுகளின் பிறப்பு வீதம் 30ற்குக் குறைவாக உள்ளது. சிலவற்றின் பிறப்பு வீதம் 40ற்கும் மேலாக உள்ளது. ஆனல் எந்த ஒரு வளர்ச்சியடைந்த நாடுகளினதும்பிறப்பு வீதம் 30ற்கு மேலாக இல்லை என்பது கவனிக்கத்தக்கது. சராசரியை எடுத்து நோக்கும்போது வளர்ச்சியடைந்த நாடுகளின் பிறப்பு வீதத்தினளவு, வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் பிறப்பு வீதத்தின் அளவில் சரிபாதியாக உள்ளதைக் காணலாம். பின்வரும் அட்டவணை இத்தகைய வேறுபாடுகளைக் கண்டறிவதற்கு உதவி செய்கின்றது.

அட்டவணை 7

உலக நாடுகளின் பிறப்பு வீதம்

| | நாடுகள் |
|---|---|
| 50 | எதியோப்பியா, மாலி, கென்யா ரோகோ, லிபேரியா, சாம்பியா, ஜவரி, கோஸ்ற், யேமன், நைஜீரியா, வங்காளதேசம் |
| 45 | சியராலியோன், உகண்டா, மொறுக்கோ, சூடான், கொங்கோ, பொலிவியா, பாகிஸ்தான், சவூதி அரேபியா |
| 40 | லெசேத்தோ, பர்மா, ஈரான், ஈக்குவடோர், பெரு, தென் ஆபிரிக்கா, கம்பூச்சியா, எகிப்து. |
| 35 | இந்தியா, வெனிசுலா, பராகுவே |

30 கொலம்பியா, மலேசியா, துருக்கி, யமேக்கா, பனமா, அல்பேனியா, இந்தோனேசியா, பிறேசில், வட கொரியா.

20 போலந்து, ரஷ்யா, சீன, அயர்லாந்து, உருகுவே.

25 இஸ்ரேல், தென்கொரியா.

15 அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா. பிரான்ஸ், கிரிஸ், கியூபா, ஸ்பெயின்,

10 சுவிசர்லாந்து, ஜேர்மனி, கங்கேரி, ஜப்பான்.

ஆதாரம்: P R B, world Populatrion Data Sheet, 1984

இறப்பு வீதத்தினை நோக்குகின்ற போதும் வளர்ச்சியடைந்த நாடுகளின் இறப்பு வீதம் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் இறப்பு வீதத்தை விட குறைவாக உள்ள தெனினும் அவற்றிற்கிடையேயான வேறு பாடு மிகக் குறைவாக உள்ளது. மருத்துவ வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றமே குறைவிருத்தி நாடுகளில் அண்மைக்காலத் தில் இறப்பு வீதத்தில் ஏற்பட்ட குறை விற்கு காரணமாகும். இத்தகைய பிறப்பு வீத இறப்பு வீத அமைப்பின் காரணமாக மூன்றும் உலக நாடுகளில் சராசரியாக சனத் தொகை அதிகரிப்பு 2.1 சதவீதமாகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் 0.6 சதவீத மாகவும் உள்ளது.

இத்தகைய சனத்தொகை அதிகரிப்பு முறையினல் ஏற்பட்ட முக்கிய விளைவு யாதெனில் வளர்ச்சியடைந்துவரும் நாடு களின் மொத்த சனத்தொகையில் 2/5 பங்கு 15 வயதுக்குக் குறைந்தவர்களாக இருப்ப தாகும், ஆனல் இவ்விகிதத்தினர் வளர்ச்சி யடைந்த நாடுகளில் ¼ பகுதியினராக உள்ளனர். 15 வயதிற்குட்பட்டவர்களும் 64 வயதிற்கு மேற்பட்டவர்களும் பொருளி யலில் தங்கியிருப்பவர்கள் என அழைக்கப் படுகின்றனர். அதாவது அவர்கள் உற்பத்தி செய்யாமல் நுகர்வில் ஈடுபடுபவர்களாக இருப்பார்கள். மொத்த தங்கியிருப்போர் விகிதம் 15 வயதிற்குட்பட்டோரும் 64 வய துக்கு மேற்பட்டோரும் வளர்ச்சியடைந்த நாடுகளின் மொத்தசனத்தொகையில் 1/3பங் காகவும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் சனத்தொகையில் ½ பங்காகவும் உள்ளது. இன்னும் விசேடமாக நோக்கின் தங்கியிருப் போரில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் 90 வீதமானவர்கள் குழந்தைகளாக இருக்க வளர்ச்சியடைந்த நாடுகளில் இவ்வீதம் 66 ஆக உள்ளமையும் கவனிக்கத்தக்கது.

உயர்ந்த பிறப்பு வீதம் காணப்படுவ தால் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் குழந்தைகளின் எண்ணிக்கை கூடுதலாக உள்ளது. அத்துடன் அங்கு ஆயுள் எதிர் பார்க்கையும் குறைவாக உள்ளதால் வேலை செய்யக்கூடிய காலமும் குறைவாக இருக்க சுமை அதிகமாக உள்ளது. அதாவது வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் வேலைப் படையில் உள்ளவர்கள் விருத்தியடைந்த நாடுகளில் வேலைப்படையில் உள்ளவர்களி லும் பார்க்க இருமடங்கு குழந்தைகளுக்கு உழைக்கவேண்டும். இதன் காரணமாக குறைவிருத்தி நாடுகளில் உள்ளவர்களால் அதிகம் சேமிக்க முடிவதில்லை. இதனல் முதலீடு குறைவாக உள்ளது. அதே வேளை யில் தமது குழந்தைகளுக்குத் தேவையான கல்வி, மற்றும் வாழ்க்கைக்குத் தேவை யான விடயங்களை போதுமான வகையில் அளிக்க முடியாதிருப்பதால் நீண்ட காலத் தில் நாட்டின் பொருளாதார, சமூக விருத்தி பாதிக்கப்படுகின்றது.

**உயர்ந்தளவு வேலையின்மையும் கீழுழைப்பு நிலையும்**

குறைவிருத்தி நாடுகளில் வெளிப் படையான வேலையின்மையும். மறைமுக வேலையின்மையும் பெருமளவு காணப்படு கின்றன. நகராக்க அபிவிருத்தியுடனும், கல்வியபிவிருத்தியுடனும் நகர வேலை யின்மை என்பது அதிகரித்துள்ளது. அதே வேளையில் தொழிற்படையின் அதிகரிப் பிற்கு ஏற்ப கைத்தொழில்துறை வளர்ச்சிய டையாததாலும் நகர வேலையின்மை அதி கரித்துள்ளது. மேலும் பொருளாதாரத்தில் அமைப்பு ரீதியாக உள்ள இறுக்கங்களாலும் மனித சக்தி திட்டமிடலில் உள்ள குறை

பாட்டாலும் படித்த வாலிபர்களின் வேலை யின்மை இந்நாடுகளில் அதிகரிக்கின்றது. மூன்றும் உலகநாடுகளில் நகரசனத்தொ கையில் 10 — 15 சதவீதத்திற்கிடையில் வெளிப்படையான வேலையின்மை காணப் படுகின்றது. அதிலும் 15 — 24 வயதுக் கிடைப்பட்ட பிரிவினர்களிடையேதான் வேலையின்மை கூடுதலாக உள்ளது.

வெளிப்படையான வேலையின்மையை விட பல குறைவிருத்தி நாடுகளில் மறை மூக வேலைமின்மையும் காணப்படுகின்றது. இது கிராமியத்துறை, நகரத்துறை ஆகிய இரு பகுதிகளிலும் காணப்படுகின்றது. கிராமியத்துறையில் உள்ள பல விவசாயி களிடம் போதுமான அளவு நிலம், கருவிகள் இல்லாததால் வேலை செய்ய விருப்பமிருந் தும் வருடம் முழுவதும் நிறைவாக வேலை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. உதாரணமாக 8 தொழிலாளர்களால் பயிரிடக்கூடிய நிலத்தில் 10 பேர் வேலை செய்வார்களாயின் 10 பேருக்கும் பூரண மாக வேலை கிடைக்காது. இதில் இரு வரை வெளியே எடுத்தால் உற்பத்தியில் குறைவு ஏற்படாது. இந்நிலையில் இவ்விரு வரும் மறைமுகமாக வேலையில்லாமல் உள்ள னர் என்பது கருத்தாகும். இவர்களைப் போன்ற பலர் குறைவிருத்தி நாடுகளில் உள்ளனர். அவர்கள் நாளாந்தம், வாராந் தம், மாதாந்தம் வேலை செய்யக்கூடிய அளவுகளிலும் பார்க்க குறைந்தளவே வேலை செய்கின்றனர்கள். மேலும் சிலர் முழுநேரம் வேலை செய்வதாகத் தோற்ற மளித்தாலும் தமது வறுமை வட்டத்தினை தாண்டக்கூடிய வகையில் வருமானம் பெறுபவர்களாகவும் இருப்பதில்லை. இதற் குள் தெருவில் கூவித்திரிந்து பொருட்களை விற்பவர்கள், பெட்டிக் கடைக்காரர், உண வுச் சாலையில் சிற்றூழியர்களாக வேலை செய்வோர்களைக் குறிப்பிடலாம்.

மறைமுக வேலையின்மையின் அளவை சரியான முறையில் கணிப்பிடுவது கடின மாக இருப்பினும் பல பொருளியலாளர் கள் அதிக சனத்தொகையுடைய நாடுகளில் விவசாயத் தொழிலாளர் படையில் 25—30 சதவீத அளவிலான மறைமுக வேலையின்மை காணப்படலாம் என்பதை ஒத்துக்கொள் கின்றனர். அத்தொகையினரை அத்துறை யில் இருந்து வெளியே எடுத்தாலும் வெளி யீடு பாதிக்கப்படமாட்டாது.

மேலும் தற்போதைய பிறப்பு வீத நிலைகளின்படி குறைவிருத்தி நாடுகளில் உழைப்பாளர் நிரம்பல் இன்னும் சில காலத் திற்கு விரிவடைந்து கொண்டு செல்லும். இவர்களுக்கு வேலை வழங்க வேண்டுமாயின் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கல் வேண்டும் மேலும் கிராமத்திலிருந்து நகரத் திற்கு குடிபெயர்வோர் காரணமாக நகரப் பகுதிகளில் வருடாந்தம் 5 — 7 சதவீதம் வரையிலான அளவுக்கு தொழிலாளர்களின் எண்ணிக்கை வளர்ச்சியடைகின்றது. இதன் காரணமாக நகரங்களில் படித்தவர்களிடை யேயான வேலையின்மை அதிகரிக்கின்றது. இதன் காரணமாக விரக்தி நிறைந்த இளை ஞர் கூட்டம் நகரப் பகுதிகளில் அதிகரிக் கின்றது.

**விவசாயத்தில் பெருமளவு தங்கியிருத்தல்**

குறைவிருத்தி நாடுகளில் வாழும் மக் களில் 70 — 80 சதவீதம் வரையிலான மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். பலர் விவசாயத்திலும் அது சார்ந்த தொழில் களிலும் ஈடுபட்டுள்ளனர். தொழில் படை யில் 66 சதவீதமானவர்கள் மூன்றும் உலக நாடுகளில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்க வளர்ச்சியடைந்த நாடுகளில் இது 21 சத வீதமாகக் காணப்படுகின்றது. அதேவேளை யில் மொத்த தேசிய வருமானத்தில் விவ சாயத்தின் பங்கு வளர்ச்சியடைந்த நாடு களில் 8 சதவீதமாகவும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் இவ்வீதம் 32 ஆகவும் உள்ளது பின்வரும் அட்டவணையில் இருந்து இது பற்றி மேலும் சில தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை 4

வேலை வாய்ப்பிலும், மொத்த தேசிய வருமானத்திலும் விவசாயத்துறை பெறும் பங்கு — 1984

| | வேலை வாய்ப்பு (சதவீதத்தில்) | மொத்த தேசிய வருமானத்தில் (சதவீதத்தில்) |
|---|---|---|
| உலகம் | 45 | — |
| குறைவிருத்தி நாடுகள் | 60 | 26 |
| வளர்ச்சியடைந்த நாடுகள் | 7 | 4 |
| ஆபிரிக்கா | 68 | 28 |
| தென்னுசியா | 63 | 37 |
| கிழக்காசியா | 51 | 23 |
| லத்தின் அமெரிக்கா | 32 | 14 |
| ஐரோப்பா | 22 | 8 |
| ரஷ்யா | 32 | 22 |
| வடஅமெரிக்கா | 5 | 3 |
| யப்பான் | 21 | 7 |

ஆதாரம்: PRB Word Development Report 1984

குறைவிருத்தி நாடுகளில் விவசாயத்துறை தவிர்ந்த ஏனைய துறைகள் நன்கு வளர்ச்யடையாமையால் மிதமிஞ்சிய மக்கள் விவசாயத்துறையில் தங்கியிருக்க வேண்டி உள்ளனர். கடந்த சில தசாப்தங்களாக சனத்தொகை இந்நாடுகளில் அதிகரித்தாலும் நிலத்தின் மீதான சனத்தொகையின் அழுத்தம் கூடுதலாக உள்ளது. இதனுல் தொழிலாளர் நிலவிகிதம் உயர்வாகி உள்ளதுடன் நிலங்களும் துண்டாடப்பட நவீன பயிர்ச் செய்கை முறைகளைக் கையாளமுடியாத நிலை ஏற்படுகின்றது. குறைந்த வருமானமுடைய மக்களின் முதல் தெரிவு, உணவு, உடை, உறையுள் என்பதனுல் அந்நாடுகளில் விவசாயத்துறை முக்கியம் பெறுவதாக உள்ளது.

குறைவிருத்தி நாடுகளில் விவசாயத்துறையில கையாளப்படும் தொழில்நுட்ப முறைகள் பாரம்பரியமற்றதாக இருத்தல், குறைந்தளவு முதல் பாவனை, உற்பத்தி முறைகளை ஒழுங்குபடுத்துவதில் திறமையின்மை, சிற்றுடமை நிலங்கள், குத்தகை முறையில் உள்ள குறைபாடுகள், போதிய நீர்ப்பாசன வசதியின்மை, விவசாயிகளுக்குப் போதிய அறிவின்மை, உரப்பற்றுக்குறை கிருமிநாசினிப் பாவனைக் குறைவு, சந்தைப்படுத்தலில் உள்ள குறைபாடுகள் போன்ற பல்வேறு காரணிகளால் அங்கு ஹெக்டேயருக்கு விளைச்சல் குறைவாக உள்ளது.

மூன்றும் உலக நாடுகளில் வர்த்தக நோக்கத்துடன் உற்பத்தியில் ஈடுபடாத குடியானவர்கள் பெரும்பாலும் விவசாயத்துறையில் உள்ளமையே பாரம்பரிய தொழில நுட்பத்தினை அவர்கள் கூடுதலாகப் பின்பற்றுவதற்கான காரணமாக உள்ளது. மேலும் பல வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் சராசரி உடமையின் அளவு 1 தொடக்கம் 3 ஹெக்டேயர்களாகும். இந்நிலத்துண்டுகள் 10—15 பேர் வரையிலானவர்களுக்கு உணவினை நல்க வேண்டியுள்ளது. அண்மைக் காலங்களில்

வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் விவசாயத்தில் நவீன முறைகளைக் கையாண்டதால் விவசாயத்துறையின் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளதெனினும் வளர்ச்சியடைந்த நாடுகளின் விளைச்சலுடன் ஒப்பிடும் போது ஏக்கருக்குரிய விளைச்சல் இன்னும் குறைவாகவே உள்ளது. பின்வரும் அட்டவணையிலிருந்து இதனை தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை 9

ஹெக்டேயர் ஒன்றிற்கு சராசரி தானிய விளைச்சல் 1983 — 85
(கிலோகிராமில்)

| நாடுகள் | விளைச்சல் |
|---|---|
| நைஜீரியா | 719 |
| எதியோப்பியா | 1128 |
| சிலி | 2666 |
| வங்காளதேசம் | 2215 |
| இந்தியா | 1566 |
| யப்பான் | 5705 |
| அமெரிக்கா | 4279 |
| சுவிற்சலாந்து | 5644 |
| ஐக்கியராச்சியம் | 5856 |
| பிரான்ஸ் | 5550 |

ஆதாரம்: U. N. Food and Agriculture Organization

அதிகரித்துவரும் சனத்தொகைக்கு உணவளிப்பதற்கு குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தி நோக்கங்களில் தானிய விளைச்சலை அதிகரித்தல் என்பதற்கு கூடிய முக்கியத்துவம் வழங்கவேண்டி உள்ளது.

### ஏற்றுமதியில் தங்கியிருத்தல்:

பல குறைவிருத்தி நாடுகள் முதல் விளைவுப் பொருட்களை பெருமளவு உற்பத்தி செய்து அவற்றை ஏற்றுமதி செய்வனவாக உள்ளன. நுகர்வுப் பொருட்களையும் இயந்திரங்களையும் இறக்குமதி செய்வனவாக உள்ளன. முதல் விளைவுப் பொருட்களே அவற்றின் ஏற்றுமதியில் பெரும் பங்கு பெறுகின்றன. 1980 ஆம் ஆண்டளவில் சகல மூன்றும் உலக நாடுகளின் மொத்த ஏற்றுமதியில் உணவு மூலப் பொருட்கள், எரிபொருள், அடிப்படை உலோகங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி 80 சதவீதமான பங்கினைப் பெற்றிருந்தன. பல குறைவிருத்தி நாடுகள் ஒருசில பொருட்களின் ஏற்றுமதி மூலம் தமது அந்நிய செலாவணியில் பெரும் பகுதியினைப் பெறும் நிலையும் காணப்படுகின்றது. இதனை பின்வரும் அட்டவணையிலிருந்து கண்டுகொள்ளலாம்.

அட்டவணை 10

நாடுகள் வாரியாக மொத்த ஏற்றுமதியில் விவசாயப் பொருட்களினதும் மூலப் பொருட்களினதும் பங்கு (சதவீதம்).

| காலம் | நாடுகள் | பொருட்கள் | ஏற்றுமதி |
|---|---|---|---|
| 1977 | பிறேசில் | கோப்பி, சோயாபீன், சீனி | 39·4 |
| 1976 | பர்மா | அரிசி; தேக்குமரம், எண்ணெய் விதைகள் | 85·7 |
| 1976 | மலேசியா | இறப்பர், தகரம், மரம், தாவர எண்ணெய் | 61·1 |
| 1976 | நைஜீரியா | மசகு எண்ணெய், கொக்கோ | 96‘8 |
| 1977 | பிலிப்பைன்ஸ் | சீனி, தெங்குப்பொருட்கள், செம்பு, மரம் | 56·4 |
| 1976 | உகண்டா | கோப்பி, பருத்தி | 89·1 |
| 1977 | யமேக்கா | அலுமினியம், சீனி, பொக்சைட் | 77.9 |

ஒருசில குறைவிருத்தி நாடுகள் மட்டும் பெற்ரோலியத்தை ஏற்றுமதி செய்வனவாகவும் பெறுமதி வாய்ந்த கனிப்பொருள் வளங்களை ஏற்றுமதி செய்வனவாகவும் உள்ளன.

முதல் விளைவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் பல பிரச்சனைகளை எதிர்நோக்குவது மட்டுமல்லாமல் சர்வதேச வர்த்தகத்தில் அவை பெறும் பங்கு குறைந்துகொண்டு செல்லுகிறது. உதாரணமாக 1950 இல் எண்ணெய் உற்பத்தி செய்யாத வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் பெற்ற பங்கு 33 சதவீதமாகும். இப்பங்கு ஒவ்வொரு வருடமும் குறைந்து கொண்டு வந்து 1980 இல் இதன் அளவு 20 சதவீதமாக அமைந்தது. ஆனால் இதே காலப்பகுதியில் சர்வதேச வர்த்தகத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் பெற்றபங்கு 60 சதவீதத்திலிருந்து 72 சதவீதமாக அதிகரித்தது. அதே வேளையில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் தமக்கிடையே செய்துவந்த வர்த்தகத்தின் அளவும் அதேகாலப் பகுதியில் 28 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக குறைந்து விட்டது. இதன் காரணமாக வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் தொடர்ந்து வளர்ச்சியடைந்த நாடுகளில் தங்கியிருக்கவேண்டிய நிலையில் உள்ளன.

ஒரு சில பொருட்களின் ஏற்றுமதியில் அதிகளவு தங்கியிருத்தலும் பல குறைபாடான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஒரு சில பொருட்களின் உற்பத்தியில் மட்டும் கவனத்தினைச் செலுத்தி ஏனைய துறைகளை கவனிக்காமல் விட்டமை ஒரு குறைபாடாகும். சர்வதேச சந்தையில் ஏற்படும் விலைத் தளம்பல்களால் பொருளாதாரத்தில் வேலை மட்டம், விலைமட்டம், சென்மதி நிலுவை பொருளாதார வளர்ச்சி ஆகிய பேரினப் பொருளாதார மாறிகளின் மீது பாதக விளைவுகள் ஏற்படுதல் அடுத்த குறைபாடாகும். குறைவிருத்தி நாடுகளின் சர்வதேச வர்த்தக மாற்று விகிதம் குறைந்து செல்லும் நிலமை நீண்ட காலமாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு தீமையளிக்கும் விடயமாக உள்ளது.

மேலும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் துறைகளில் வெளிநாட்டு முதலீடுகள் முக்கிய பங்கைப் பெறுகின்றன. இத்தகைய முதலீடுகள் ஏற்றுமதித் துறை சார்ந்த துணைத் தொழில்களையும் கட்டுபடுத்துகின்றன. இதனால் வெளிநாட்டாரின் ஆதிக்கம் பல்தேசிய கூட்டுத் தாபனம் ஊடாக ஒரு வகை தனியுரிமை நிலையுடன் பெற்ரோலியம். பெருந்தோட்டம், சில கனிப்பொருட்கள், சுரங்கங்கள் போன்றவற்றில் குறைவிருத்தி நாடுகளில் காணப்படுகின்றது. அதிகளவு வெளிநாட்டு முதலீடு வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் மூல வளங்களை சுரண்டுகின்றது.

## பொருளாதார இரட்டைத் தன்மை.

பல குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார இரட்டைத் தன்மை நிலவுவதைக் காணலாம். ஒரு துறை சந்தைப் பொருளாதாரமாகவும் மறுதுறை பிழைப்பூதியப் பொருளாதாரமாகவும் காணப்படுகின்றன. ஒன்று விருத்தியடைந்த துறையாகவும் மற்றது விருத்தியடையாத துறையாகவும் காணப்படுகின்றது. ஒரு துறை நகரப்புறத்தையும் அதன் அண்டிய பகுதிகளிலும் காணப்படுவதாகவும் மற்றத்துறை கிராமியப் பகுதிகளில் காணப்படுவதாகவும் உள்ளது. நகரத்துறை பல்வேறு நவீன வசதி வசதிகளைக் கொண்டதாக இருக்கும். அங்கு நவீன உலக வர்த்தகர்கள், வைத்தியர்கள், சட்ட நிபுணர்கள், வைத்தியசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகள், திரைப்பட அரங்குகள், அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள் போன்றன பெருமளவு காணப்பட கிராமியப் பகுதிகளில் இத்தகைய வசதிகள் குறைவாகக் காணப்படும்.

மேலும் பல குறைவிருத்தி நாடுகளில் வெளிநாட்டினர் முதலீடு செய்துள்ள தனிப்பட்ட நிலப்பகுதிகள் காணப்படுவதும் இன்னொரு பண்பாக அமைகின்றது. இதனால் சிலவற்றில் மூன்று தன்மையுடைய பொருளாதார அமைப்புகளையும் காணலாம். அத்தகைய பகுதிகளில் அதிகளவு முதலீடு செய்யப்பட்டிருக்கும். பெற்றோலியம், சுரங்கம், பெருந்தோட்டம் ஆகியவற்றில் இத்தகைய முதலீடுகளைக் காணலாம். மேற்காசியாவில் பெற்றோலியத்திலும் பொலிவியாவில் தகரத்திலும், தென் ஆபிரிக்காவில் தங்கத்திலும் மலேசியாவில் றப்பர்தோட்டங்களிலும் இத்தகைய முதலீடுகளைக் காணலாம். இவற்றில் வேலை செய்யும் சுதேசிய தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களில் தமது வருமானத்தில் பெரும் பகுதியை செலவு செய்கின்றனர். இவர்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் வேறுபாடு உண்டு. வெளிநாட்டு முதலீடுகள் பெறும் இலாபம் வெளிநாடுகளுக்கே பெருமளவு செல்வதால் குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார விருத்திக்கு இத்தகைய முதலீடுகள் உதவி செய்வதாக இல்லை.

மேலும் நாம் பார்த்தவற்றில் இருந்து வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளின் தரத்தினை பெற பல ஆண்டுகள் செல்லும் என்றே கூறுதல் வேண்டும். அந்நிலைவரும் வரைக்கும் இந் நாடுகள் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் என்றே நீண்ட காலத்திற்கு அழைக்கப்படக் கூடுமெனலாம்.

## பேதப்படுத்தப்பட்ட கூலி 1987
## (ரூபாவில்)

| விடயம் | ஆண் | பெண் |
|---|---|---|
| **நெல்** | | |
| நாற்றுநடுதல் | 42.33 | 32.99 |
| களை நீக்கல் | 38.80 | 31.87 |
| அறுவடை | 43.68 | 33.23 |
| பதர் நீக்கல் | 44.81 | 32.98 |
| **தென்னை** | | |
| நடுதல் | 42.40 | 31.00 |
| உரமிடுதல் | 42.10 | 31,77 |
| தேங்காய் சேகரித்தல் | 37.66 | 29.22 |
| **தேயிலை** | | |
| நடுதல் | 35.61 | 35.28 |
| களை நீக்கல் | 32.69 | 26.97 |
| தளிர் கொய்தல் | 31.69 | 26.38 |
| **றப்பர்** | | |
| படர் கொடி நடுதல் | 36.97 | 29,27 |
| பால் எடுத்தல் | 34.46 | 31.15 |

ஆதாரம் : நாடளாவிய தரவு சேகரிக்கும் முறைமை
இலங்கை மத்திய வங்கி

# இலங்கையின் தற்காலப் பொருளியல் வரலாற்றிற்கு ஓர் அறிமுகம்

கலாநிதி ஐ. எச். வன்டன்டிரிசன்

### தோற்றுவாய்

இலங்கையில் பொருளியல் வரலாறு இன்னும் எழுதப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது; அதாவது பூர்வீககாலம் முதல் இக்காலம் வரையிலுள்ள பொருளியல் வளர்ச்சியைத் தொடர்ச்சியாக அடங்கிய முறையில் இனித்தான் எழுதவேண்டும். என்றுலும் எண்ணற்ற மாணவர்கள் கடந்த அரை நூற்ருண்டாக நிகழ்த்திய ஆராய்ச்சியின் விளைவாக பயனுள்ள கட்டுரைகள் பல கைவசம் இருக்கின்றன. எனவே தற்கால பொருளியல் வரலாற்றின் படத்தை ஒரளவுக்குத் தீட்டமுடியும். படந்தீட்டவேண்டிய திரை பெரிதாகவும் தூரிகையின் கோடுகள் அகன்றனவாகவும் பரீக்ஷார்த்தமானவையாகவும் இருக்கும் என்பது உண்மையே. எனினும் இலங்கையின் பொருளியல் வளர்ச்சியின் பொதுப் போக்குகளை கணிசமான அளவுக்குச் சரியாகத் தீட்டுவதற்கு இவை போதுமானவையாகத் தெரிகின்றன.

### பொருளியல் வரலாற்றில் தற்கால ஆரம்பம்:

அரசியல் வரலாற்றின் கால வரையறைகள் ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், பிரித்தானியர் காலங்கள் என்ற பிரிவுகள் — பொருளியல் வளர்ச்சியின் போக்கோடு தொடர்பற்றவையென்ற உண்மை முதல் நோக்கிலேயே புலனுகின்றது. அரசியல்வரலாற்ருசிரியன் மேனுட்டாட்சியின் தொடக்கத்தையே தற்காலத்தின் தொடக்கமாகக் கொண்டுள்ளான். பொருளியல் நிகழ்ச்சிகளைத் திரட்டும் பொருளியல் வரலாற்ருசிரியரில் மிகச்சிலரே இதனை ஒப்புவர். பயனுறுதியுள்ள போத்துக்கேயரதோ, ஒல்லாந்தரதோ ஆட்சி மேற்குக் கரையிலிருந்து இருபது மைலுக்கு அப்பாற்படவில்லை என்றே கூறவேண்டும். (சன நெருக்கமும் விவசாய வளர்ச்சியு மற்றதும் அற்ப மழையுடையதுமாகிய கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தைத் தவிர்த்து) இக்குறுகிய எல்லையுள்ளும், தாம் வந்தபோதிருந்த அரசியலமைப்பைப் பாரதூரமான மாற்றமோ தலையீடோ இல்லாது தொடர்ந்து இயங்கிவிட்டனர். பழைய மானிய முறைப் பொருளாதார அமைப்பு பெரும்பாலும் மாற்றப்படாமலே இருந்தது. எனவே பொருளாதாரத்தைப் பொறுத்த மட்டில் 1505-ம் ஆண்டுக்கும் 1796-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியும் மத்திய காலப் பொருளியல் வரலாற்றைச் சேர்ந்ததாகும்.

பிரித்தானியர் ஆட்சியின் முதற் சில ஆண்டுகளுக்கு நிர்வாகிகள் தமக்கு முந்திய போர்த்துக்கேயரையும் ஒல்லாந்தரையும் போலக் கரையோரப் பிரதேசங்களில் வருமானத்தை ஈட்டுவதும், வரிக்குத்தகை விடுதலுமே செய்தனர். அவர்கள் புகுத்திய

நன்றி: சமூக மஞ்சரி, மலர் 1 இதழ் 2 1960

சித்திவிநாயகர் நூல் நிலையம்
எழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் : 18-8-85)



மாற்றங்கள் பெரும்பாலும் நிருவாக ஒழுங்கையும் நியதியையும் பற்றியனவே. அம் மாற்றங்கள் அரசாங்கத்தின் நோக்கத்தையோ பொருளாதாரக் கொள்கையையோ பாதிக்கவில்லை. 1815-ம் ஆண்டில் பிரித்தானிய ஆதிக்கம் இத்தீவு முழுவதையும் அடக்கிப் பரந்தபோதும்கூட அடிப்படையான மாற்றங்கள் எவையும் உடனடியாகக் கொண்டுவரவில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இரண்டாம் பத்தாண்டின் முடிவளவிலுங்கூட இலங்கையின் பொருளாதார அடிப்படை பெரும்பாலும் மானிய முறையினதாகவே திகழ்ந்தது.

**பெருந்தோட்ட பயிர்ச் செய்கையும் முதலாளித்துவமும் :**

இந்தச் சூழலிலேதான் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை புரட்சிகரமான சடுதியுடன் தோன்றிற்று. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை புதிய முறையான பொருளாதாரப் பழக்கங்களையும், அக்காலத்திருந்த பொருளாதார அமைப்பிற்குப்புதிதான பல கருத்துக்களையும் கொண்டுவந்து, அதுவரை நிலைத்திருந்த அமைப்பின் அடித்தளங்களையும் விரைவில் அரித்தது. முதலாளித்துவம் வந்துவிட்டது. முதலாளித்துவத்தின் வருகையுடனேயே இலங்கையின் தற்காலப் பொருளியல் வரலாறு தொடங்குகின்றது. பழைய தொழில்களின் முக்கியத்துவத்தை வேகமுள்ள வர்த்தக விவசாயம் கைப்பற்றியது. சில ஆண்டுகளுக்குள் அரசாங்கத்தின் வருமானத்தில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கிற்குக் கோப்பி வகை கூறியது. அதன் பயனுக அது அரசின் சலுகைகள் பெறக்கூடிய நிலையிலிருந்தது. இதனை அடுத்த ஆண்டுகளில் பெருந்தோட்டக்காரரின் பிரச்சினைகள் நாட்டின் பிரச்சினைகளாகக் கருதப்பட்டன இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சிக்கு அரசாங்கம் உற்சாகமான ஆதரவு கொடுத்தது. இம்முயற்சியில் பழையன பல கழிக்கப்பட்டு புதியன பல திடுக்கிடும் சடுதியுடன் புகுத்தப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் பெரும் பகுதியில் இலங்கை கோப்பி பயிரிடுவோரது தாளத்துக்கு ஆடியது. இப்போக்கிலே புதிய பொருளாதார அமைப்பொன்று மெதுவாக வளரத்தொடங்கிற்று. ஆக்கக் காரணிகளாகிய நிலம் தொழில் மூலதனம் என்பன புதிய கருத்துப்பெற்றன : முன்னெருபோதுமில்லாத வீதிகள், புகைவண்டிப் பாதைகள், துறைமுகங்கள் பல தோன்றின; அரசியல் நிகழ்ச்சிகளுக்குப் புதிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது: தற்கால முயற்சியில் வகுப்புப் பேதம் வளரத் தொடங்கிற்று. இவ்வளர்ச்சிகளுடன், ஒரு பணப் பொருளாதாரம் தோன்றிற்று. விலை, ஆதாயம் கூலி, வாடகை, கொடுகடன் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்ச்சியைக் கொண்டு வந்தது; அத்தோடு இலங்கை மக்கள் முன்னெருபோதும் கண்டிராத பல வகைப்பட்ட சமூகப் பொருளியல் நிகழ்ச்சிகளைத் தொடக்கிற்று. வியாபாரச் சகடவோட்டம் (Trade Cycle) இத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்ருகும். இதுவரையில் வியாபாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு வரட்சி, பிணி போர் ஆகியனவே காரணங்களாகக் கருதப்பட்ட இந்த நாட்டில் இத்தகைய சகடவோட்டம் முதலில் 1846-ம் ஆண்டுக்கும் 1849-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தோன்றியது. இச்சகடவோட்டத்தின் அகர்த்தீகத்தன்மையும், மனிதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற் பட்டது போன்ற தோற்றமும் பயங்கரமானதும், புதியதுமானதொரு அனுபவமாகவிருந்தது.

மெதுவான, இருப்பினும் மாற்றமுடியாத உக்கிரத்துடன் புதிய சக்திகள் அக்காலத்தில் இருந்த பொருளாதார ஒழுங்கின் அடித்தளங்களை அரித்தன. புதியவற்றை ஏந்திவரும் கருவியான கோப்பிப் பயிர்ச் செய்கை பத்தொன்பதாம் நூற்றுண்டின் வளர்ச்சியோடு ஏக்கர் ஏக்கராக நிலத்தை விழுங்கியது. 1875-ம் ஆண்டளவில் முதலாளித்துவம் இலங்கையில் பலமாக வேரூன்றிவிட்டதென்பதில் ஐயமில்லை. இதற்குப்பின் பத்து ஆண்டுகளுக்குள் "கோப்பி மன்னன்" னது ஆட்சி, ஒரு நோயின் பாதகமான பரவுதலினுல் முறிவடைந்தது உண்மையே என்ருலும் அம்மன்னன் தனது மரணப் படுக்கையில் இருந்தபோதும், தன் அமைத்த பொருளாதார நிலை நின்று நிலைக்கும் என்ற எண்ணத்தில் பெருமை அடையக்கூடியனவாக இருந்தான்: ஏனெனில் கோப்பிப் பயிர்ச் செய்கையின் முடிவு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் முடிவுக்கு

ஏதுவாகவில்லை. முதலாளித்துவத்தின் வளர்ச்சிப்பாதை மிகப்பலமாக வேரூன்றி விட்டதனுல், கோப்பிக்குப் பதிலாக பிறிதொரு வியாபாரப் பயிரைப் புகுத்திய தொன்றே அதனை நிலை நிற்கச் செய்வதற்குப் போதுமானதாக இருந்தது. புதிய பயிர், தனக்கு முன்னிருந்த பயிர் ஆக்கிய அமைப்பை அப்படியே ஏற்றுக்கொண்டது. இதனை அடுத்த ஆண்டுகளில்— ஏன் இக்காலம்வரை—பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை இலங்கையின் பொருளியல் விருத்திப் பாதையை நிர்ணயிக்கும் முக்கிய சக்தியாகத் திகழ்ந்தது.

இதுவே தற்காலப் பொருளியல் வரலாற்றின் பருமட்டத் திட்டக் குறிப்பு. எனினும் பொருள்யல் வரலாற்றின் பொதுப் போக்குகளை மட்டுமே காட்டுவதற்குக் கூட இதற்கு மேலும் பல விவரங்களைச் சேர்க்க வேண்டும். இப்படம் போதுமானதாயிருப்தாயின் கோப்பிப் பயிர்ச் செய்கை சடுதியாக வந்ததற்குரிய காரணங்களை விளக்கி, இதன் விளைவுகள் எவ்வெவ் வழிகளிற்சென்று பழைய மானிய முறை அமைப்பைத் தகர்த்தன என்பதையும் சுட்டி, இந்நாட்டு மக்களுக்கு இதனுல் உண்டான பலாபலன்களையும் காட்ட வேண்டும்.

**கோப்பிப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சி:**

நல்ல காலமாக நாம் இதனைச் செய்ய முடியும். 1834-ம் ஆண்டுக்கு முன்னர் கோப்பிப் பயிர்ச்செய்கை இலங்கைக்குத் தெரியாததொன்று அல்ல. என்ருலும் அப்போது கோப்பி உழவர்களது வீடுகளைச் சுற்றியிருந்த தோட்டங்களில் ஒழுங்கற்ற முறையிற் பயிரிடப்பட்ட முக்கியமற்ற சிறு பயிராகவே இருந்தது. இதன் விளைவு ஆண்டுக்குச் சில ஆயிரம் அந்தர்களே. இந்த விளைவிற் பாரதூரமான மாற்றமேதும் ஏற்படும் என எதிர் பார்ப்பதற்கு ஏது இருக்கவில்லை. இந்நாட்டிலிருந்த வர்த்தக நோக்குள்ள ஆங்கிலேய வர்த்தகர்களுக்குக்கூடச் சிறந்த கோப்பிப் பயிர்ச்செய்கை முறைகள் தெரிந்திருக்கவில்லை. வெளிநாட்டிற் கோப்பிக்கு இருந்த கேள்வி விருத்தியைத் தூண்டக்கூடிய அளவில் இருக்கவில்லை; மேற்கிந்தியாவின் பலத்த செல்வாக்கின் காரணமாக அதனது அடிமைகள் வேலை செய்த தோட்டங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோப்பியின்மீது பிரித்தானியா குறைந்த சுங்க இறைகளையே விதித்தது. இதனைவிட இருண்டதொரு சூழ்நிலை இருந்திருக்க முடியாது.

இருந்தும், மூன்று ஆண்டுகளில்—அதாவது 1837-ம் ஆண்டளவில் கோப்பிப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சியை மட்டுப்படுத்திய தடைகள் நீக்கப்பட்டன. இங்கு குடியேறிய ஆங்கிலேயரில் ஒருவரான R. B. றைற்லர் (R. B. Tytler) என்பவர் ஜமெய்க்காவிற் கையாளப்படும் சிறந்த கோப்பிப் பயிர்ச் செய்கை முறைகளைப் பற்றிய அறிவை இலங்கைக்குக் கொண்டுவந்தார்; இப்பானத்துக்கான உலகக் கேள்வி பிரமாண்டமான அளவிற் பெருத்தது; இலங்கைக் கோப்பியின் மீதும் மேற்கிந்தியக் கோப்பியின் மீதுமிருந்த இறக்குமதிச் சுங்க இறைகளைப் பிரித்தானிய அரசினர் சமமாக்கினர்; ஜமெய்க்கா, டொமினிக்கா, கியானு ஆகிய இடங்களில் அடிமை முறை நீக்கப்பட்டது, அங்கிருந்த கோப்பித் தொழிலுக்குப் பாதகமானதாக இருந்தது. பரந்து பெருகுஞ் சந்தையும், சுருங்கும் போட்டியும் புதிய பயிர்ச்செய்கை முறைகள் புகுத்தப்பட்டமையும், பெரும்படியான கோப்பிச் பயிர்ச் செய்கையில் மக்கள் ஊக்கங்கொள்ளும்படி செய்தன. முதலீடு செய்வோர் பிற நாடுகளிலிருந்து இங்கு வந்து குவிந்தனர்; இவர்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருந்தது. 1840-ம் ஆண்டளவில் ''கோப்பிக் காய்ச்சல்'' உண்டாகிவிட்டது, என்று சொல்லுமளவுக்கு இவர்களது எண்ணிக்கை பெருகிவிட்டது.

**மத்தியகாலப் பொருளாதார அமைப்பின் தேய்வு:**

வரலாற்றின் இந்தக் கட்டத்திலிருந்துதான் மத்திய காலம் பொருளாதார அமைப்பின் தேய்வு மிகவும் தெளிவாகின்றது. புதிய தலைமுறையைச் சேர்ந்த பெருந்தோட்டக்காரரைப் பல பிரச்சினைகள் எதிர்நோக்கிநின்றன. இப்பிரச்சனைகளுக்கு தீர்வு

காண்பது அவர்களது முதலீடுகளின் நலனுக்கு அவசியம் வேண்டியதாக இருந்தது. நில ஆட்சி முறையிலிருந்த சிக்கல்கள், அரசாங்கத்தின் நில விற்பனைக் கொள்கையிலிருந்த குறைபாடுகளினூற் பிறந்த நிலப் பஞ்சம். கூலிவேலைக் குறைபாடு, வீதிகளின்மை, புகைவண்டிப் பாதைகளின்மை, புதுக்குடியேற்ற நாட்டில் முதலீடு செய்வதில் முதலாளிமாருக்கிருந்த தயக்கம், ஆகிய பிரச்சினைகளுக்குப் பெருந் தோட்டமுடையவர் தீர்வுகள் காணவேண்டியவராயினர். அவர்கள் எல்லோரும் சிறிய முதலீடு செய்யும் செல்வ வளம் குறைந்தவர்களாதலால், விரைவான வெற்றிக்கன்றி வேறெதற்கும் ஒப்ப மாட்டார்கள். பயமுறுத்திக்கொண்டிருக்கும் முறிவு காரணமாய் பிறந்த உக்கிர உணர்ச்சியால் இவர்கள் தங்கள் வேலைகளைச் செய்வதில் உக்கிரமான உற்சாகத்துடன்—சில வேலைகளில் மூர்க்கத் தனத்துடன்—கவனஞ் செலுத்தினர். ஆதாயம் உண்டாக்கும் குறிக்கோளை நோக்கி அவர்கள் மேற்கொண்ட முயற்சியாலேயே அவர்கள் இத் தீவினது பொருளாதாரத்தின் தன்மையையும் மாற்றினர்.

**நிலப் பிரச்சனை:**

பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைச் சமூகத்தினரின் முயற்சிகள் முதலில் நிலக் கோரிக்கையிலேயே பிரதிபலித்தன. கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலமும் தட்ப வெப்ப நிலையும் புதிதாகக் கைப்பற்றப்பட்ட பழைய கண்டி அரசு நிலப் பகுதியிலேயே காணப்பட்டன. இப் பகுதிகளிலேயே நிலக் கோரிக்கை மிகப் பலமாக இருந்தது. இப் பகுதிகளிலேயே பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையாளர் வெகு விரைவில் பழைய முறைகளுக்கு முரண்பட்ட நிலைக்கு வந்தனர். கண்டி ஆட்சியாளரின் கீழ், காடுகளிற் பருவத்துக்குப் பருவம் பயிரிடும் உரிமை மக்களுக்கு இருந்தது. இந்த முறையான பயிர்ச் செய்கை "சேனைப் பயிர்ச் செய்கை" எனப்படும். கண்டிப் பகுதிகளிற் சேனைப் பயிர்ச்செய்கை என்பதின் பொருள் ஏனைய பாகங்களிலிருந்த பொருளினின்றும் வேறுபட்டது. முன்னர் போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் ஆளப்பட்ட ஏனைய பகுதிகளில் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமில்லாத நிலங்கள் யாவும் முடியின் உடைமைகள் என்று கருதப்பட்டன. எல்லாக் காடுகளும் முடியின் ஏக போகக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை யென்பதும் ஒத்துக் கொள்ளப்பட்டது. கண்டிப் பகுதிகளிலோ, 'சேனைகள்'-சட்டப்படி தனிப்பட்ட உழவரது உடைமைகளாகக் கருதப்படாத போதிலும் வழக்கின் பெயரால் அவன் பருவந்தோறும் அந்நிலத்தைப் பயிரிட்டான். பெருந் தோட்டக்காரர் இந்த நிலத்தின் மீது தமது கவனத்தைச் செலுத்தினர். கோப்பிப் பயிர்ச் செய்கை பல்கிப் பெருகத்தொடங்கியகாலை அது வரை முடிக்குரியது என்று அரசாங்கம் கருதிய நிலத்தின் பெரும் பகுதியைக் கண்டி மக்கள் தமது சேனைகள் என்று உரிமை கொண்டாடியமையை உணர்ந்தனர். இந்த நிலை, இளமையானதும் நற்பலன்களைக் கொடுக்கக் கூடியது மான கோப்பிப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதை உணர்ந்த தேசாதிபதி ஸ்ருவாற் மக்கென்ஸி (Stewart Mackenzie) வழக்கின் பெயராற் கொண்டாடப்பட்ட உரிமைகளை மறுக்கும்படியும், முன்னர் எப்போதாவது அரசாங்கத்தாற் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப் படாத நிலத்தின் மீது முடிக்கு முற்றுன உரிமை உண்டென்று பிரகடனஞ் செய்யும்படியும் குடியேற்ற நாட்டிற்குரிய அரசுக் காரியதரிசியைத் தூண்டினூர். குடியேற்ற நாட்டு அலுவலகம் முதலில் இவ்வாறு செய்யத்தயங்கினூலும் நெடுங்காலம் இத் தூண்டுதலை எதிர்க்கவில்லை. "கோப்பிக் காய்ச்சல் உச்சத்திலிருந்த போது, பிரகடனஞ் செய்யப்பட்ட 1841-ம் ஆண்டின் 9-ம் இலக்க விதி (Ordinance 9 of 1841) உழவர்கள், தமது சேனை நிலங்களுக்குச் சட்ட பூர்வமான உறுதிகள் காட்ட வேண்டும் என்று கோரியது. இதனூலேற்பட்ட கண்டி மக்களின் இன்னல் பலாத்காரத்துக்கு ஏதுவாயிற்றெனினும், ஒழுங்கை நிலை நிறுத்த அழைக்கப்பட்ட படைகள் பலவந்தமாக மக்களை இப் புதுச் சட்டத்தை ஏற்கும்படி செய்தன. மானியமுறைப் பொருளாதாரத்தின் மீது வர்த்தக விவசாயம் ஏற்படுத்திய தாக்கலின் தடுக்க முடியாத விளைவு என்றே ஒருவர் இந்த நிகழ்ச்சிகளைக் கருத முடியும். இது நிலத்தைப் பயன்படுத்தும் காரணத்தில் ஏற்பட்ட மாற்றத்தை—அதாவது, உணவுப் பயிர்களை விடுத்து வர்த்தகப் பயிர்களை விளைவித்தமையை—நன்கு பிரதி

பலிக்கின்றது. கோப்பி பயிரிடுவோர் கவலைப் பட்டது பிழைப்பூதியத்தைப் பற்றியல்ல; இலாபத்தைப் பற்றியே. பெருங் கூறுகளைப் பற்றியேயல்லாது சிறியவற்றைப் பற்றியல்ல. எல்லாவற்றிற்கும் மேலாகச் சட்ட பூர்வமான உடமையைப் பற்றியே கவலைப்பட்டனர். இக் கால முறையின்படி தன்னுடமையில்லாத நிலத்தில் முறை மாற்றும் பயிர்ச் செய்கையை மேற் கொண்டதும், நிலத்தைச் சிக்கனமற்ற முறையில் பயன் படுத்துவதுமானதொரு மானிய முறைச் சமுதாயத்தின் மீது இத்தகைய அந்நியக் கருத்துக்களைப் புகுத்தியமை பல மோதல்களுக்கு ஏதுவாயிற்று. இத்தகைய இன்னல்கள், முன்னர் இந்தியாவிலிருந்ததெனவும், இப்பொழுதும் கிழக்காபிரிக்காவில் இருப்பனவுமாகிய இன்னல்களை ஒத்திருக்கின்றன. எனவே கோப்பித் தொழில் இலங்கையில் உண்டாக்கிய நிலப் பிரச்சினை நூதனமானதன்று; குடியேற்ற நாடுகளின் வரலாற்றில் சாதாரணமாகக் காணப்படுவதொன்றாகும்.

**இந்தியத் தொழிலாளர் பிரச்சினை:**

கோப்பி பயிரிட்டவனுக்கு அவசியம் தேவைப்பட்ட தொழிலாளரைக் கொடுப்பதற்காக வளர்ச்சியற்ற பொருளாதார முறை உழவர்களை நிலத்துடன் பிணைத்த தளையைத் தானுகவே அறுக்க முடியாதிருந்தது இயல்பே. பழைய ஊழிய வேலை முறை 1833 இல் ஒழிக்கப்பட்டது, என்றுலும் எதிர்பார்த்த கட்டில்லாச் சந்தை (Free Market) ஏற்படவில்லை. காசுத் தத்துவத்தைப் பற்றிக் கவலை கொள்ளாத உழவன் தனது சிறிய நிலத்தில் தொடர்ந்து பயிர் செய்து வந்தான். கூலி கொடுப்போரது கூவுதலுக்கு அவன் செவி மடுக்கவில்லை. இத்தகைய நிகழ்ச்சி எதிர்பார்க்கப்படவில்லை. சிங்கள மக்கள் தமது நிலைமையைச் சீர்படுத்துவதற்காகத் தமது சேவையைக் கூலிக்கு விற்பார்கள் என்ற எண்ணத்தைப் பிரித்தானிய அதிகாரிகள் கொண்டிருந்தனர். இந்தக் கருத்து தனி மனிதர் பொருளாதார அமைப்புள்ள சமூகத்தின் அடை (அனுபவம்) விலிருந்து எழுந்தது. பழைய இலங்கையின் சமூகப் பின்னலின் அமைப்பும் நெறி முறையின் சேர்க்கையும் பணம் சேர்ப்பதற்காகத் தனிப்பட்டவர்கள் முயலுவதறகு ஊக்கமளிப்பனவல்ல. உணவு, உடைத் தேவைகளுக்கு அதிகமான செல்வத்தை அவர்கள் என்ன செய்ய முடியும்.

பழைய பொருளாதார முறையை முறிப்பதற்கு அவசியமான ''பணத்தொடர் புமுறை'' (Cash Nexus) உண்டாவதற்குப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை மேலும் வளர்ச்சியடைய வேண்டியிருந்தது. எனவே பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளன் கூலி வேலையாட்களுக்குப் பிறநாடுகளை நோக்கக் கடமைப்பட்டவனுயினுன். நல்லகாலமாகக் கூலிக்கு வேலைசெய்யும் முறைக்குமாறுன தடைகளற்ற அயல்நாடான இந்தியாவில் வேண்டியளவு மலிவான கூலியாளர் இருந்தனர். தாய்நாட்டில் பொருளாதார நிலைகெட்டது. இலங்கையின் கவர்ச்சியான கூலி, பெருந்தோட்டங்களிலிருந்த உழைப்புறுதி ஆகிய இன்னேரன்ன காரணங்களால் தூண்டப்பட்ட இந்தியக் கூலிகள் கோப்பி ஊழியின் தொடக்கத்திற் பெருந்தொகையாக வந்து சேர்ந்தனர். அதிவிரைவில் இப்போக்கு மாற்றப்பட்டது. கடுமையான மூலதன முடைக்கு ஆளான முதலாளிகள் கூலிகொடுப்பதில் விட்ட தவறுதலாலும், கொடிய தண்டனைகள் விதிப்பதாலும், 'கீழ்த்தரமான வீட்டு வசதிகள் அளிப்பதாலும் தொழிலாளரைச் சுரண்டியத்த மாற்றத்திற்கு காரணமாகும். 1840 இல் 3,814 ஆகவிருந்து 1844 இல் 76,745 ஆக உயர்ந்த இலங்கைவரும் இந்தியக் கூலிகளது எண்ணிக்கை 1848 இல் 32,172 ஆகக் குறைந்தது. ''முதலாளிகள் கூலிகளை நடத்தியமுறை அவர்கள் இலங்கையை நாடுவதற்கு ஊக்கமளிக்கும் கொள்கைக்கியைந்ததாகவோ, மனுஷத்தன்மை உடையதாகவோ இருக்கவில்லை', என்று உபதேசாதிபதி ரென்னன்ற் (Tennent) 1847இல் குறிப்பிட்டுள்ளார். முன்யோசனையாலும் மனுஷத்தன்மையாலும் உந்தப்பட்ட அரசாங்கம் வெகுவிரைவில் வைத்திய சேவைகளும், பிறவசதிகளும் கூலிகள் இறங்கிய துறைமுகங்களிலும், பெருந்தோட்டப் பகுதிகளிலும் அமைத்தனர். பெருந்தோட்டக்காரனும் மனுஷத்தனமாக நடத்துவதின் விவேகத்தை உணர்ந்தான். அரசாங்கமும் தனிப்பட்டவர்களும் காட்டிய இந்தக் கரிசனையின் விளைவாக இலங்கைக்கு வந்த கூலிகளின் எண்ணிக்கை உயர்ந்தது. இவ்வெண்ணிக்கை 1855 இல் 58,276 ஆக

உயர்ந்தது. கோப்பி ஊழியின் முடிவில் இலங்கைவரும் கூலியாளர் தொகை ஏறக் குறைய ஆண்டுக்கு 100,000 ஆக உயர்ந்தது.

கூலிக்காரரது இந்த நுழைவு பொருளியல் வரலாற்றுசிரியருக்கு அசாதாரண முக்கியத்துவம் உடையது. நிலமற்ற உண்மையான தொழிலாளர் வர்க்கம் இலங்கையில் இப்போதுதான் தோன்றியது. இவ்வர்க்கத்தினர் காசு இணைப்பு ஒன்றினுலேயே முதலாளிகளுடன் தொடர்பு உடையவராயினர். இவ்வர்க்கத் தொடர்பு புதிதாக இருந்ததுமல்லாமல், அது வேறுசில புதிய இயல்புகளையும் கொண்டிருந்தது. இப்புதிய தொழிலாளர் வர்க்கம் முற்றுக அந்நிய நாட்டிலிருந்து வந்து குடியேறிய வர்களைக் கொண்டது. அதேபோல முதலாளிவர்க்கத்தினரும் அந்நியராகவே இருந்த தனர். இத்தொழிலாளர்களது குடியேற்றம் குறிக்கப்பட்ட சில இடங்களிலே—அதாவது பெருந்தோட்டங்கள் இருந்த பகுதிகளிலே யே—நிகழ்ந்தது. அவர்கள் பிரிவுகளாகச் செறிந்த கூட்டங்களிலே வாழும்படி 'லைன்' இடவசதி முறையால் கட்டாயப்படுத்தப் பட்டனர். இது இந்தியாவின் ஒரு பகுதியை, அதன் பழக்கவழக்கங்கள் சமய நம்பிக்கைகள் பிறசமூகத் தொடர்பு முறைகள் ஆகிய யாவற்றேடும் இறக்குமதி செய்ததைப் போன்று இருந்தது.

இலங்கைக்கு முதலில் வந்த தொழிலாளிகள் சிறிது காலத்திற்குப்பின் தாயகம் திரும்பும் நோக்குடனேயே வந்தனர். ஆனுல் காலப்போக்கில் இவர்கள் இலங்கையையே தமது தாய்நாடாகக் கொள்ள முடிவு செய்ததின் விளைவாகக், கோப்பி ஊழியின் முடிவுக் காலத்தில், இந்தியத் தமிழ்ச் சமூகத்தினரின் எண்ணிக்கை 200,000 த்திற்கு மேலாகவிருந்தது. இன்று பத்துலட்சத்திற்கு மேற்பட்டு, இந்நாட்டின் இரண்டாவது பெரிய இனமாக விளங்கும் இந்தியத்தமிழர்கள், இன்றும் பெருந் தோட்டங்களிலேயே வேலைக்கமர்த்தப்பட் டவர்களாய்த், தாங்கள் எதற்காகக் கொண்டுவரப்பட்டார்களோ, அதேபணியில் ஈடுபட்டுள்ளனர்.

போக்குவரத்துச் சாதனங்கள் :

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை நடாத்தப்பட்டது சந்தைக்காகவேயல்லாது பிழைப் பூதியத்திற்காகவல்ல என்ற காரணத்தினுல், போக்குவரத்து வசதி இலங்கையின் பொருளாதாரச் சக்கரத்திற்கு அச்சாணிபோல் திகழ்ந்தது. எனவே காலப் போக்கில் இலங்கையின் தொடர்புச் சாதனங்கள் கோப்பி பயிர்ச்செய்கையினது தேவைகளின் முத்திரை பதியப்பெற்றதாக வளர்ந்தது.

பிரித்தானியர் வருகைக்கு முற்பட்ட காலத்தில், வீதிகள் இலங்கைக்குத் தெரியாதன அல்ல எனினும், கடலோரக் குறிச்சிகளின் பெரிய நகரப் பகுதிகளில் மட்டுமே அன்று வீதிகள் காணப்பட்டன. பாதுகாப்பின் பொருட்டும், நிர்வாக நோக்கங்களுக்காகவும், கோப்பியூழியின் ஆரம்பகாலத்தில் நாட்டின் உட்பகுதிகளுடன் தொடர்பு வழிகள் திறக்கப்பட்டன. எனினும் இவை பிரதான வீதியாகவே இருந்தன. எங்ஙனமிருப்பினும், அவை மிகச்சிலவாகவே இருந்தமையால், கோப்பி பயிர்ச்செய்கையாளருக்குப் பயனளிப்பனவாக இல்லை.

1840ஆம் ஆண்டை அடுத்த பத்து ஆண்டுகளுள், முதலீடுகள் பெருகியமையால், வீதிகளுக்காகிய கோரிக்கை வலுப் பெற்றது. கொள்கையளவில் அரசாங்கம் இக்கோரிக்கையை எதிர்க்கவில்லை. வீதியமைப்பு தொன்றுதொட்டு அரசாங்கத்தின் கடமையாக இருந்தது. மேலும் நிலங்களைப் பயிர்செய்கைக்கு எடுக்கும்படி பெருந் தோட்டப் பயிர்ச்செய்கையாளரை ஊக்கியபின்னர் அந்நிலங்களுக்கு தொடர்பு வழிகளை ஏற்படுத்தாதுவிடுவது நியாயமானதன்று. எனினும் மிகக்குறுகியதொரு காலப் பகுதியில் மிகப்பல வீதிகள் கோரப்பட்டபடியால் பணப்பிரச்சனை பிரமாண்ட வடிவம் எடுத்தது. ஒருபுறத்தில் வீதியமைப்புச்செலவு பெரிதாக இருந்தது. இலங்கையின் மிகக் கூடிய அகலம் 143 மைலே எனினும் மத்திய நிலம் 8000 அடிக்கு மேலும் உயர்கின்றது. செங்குத்தான சரிவுகளும் கரடுமுரடான நாடும் இம்மத்திய பகுதியில் காணப்படுவன. இதே இடங்களில் தான் கோப்பித் தொழிலும் நிலைநாட்டப்பட்டது. எனவே மலைநாட்டுப் பகுதியில் இருந்த புதிய வீதிகள் பலவான ஏற்ற இறக்கங்களும் குகை

வெட்டுக்களும், சிக்கலான வளைவுகளும் உடையனவாக இருந்தனவாதலால் நேரமும் பணமும் அதிகமாகச் செலவாயின.

இவற்றின் பரிபாலனப் பிரச்சனையும் மேற்படி அமைப்புப் பிரச்சனைக்கு இணையான முக்கியத்துவம் பெற்றது. அதிக மழைவீழ்ச்சியும் அமித வெப்பமும், துறைமுகங்களுக்கும் பெருதோட்டங்களுக்கும் இடையே ஓடிய வண்டிகளுடைய இரும்புச் சட்டமிடப்பட்ட சக்கரங்களுமாகச் சேர்ந்து மிகப்புதிய வீதியினது முகத்திற்கும் இரண்டொரு மாதத்தில் அழிவு ஏற்படுத்தின. இதனல் ஆண்டுதோறும் ஏற்பட்ட செலவும் நம்பமுடியாத விதத்தில் உயர்ந்தது.

1842 இல் 23, 147 பவுண் ஆகவும்
1844 இல் 35, 431 பவுண் ஆகம்ம்
1846 இல் 64, 947 பவுண் ஆகவும்

உயர்ந்த இச் செலவு 1846 ஆம் ஆண்டளவில் வருமானத்தின் 15வீதத்திற்குக் கூடியதாக இருந்தது. மொத்த வருமானம் மென்மேலும் கோப்பித் தொழிலையே தங்கியிருந்தமையால், அது கோப்பிச் சந்தையின் நிலைமைக்கு ஏற்பத் தளம்பியது.

எனினும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர் திருப்தி கொண்டிலர். கோப்பி பயிரிடப்பட்ட நிலப்பரப்பு வீதிகளிலும் வேகமாகப் பரவியது. மனக்கசப்பு அடைந்த முதலீடு செய்வோர், ஓர நடத்தை, தெரிந்து செய்யும் அசட்டை, கவனஈனம் போன்ற பல குற்றங்களை அரசாங்கத்தின் மேற் சுமத்தி,அதன்கொள்கைக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் வெளிப்படையான எதிர்ப்புக் காட்டுவதிற் பெயர் பெற்ற அரசியல் இயக்கமொன்றைத் தொடங்கினர்.

கவலைக்குள்ளான அரசாங்கம், 1845 முதல் 46 வரை நிகழ்ந்த பொருளாதார மந்தத்தினல் உண்டான இக்கட்டுக்கள் அதன்மீது சுமத்தப்படவே, ஆற்ருமை மேலீட்டால், ஒன்றன்பின் ஒன்ருகப் பல உக்கிரமான ஆழிதிறங்களைப் (expedients) கையாண்டது. வீதி வரி (Road Tax)என்ற போர்வையின் கீழ் சில காலத்திற்குப் பழைய ஊழிய வேலைமுறைக்குத் திரும்பியது.

புதிய பாதையமைப்பு முறைகளும் பரிபாலன முறைகளும் பரீட்சிக்கப்பட்டன. இவையாவும் தோல்வியே கண்டன. நல்லகாலமாக, 1850 ஐ அடுத்த ஆண்டுகளில் மறுபடியும் செல்வவளம் பெருகவாரம்பித்ததின் காரணமாக போக்குவரத்துச் சாதன அமைப்பில் அதிக செலவு செய்வதன் மூலம் பெருந்தோட்டக்காரர் சமூகத்தினரது எதிர்ப்பை அரசாங்கம் தணிக்கக் கூடியதாக இருந்தது.

ஒரு முக்கியமான பெருவீதி மட்டும் கேவலமான நிலையில் இருந்தது. வழிதோறும் கிளை வீதிகள் பலவற்றைத் தொடுத்த வண்ணம் கோப்பிப் பகுதியின் ஊடாக ஓடிய கண்டி வீதியே இதுவாகும். இதன் மீதிருந்த போக்குவரத்துப் பெருந்தொகையாகவிருந்ததோடு, ஆண்டுதோறும் மேலும் கூடியது. 1866 இல் தேசாதிபதி ஹேர்கூலிஸ் ருெபின்சன் (Hercules Robinson) என்பார் "இவ் வீதிக்கு உண்டாவது போன்ற தேய்வை எத்தகைய வன்மைமிக்க உலோகத்திலான வீதியும் தாங்காது. உண்மையில் இதன் தேய்வு இங்கிலாந்திலுள்ள எந்தக் கற்பாவிய வீதியிலுண்டாகுந் தேய்வையும் விடக் கூடியதாக இருக்கலாம். 40 – 45 அந்தர்வரை கனமுள்ளவை, ஒரே சோடிச் சக்கரங்களின்மேல் ஏற்றப்படுவதால் அதன் பழு பாரதுாரமானது" என்று கூறியுள்ளார்.

### புகைவண்டிப் பாதை

இப்பிரச்சினைக்கு வெளிப்படையான தீர்வு புகைவண்டிப் பாதை அமைத்தலே ஆகும். இத்தகையதொரு நடவடிக்கையின் நல்விளைவுகளை நன்கு உணர்ந்த பெருந்தோட்டக்காரச் சமூகத்தினர் உடனே அதை ஆதரித்தனர். புகைவண்டி வீதி அமைக்க வேண்டும், என்ற எண்ணம் முன்பே (1845ம் ஆண்டளவில்) தோன்றியது. புகைவண்டிப் பாதை இடப்பெயர்வுச் செலவுகளையும், திருட்டுக்களையும் குறைக்கும் என்றும் பொருட்களுக்கு இயற்கையினின்றும் கூடிய பாதுகாப்பை அளிக்கும் என்றும் அப்போது சுட்டிக் காட்டப்பட்டது. ஆனல் அரசாங்கம் இக் கருத்துக்கு அவ்வளவு உற்சாகம் அளிக்

கவில்லை. பொருளாதார மந்தத்தினல் மிகக் குறைக்கப்பட்ட அரசாங்க வருமானம் உறுதியற்றதாக இருந்ததால் முதலீடுசெய்வோர் கோரிய உத்தரவாதப் பங்கூதியத்தைக் (guaranteed dividends) கொடுக்க அரசாங்கத்துக்கு முடியவில்லை. 1860 ஐ அடுத்த ஆண்டுகளிலோ நிலைமை மாறியிருந்தது. அதிகப்படியான வருமானம் பெருந்தொகையில் இருந்ததினல் அரசாங்கம் இம்முயற்சியை ஆதரித்தது. புகைவண்டிப் பாதைக்கு அதிமுதன்மை கொடுக்கப்பட்டு, 1867-ம் ஆண்டு முடிவில் கொழும்பு — கண்டிப்புகைவண்டிப் பாதை பொது மக்கள் பாவனைக்குத் தயாராக இருந்தது. கோப்பி ஊழியின் எஞ்சிய ஆண்டுகளில் இப்பாதையைச் சுற்றிப் பல கிளைப்பாதைகள் அமைக்கப்பட்டன. புகைவண்டிப்பாதைக் கிளைகள் கோப்பி வளரும் பகுதியின் பெரும்பாலான இடங்களை அடைந்ததினல் பெருந்தோட்டக்காரர் தாம் எதிர் பார்த்த நல்விளைவுகளைப் பெற்றனர். பொருட்களின் இடப்பெயர்வுச் செலவு விரைவில் 60 – 70 விகிதம் குறைந்தது.

தற்காலப்பகுதியில், போக்குவரத்துச் சாதனங்களிலேயே அரசாங்கம் மிதமிஞ்சிச் செலவிட்டது. 1837 க்கும் 1886 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வீதியமைப்பிற்காக 57½ லட்சம் பவுணும், புகைவண்டிப் பாதையமைப்பிற்காக 37½ இலட்சம் பவுணுமாக 95 இலட்சம் பவுண் செலவு செய்யபபட்டது. இதே காலப்பகுதியின் மொத்த வருமானம் 400 இலட்சம் பவுணுக இருந்தமையால், இதில் ஏறத்தாழ 24 விகிதம் வரையில் வீதிகளிலும் புகைவண்டிப் பாதைகளிலும் செலவிடப்பட்டமை, போக்குவரத்துச் சாதன அமைப்பிற்கு அரசாங்கம் அளித்த முக்கியத்துவததை எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய முக்கியத்துவம் அவசியமாகவும் இருந்தது. பொது வருமானத்தின் நிலைமை கோப்பியின் செல்வ நிலையோடு நெருங்கிப் பின்னப்பட்டு இருந்ததினல் இது அவசியமாகிறது. கோப்பிக் காய்ச்சலையடுத்த பத்து ஆண்டுகளுக்குள், கோப்பித் தொழில் மொத்தப் பொது வருமானத்திற் காற்பங்கைக் கொடுத்தது. இவ்விகிதாசாரம் கோப்பிக் கால முடிவுவரை நீடித்தது.

நாடுபிணைக்கப்படல்

கோப்பி ஊழியில் ஏற்படுத்தப்பட்ட 'தொடர்புச் சாதன திருத்தங்கள்' இத்தகைய நடவடிக்கையோடு பாரம்பரியமாகத் தொடர்புற்ற விளைவுகளைக் கொண்டு வந்தன. நாட்டுப்புறத் தனிமை (rural isolation) முறிக்கப்பட்டு, வர்த்தகத் தத்துவம் ஏதுவாகப் பிறந்த புதிய மதிப்புக்களையும் சீவிய முறைகளையும் ஏற்கக் கூடிய மனேநிலையை மக்கள் பெற்றனர். முன்னர் தன்னிறைவு உள்ளனளவாக இருந்த பகுதிகள், இப்போது ஒருங்கு கொண்டு வரப்பட்டன. இப்பகுதிகளில் நிலவிய விலைகள் ஒத்த அளவு உள்ளனவாக்கப்பட்டன. பொருளாதாரத்தையும் அரசியலையும் பொறுத்த மட்டில் நாடு ஒன்ருகப் பிணைக்கப்பட்டது; இலங்கை ஒரு தனிப்பட்ட நாடாக்கப்பட்டது; உலகச் சந்தையமைப்பின் ஒரு பகுதி என்ற முறையில் பிறநாடுகளுடனும் இணைக்கப்பட்டது.

வீதிகளினதும் புகைவண்டிப் பாதைகளினதும் வருகையால் நாடுகள் நெருங்கியிருக்க வேண்டிய தேவையற்றுப் போய்விட்டது. வெகு தொலைவில் இருந்த இலங்கையின் வெவ்வேறு பகுதிகள் (ஏன் உலகத்தின் பகுதிகள் கூட), வரலாற்று முறையில் பெரிய உடன்பாடுகள் பலவற்றைத் தம்மிடையே பகிரும் அண்டைப் பகுதிகளையும் விட, அண்மையின ஆக்கப்பட்டன. இத்தீவினை, அதிலும் குறிப்பாக மத்திய பகுதிகளை, இங்ஙனமாகத் திறந்தமை, யுத்த காரணங்களுக்காகத் தமது நாட்டைக் கூடியவரை அணுகமுடியாதவாறு வைத்திருந்த கண்டியரின் பழைய கொள்கைக்கு முரண்பட்டதாக இருந்தது.

''கண்டியர் வஞ்சனையாக வீதியென அழைக்கும் சேறு, சகதி, குளங்கள் குட்டைகள்: சதுப்பு நிலங்கள், இருண்ட காடுகள், நீண்ட பாசிப்பகுதிகள் ஆகியவற்றினூடாக அசுத்தக் காற்றையும், மரணபீதியை ஏற்

படுத்தக்கூடிய ஈரத்தையும் சுவாசித்தவண்ணம், களிப்பூட்டக்கூடிய காட்சியாகிய மனிதனையோ, மனித இல்லத்தையோ காணுது, அதிர்ஷ்டமற்ற ஒரு வழிப்போக்கன் தள்ளாடிச் செல்லவேண்டும்,'' என்று இரண்டு பரம்பரைகளுக்கு முன்' முன்னை நாள் நீதியரசர் ஒருவர் (Sir Hardinge-Giffard) சலிப்போடு பாடியதை, 1870-ம் ஆண்டளவில் கண்டியின் பிரதான வீதிவழியே சென்ற பெருந் தோட்டப் பயிராளன் எவனும் நம்பியிருக்க முடியாது.

முதலீட்டுப் பிரச்சினை:

தொழில் சார்பான பிரச்சினைகளாகிய நிலம், கூலிவேலை, போக்குவரத்து வசதி ஆகியவற்றிற்கு மேல், முதலீட்டுப் பிரச்சினையும் இருந்தது. பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் ஆங்கிலேயப் பண நிறுவனங்கள், புதியதும் அறியப்படாததுமான ஒரு குடியேற்ற நாடாகிய இலங்கையில் முதலீடு செய்யத் தயங்கின. எனவே தொடக்கத்தில் நிலம் வாங்கியவர்கள், தங்களது தனிப்பட்ட சேமிப்புப் பணத்தை இத்தகைய தேர்வாராய்ச்சிகளுக்குப் (Experiment) பயன்படுத்திய அரசாங்க அலுவலாளர்களும், படை அதிகாரிகளுமே ஆவர். கோப்பிச் செய்கை பரீட்சிக்கப்பட்டு, ஊதியம் தருவது என்பது தெளிந்த பின்னர். பிறரும் அதில் முதலீடு செய்தனர். சிலர் பெருந் தொகைகளையும் இம் முயற்சியிற் செலவிடச் சித்தமாயிருந்தனர். ஆனுல் பெருந் தொகையானேர் நடுத்தரச் செல்வராகவே இருந்தனர். இவர்கள் சிறிய முதலாளிகள் (small capitalists) என அழைக்கப்படும் வகுப்பினர்கள். இவர்கள், 1840-ம் ஆண்டிலே தோன்றி, அன்று ஐந்து ஷில்லிங்களுக்கு விற்கப்பட்ட ஒரு ஏக்கர் நிலம் 1844 ஆம் ஆண்டில் இருபது ஷில்லிங்குகளாக விலையேறும்வரை, இத்துறைக்குப் பெருந்தொகையினராகப் புகுந்த வண்ணம் இருந்தனர். இத்திகதிக்குப் பின்னர், பெருந் தோட்டக்காரனுவதற்குக் குறைந்த பட்சம் மூவாயிரம் பவுண் முதலாவது தேவைப்பட்டது. இத்தொகை மிதமிஞ்சியதொன்று அன்று எனினும், முதலீடு செய்யக்கூடியவர்கள் பலரைத் தடுத்தது. இத்துறையுள் பிரவேசித்தவர்களிற் பெரும்பாலானேர் தேவைப்பட்ட மிகக்குறைந்தபட்ச முதலையே கொண்டவர்களாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் 1844 ஆம் ஆண்டிற்குப்பின் திறக்கப்பட்ட பெருந்தோட்டங்கள் மிகச்சிலவாகவே இருந்தன என்க. 1875ஆம் ஆண்டில், கோப்பிப் பயிர்ச் செய்கை உச்சத்திலிருந்த காலத்தில் நிகழ்த்திய கணக்கெடுப்பு (Survey) அப்போதிருந்த 1351 பெருந்தோட்டங்களும் சராசரி 356 ஏக்கர் பரப்பினை மாத்திரம் கொண்டவையாகவே இருந்தன என்பதைக் காட்டுகின்றது.

எமது காலத்தின் கடைப்பகுதியில் கம்பனிகளுக்குரிய பெருந்தோட்டங்களே பெரும்பாலனவாக இருந்தபோதும், இவை என்றுமே முதன்மை பெறவில்லை. 1870ஐ அடுத்த பத்து ஆண்டுகளின் நடுப்பகுதிகளிலுங் கூடக் கோப்பியாக்கத்தில் ஈடுபட்டவர்களில் மூன்றிலிரண்டு பங்கினர், தமது சொந்தத் தோட்டங்களைத் தாமே பராமரிக்கும் தனிப்பட்ட பெருந் தோட்டக்காரர்களாகவே இருந்தனர். மொத்தமான 1351 பெருந் தோட்டங்களில், 800 க்குக் குறையாத தோட்டங்கள் தனியுரிமையாளர்களது உடமைகளாகவே இருந்தன. இவர்களுள் 250 உரிமையாளர்கள் தமது தோட்டங்களிலேயே தங்கி அவற்றைப் பராமரித்தனர். எஞ்சியோருள் நானூற்றவர் இத்தீவிலேயே தங்கியிருந்து தோட்டங்களின் பராமரிப்பை பிறர் கையில் விட்டிருந்தனர்.

கோப்பிக் காய்ச்சலோடு இலங்கைக்குள் சொரிந்த சிறிய முதலீட்டாளரிற்பலர் கடன் வாங்கிய முதலில் தங்கியிருந்தனர். இவர்கள். பயிர்களின் விளைவை ஈடாகக் கொண்டு முற்பணம் தரும் பழைய மேற் இந்தியத் திட்டத்தின் மூலம் தமது மூலதனங்களை பெற்றிருந்தனர். இம்முறையின் படி. பெற்ற கடனும் அதற்குகந்த வட்டி வீதமும் தீர்க்கப்படும்வரை, சம்பந்தப்பட்ட பெருந் தோட்டத்தின் வருங்கால விளைவில், கடனைக் கொடுத்த நிலையம் உரிமை பாராட்டலாம் என்ற ஒப்பந்தத்தின் பேரில், லண்டனில் அல்லது கொழும்பில் உள்ள பிரதி கரும அகங்கள் (agency houses) கடன் கொடுத்தன. சிலர் கடன் பெருது தாமாகவே தொழிலைத் தொடங்கினுர்கள். என்

பது உண்மையேயாயினும். மிகப் பலர் காலப் போக்கில் இப்பிரதிகரும அகங்கள் மேலேயே தங்கியிருந்தனர். குறுகிய செல்வ வளம் படைத்தவர்கள் தொடர்ந்து வரும் பாதகமான பருவங்களைத் தாங்கும் சக்தி யற்றவர்களாகையால், நெருக்கடியான நிலை களிற் கடன்பணத்துட் சரண்புக நேரிட்டது.

பிரதிகரும அகம் மட்டுமே பெருந் தோட்டக்காரன் கடன் வசதி பெறக்கூடிய ஒரே இடம் என்ற நிலைமை நீடிக்கவில்லை: பல வங்கிகள், பெரும்பாலும் பிரபலமான அந்நிய வங்கிகளின் கிளைகள், இலங்கையில் தோன்றின. இவற்றுள் சில கோப்பித் தொழிலிற்கு மட்டும் மிஞ்சிக் கடன் கொடுத் ததினல், கோப்பித் தொழிலின் இக்கட் டான காலப்பகுதியில் நிலைநிற்க முடியாது முறிவுற்றன. ஆனல் ஏனையன முன்னெச்ச ரிக்கையாகவிருந்து, எத்தகைய அபாயநிலை களையும் தாண்டி, இன்றும் நாட்டின் பொரு ளாதார இயந்திரம் இயங்குவதற்குத் துணை செய்கின்றன.

நுண்மையான காற்று அமுக்கமானி களைப் (barometer) போல, வங்கிகளும், பிரதிகரும அகங்களும் பிறநாட்டுப் பணச் சந்தைகளின் தளம்பல்களைப் பதிவு செய் தன. சர்வதேசிய வர்த்தகத்தின் சர்வானு கூல மனப்பான்மை (optimism) யினது ஏற் றத்தாழ்வுகள் உடனுக்குடன் கொழும்பிற்கு அனுப்பப்பட்டன. 1846—49 ஆண்டுகளில் மந்தம், 1866-ஆம் ஆண்டின் சர்வப்பிரதி கூல மனப்பான்மை (Pessimism) 1870,1880 ஆண்டுகளையடுத்து ஏற்பட்ட மாபெரும் மந்தங்கள், ஆகிய ஒவ்வொன்றும் இத்தீ விலே பிரதிவிம்பித்தன. இங்ஙனமாக இலங்கை உலகப்பொருளாதார அமைப் போடு இன்னும் பலமாகப் பிணைக்கப்பட்டது

**அரசியல் வளர்ச்சி:**

பெருந்தோட்டப் பயிராளன், தான் பொருளாதாரத் துறையிலிருந்து மறை வதற்கு முன்னர், இந்நாட்டின் அரசியல் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க வகையில் தொண்டாற்றியுள்ளான்.

1833-ஆம் ஆண்டில், ஒரு விசாரணைக் குழுவின் சிபாரிசின்பேரில். ஒன்பது உத்தி யோகப் பற்றுள்ள அங்கத்தவர்களையும், ஆறு நியமிக்கப்பட்ட உத்தியோகப் பற்றற்ற அங் கத்தவர்களையும் கொண்ட சட்டசபை ஒன்று நிறுவப்பட்டது. உத்தியோகப்பற்று அற்ற வர்கள் தொடக்கத்தில் கொழும்பில் வசித்த வொரு சிறிய வர்த்தக சமூகத்தினரின் பதிலிகள் (Representative) ஆக இருந்தனர். (பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்சமு கம் அப்போது முக்கியத்துவம் பெற்றிருக்க வில்லை) இப்பதிலிகள் பெரும்பாலும் அர சாங்கக் கொள்கையை எதிர்க்காது ஏற்றுக் கொண்டனர். 1840 ஐ அடுத்த பத்தாண் டின் முடிவில் பெருந்தோட்டச் செய்கையா ளர் அரசியல் துறைக்குள் நுழைந்து, பத்து ஆண்டுகளுக்குள் தமது செல்வாக்கை இந் நாட்டு ஆட்சியிற் பதியச் செய்தது அவர்க ளது பெருஞ் சாதனையாகும்.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர் சமூகத்தின் அரசியல் அக்கறை (political—Concern) பெரும்பாலும் திருத்தமான வீதி, புகைவண்டிப்பாதை அமைப்புக் கோரிக்கை பற்றியதாகவே திகழ்ந்தது. சட்டசபையில் அவர்கள் உறுப்பினராக இருந்தகாலம் முழு வதிலும் திரும்பத் திரும்ப ஒலித்த பல்லவி இதுவே. புதிய வீதிகள் அமைப்பதிலும், புகைவண்டிப் பாதைகளை நீட்டுவதிலும் அரசாங்கம் சுறுசுறுப்பாக இருந்தால் அமைதி நிலவும். இவ்வம்சங்களில் செல விடப்படும் தொகை போதியதாக இல்லா விடில், வரவு செலவுத் திட்டத்தின்பால் கட் டுப்பாடு செலுத்தக்கூடிய அளவு அரசியல் உரிமைகோரி ஓர் இயக்கம் தொடக்கப்ப டும். பத்தொன்பதாம் நூற்றுண்டில் முதன் மைபெற்று விளங்கிய அரசியலமைப்புத் திருத்தச் சதிர், ஏனைய இயக்கங்களைப் போலவே கோப்பித்தொழிலின் தேவைக ளாற் பாதிக்கப்பட்டது. சிறிது காலத்துக் குப் பெருந்தோட்டக்காரரும் வர்த்தகரும் இச்சதிரின் முன்னணியில் இருந்தனர். அவர் களது உற்சாகத்தைத் தூண்டியவை. சமூக நன்மை, மனித உரிமை போன்ற பிரச்சினை

களல்ல. தொழிலாளனுக்கு முக்கியமாக சாதாரணச் செயல்முறைப் பிரச்சினைகளே இவர்களது உற்சாகத்தைத் தூண்டின.

அரசாங்கத்தின் பொதுச்செலவுத் திட்டத்தோடு நெருங்கிய தொடர்புடைய இத்தகைய இயக்கமானது, தொடர்ச்சியாக இல்லாது இடையிட்டதாக இருப்பது இயல்பே. முதற்பதினைந்து ஆண்டுகளுக்கும் அப்படியே இருந்தது. இடப்பெயர்வு — போக்குவரத்துச் சாதனங்களில் அரசாங்கம் செலவிட்ட பணத்தொகையின் அளவுக்கேற்ப இவ்வியக்கமும் வளர்ந்துதேய்ந்தது. 1850ஐ அடுத்த பத்தாண்டில், பெருந்தோட்டக்காரனைக் காலப்போக்கிற் சட்டசபையில் இருந்து விலக்கிய புதிய வளரும் சக்தியொன்று பிறந்தது. உள்நாட்டு நடுத்தர வகுப்பே (Middle Class) இச்சக்தியாகும். பெரும்பாலும் வைத்தியர்கள், சட்டவல்லுனர், பழைய நிலவுடைமையாளர் ஆகியோரைக் கொண்டதாக விருந்த இவ்வகுப்பின் அரசியற்கிளை நிர்வாக உத்தியோகங்களுக்கும் கூடியளவு சுயாட்சிக்கும் இலங்கையர் கொண்டாடிய உரிமையை முழக்கியது.

முதலிற் பெருந்தோட்டக்காரர் சமூகத்தின் பதிலிகளது அரசியற் பயிற்சி மாணவராய் (Political Apprentices) இருந்த இலங்கையர், விரைவில் இவ்வடிமைத்தனத்திலிருந்து தம்மைத் விடுவித்துக் கொண்டனர். அவர்கள் கற்ற பாடங்கள் செவ்வனே பயன்படுத்தப்பட்டன. சிறிது காலத்துக்கு அரசாங்கம் இவர்களது கோரிக்கையை எதிர்த்தபோதிலும், இருபதாம் நூற்றுண்டளவிற் காணப்பட்ட இலங்கையர் எதிர்ப்பின் வன்மை காரணமாகத் தொடராகப் பல சலுகைகள் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் குடியேற்ற நாட்டு அலுவலகத்திற்கு ஏற்பட்டது. இச்சலுகைத் தொடரே 1948ல் முழுமையான தனி அரசுரிமை (Dominion-Status) யை இட்டுவந்தது. பெருந் தோட்டக்காரர் இட்ட அடித்தளம் கோப்பி இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் இழந்த காலத்திற் பெரும் இக்கட்டுக்கு உட்படவேண்டியிருந்தது.

கோப்பிப் பயிர்ச் செய்கைச் சமூகத்தினுல் பேணி வளர்க்கப்பட்ட பதிலி அரசாங்க முறைக்கோட்பாடு இலங்கை மக்களுக்குப் புதிதாக இருந்தது. ஆனுல் அதன் நன்மைகளை விரைவில் உணர்ந்தார்கள். பதிலி அரசாங்க முறைக்கும் வாக்குரிமைக்குமான கோரிக்கைகளைப் போல விரைவிற் பரவக்கூடிய 'தொற்று நோய்கள்' மிகச் சிலவே. எனவே, இறுதியில் அரசியல் தன்னுட்சிக்கான பொது மக்களியக்கமாக மாறிய இயக்கத்தைப் பெருந் தோட்டச் செய்கையாளரே விருப்பமில்லாது தொடக்கி வைத்திருந்தனர். ஆகவே எண்ணங்களை வெளியிடும் பழைய முறையான ஆயுதப் போரிற்குப் பதிலாகச் சட்ட சபையில் கேட்கும் மக்கள் குரலாகிய புது முறையை அமைத்துத் தந்தமை, வர்த்தக விவசாயம் தற்கால இலங்கையை அமைப்பதற்குச் செய்த சிறந்த தொண்டாகும்.

கோப்பித் தொழிலின் எழுச்சியும், வீழ்ச்சியும் அதன் காலத்தில் எழுந்த பலதரப்பட்ட பிரச்சினைகளும், அவற்றுக்குக்காணப்பட்ட தீர்வுகளும், ஆகியன யாவும் சேர்ந்து இலங்கையின் உள்நாட்டு மக்கள் மீது புரட்சிகரமான விளைவுகளை உண்டாக்கின. இவ்விளைவுகளிற் சில மேற் குறிப்பிட்டுள்ளன. எண்ணற்ற பல முக்கியமான விளைவுகள் இனிமேற் கூறப்படும்.

**பிழைப்பூதிய விவசாயம் வர்த்தக விவசாயமாக மாறல்:**

1850 ஐ அடுத்த பத்தாண்டின் நடுப் பகுதியிற் கூட உழவர்கள் பணம், ஆதாயம் சந்தைகள் முதலியவற்றையும் அவற்றின் தாற்பரியங்களையும் உணரத் தலைப்பட்டு விட்டனர், என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது. பலர், பெருந் தோட்டங்களீட்டிய வெற்றியை உணரக் கூடிய வியாபார மனப் பக்குவம் அடைந்தவர்களாகத் தமது எடாகூடமான பழைய முறைகளை விட்டு. ஐரோப்பியப் பெருந்தோட்டக்காரன் காட்டிய சிக்கனத்தையும் ஆட்சி முறைகளையும் பின்பற்றத் தொடங்கினர்.

பிழைப்பூதிய விவசாயம் இங்ஙனம் அதி விரைவில் வர்த்தக விவசாயமாக மாறியது. 1850 க்கும் 1870 க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கோப்பியின் கீழ் இருந்த 130,000 ஏக்கர் நிலத்தில் 50,000 ஏக்கர் உழவரது உடைமை எனக் கணக்கிடப்பட்டது. இப்ப ரப்பு மொத்தக் கோப்பி விளைவின் ஐந்தில் ஒன்றிலிருந்து காற்பங்களவிற்குப் பொறுப் பாக இருந்தது என்றும், அதிலிருந்து ஏம் பட்ட வருமானம் ஆண்டுக்கு 250.000 பவு னுக்கும் 300,000 பவுனுக்கும் இடையில் இருந்தது என்றும் கூறப்படுகிறது.

உழவருக்கு இதுவரை முக்கியமற்றதாக இருந்த பொருளாதார நிகழ்ச்சிகளைப் பற் றிய நோக்கு ஒன்றின் வளர்ச்சி இங்கு விளக்கப்பட்டு உள்ளது. பொருளாதார தனிமைக் கோட்பாடு (Economic Individualism) வளர்ந்து கொண்டு இருந்தது தெளிவு ஆகின்றது. வீதிகளையும் புகை வண்டிப் பாதைகளையும் நீட்டியதும், ''கோப்பிக் காய்ச்ச'' லோடு இலங்கையுள் சொரிந்த பணமும், கூலி வேலை செய்ய இறக்குமதி செய்யப்பட்ட தொழிலாளர் இலங்கையின் அதி பிற்போக்கான பகுதிகளில் குடி ஏற் றப்பட்டமையும் இவ் வளர்ச்சியைத் துரி தப்படுத்தின.

நடுத்தர வகுப்பு:

பொருளாதார நடவடிக்கையின் நோக்க மும் வாய்ப்பும் விரிவு அடைந்தமை, நிரு வாக அமைப்பின் விரிவை அவசியமாக்கிற்று. புதிய பதவிகளை ஆக்கவேண்டி இருந்தது; புதிய இலாகாக்களை நிறுவவேண்டி இருந் தது; உயர்ந்த பதவி வகிப்பதற்கு உத்தி யோகத்தர்கள் வழக்கமாக இங்கிலாந்தில் இருந்து வரவழைக்கப்பட்டனர்; பிற பத விகள் வகிப்பதற்கு உள்நாட்டு மக்கள் தெரிவுசெய்யப்பட்டனர். ''வெண்சட்டை'' (White Collared) வேலைக்காரரையும், சிறிய உத்தியோகத்தரையும் கொண்ட வகுப்பு ஒன்று தோன்றிற்று; ஆங்கில அறிவு ஒன்றே இவர்களுக்கு இப் பதவிகள்பால் உரிமை கொடுத்தது.

இளமக்கள் கல்வியில் பணம் செலவிடு வதால் ஏற்படும் நல்விளைவுகளை உணர்ந்த இப் புதிய சமூகவகுப்பு, இருபத்தைந்து ஆண்டுகளுக்குள், மேல் நாட்டில் இருந்த உத்தியோகத்தருக்கு இணையான சட்டவல்லு நர் ,வைத்தியர், ஆசிரியர் ஆகிய உயர் தொழிலுக்கு உயர் மனிதரைத் தம் மத்தி யிலிருந்து தோற்றுவித்தது.

அதேசமயத்தில், இலங்கையிலுள்ள முற் போக்குள்ள குடும்பங்கள் சில வர்த்தகத் தொழிலில் இறங்கின. சிலர் போக்குவரத் துச் செயலாளராகவும், (Transport agent), சிலர் பொதுவாக வர்த்தகர்களாகவும், வேறுசிலர் விஞ்ஞான முறையில் கோப்பி வளர்ப்போர் ஆகவும் ஆயினர். அவர்களும் விரைவில் தமது மக்களின் கல்வியில் கவ னஞ்செலுத்தி, அதனுல் வைத்தியம்; சட்டம் கல்விக் கழகப்படிப்பு (Academic Learning) ஆகிய துறைகளுக்குள் நுழைந்த மாணவர் எண்ணிக்கையைப் பெருக்க உதவினர்.

தம்முள் விரிந்த வேறுபாடுகளை உடைய எழுத்துவினைஞன் (Clerk), வைத்தியன், வர்த் தகன், பெருந்தோட்டக்காரன், சட்ட வல் லுனன் ஆகிய பிரிவுகள் இலங்கையின் நடுத் தர வகுப்பாகப் பின்னப்பட்டன. கடந்த காலத்திற் காணப்படாத பொருளாதார அக்கறை, அரசியல் நோக்கங்கள் ஆகியவற் றோடும் இலங்கையின் சமுதாயச் சூழலுக் குப் புதியதாகவும் இருந்த இம் மத்திய வகுப்பு, இலங்கை வரலாற்றின் நவீன காலத்தின் தெளிவான தனிப்பட்ட அம்ச மாக அமைகிறது.

வீதிகளுடனும் புகைவண்டிப் பாதைகளு டனும் வர்த்தக விவசாயத்துடனும், வள ரும் பணப் பொருளாதாரத்துடனும், புதிய வகுப்புகளுடனும், அரசியல் இயக்கத்துட னும், மாற்றமடையும் சமூகப் பொருளா தார மதிப்புகளுடனும் 1900 இல் விளங்கிய இலங்கை, 1830 ஆம் ஆண்டில் இருந்த இலங்கையிலிருந்து வேறுபட்டது. இவ் வேறுபாடு இற்றைக்கு ஆயிரமாண்டுகளுக்கு முன்னைய வேறுபாட்டிற்கு இணையானதென லாம். முதலாளித்துவத்தின் வருகையால்

தொடக்கப்பட்ட புதிய சக்திகள் ஆக எழு பது ஆண்டுகளுக்கே இயங்கியிருந்தன. எனினும் அக்குறுகிய காலத்தில் அவை நெடுங் காலமாக நிலவிய பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்த பந்தங்கள் யாவற்றையும்தகர்த்து விட்டன. அவைகள் ஆக்கிய மாற்றங்கள் அடிப்படையானவை. எனவே தான் பொருளாதார ஆசிரியன் இக்காலப்பகுதிக்கு தனிப்பெயர் தேடுவது நியாயமானதாகும்.

□ □

---

## 1989 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம்

**பாதீட்டுக் கணக்கு:** **(மில்லியன் ரூபாவில்)**

| | | | |
|---|---|---|---|
| 1 | அரச மொத்தச் செலவுகள் | | 108013 |
| | 1. 1 மீண்டெழும் செலவு | 59375 | |
| | 1. 2 மூலதனச் செலவு | 48638 | |
| 2 | அரச மொத்த வருமானம் (அரசிறை) | | 52000 |
| 3 | கழிக்கவும்: குறைச் செலவுகள் | | |
| | 3. 1 மீண்டெழும் செலவு | 1484 | |
| | 3. 2 மூலதனச் செலவு | 1914 | |
| | | | 3398 |
| | | | 52615 |
| 4 | முற்பணக் கணக்கிற்கான தொகை | | 400 |
| 5 | வரவு செலவுத் திட்ட மொத்தப் பற்றுக்குறை | | 53015 |
| 6 | செலவின வெட்டுக்கள் | | (9020) |
| 7 | வரவு செலவுத்திட்ட தேறிய பணக்குறை | | 43995 |
| 8 | நிதியீட்ட மூலங்கள் : | | |
| | 8. 1 வெளிநாட்டுக் கடன் | 18000 | |
| | 8. 2 வெளிநாட்டு நன்கொடை | 5600 | |
| | 8. 3 வங்கியல்லாத் துறையும் சந்தையல்லாக் கடனும் | 17000 | |
| | 8. 4 வங்கித்துறைக் கடன் | 3395 | |

**நடைமுறைக் கணக்கு :**

| | |
|---|---|
| மீண்டெழும் செலவுகள் | 59375 |
| கழி : குறைச் செலவு | 1484 |
| | 57891 |
| அரசிறை | 52000 |
| நடைமுறைக் கணக்கில் பற்றுக்குறை | 5891 |

# பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம்

மா. சின்னத்தம்பி

நாடுகளின் அபிவிருத்தி என்பது பொருளாதார அபிவிருத்தியை மட்டுமன்றி சமூகவியல் துறைகளிலான முன்னேற்றம், அரசியற் சுதந்திரம், சமய, கலாசார மேம்பாடு போன்ற எல்லாத் துறைகளின் முன்னேற்றங்களையும் குறிப்பிடுகின்றது. அதே போல் சமூகத்தின் எல்லா வகுப்பினருக்கும் அபிவிருத்தியின் தன்மைகள் கிடைக்கச் செய்வதை அது உறுதிப்படுத்துவதுமாகும். வருமானம், செல்வம் என்பன மக்களிடையே இயன்றளவு சமமாக பங்கிடப்படுவதையும், அது உறுதிப்படுத்தும்,

பொருளாதார அபிவிருத்தியென்பது தேசிய உற்பத்தி, தலாவருமானம் என்பவற்றின் அளவு கூடிச் செல்வதை மாத்திரம் குறிப்பதன்று. அவ்வாறான அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியென்றே குறிப்பிடப்படுகிறது. இதைவிட நாட்டின் உற்பத்தித் துறைகளின் சார்புரீதியான பங்கும் மாற்றமடைவது அவசியம் எனக் கூறப்படுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளின் அனுபவத்திலிருந்து பொருளாதாரத் துறைகளின் சதவீதப் பங்கு சாதகமாக மாற்றமடையுமானால் அபிவிருத்தி ஏற்படமுடியும் என்பது அறியப்பட்டுள்ளது. அவ்வாறான மாற்றமே பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் எனப்படுகிறது,

### *கட்டமைப்பும் மாற்றமும்:*

ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஒவ்வொரு பொருளாதாரத்துறையினதும் பங்கு எவ்வாறமைந்துள்ளதென்பதே பொருளாதாரக் கட்டமைப்பாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாகவும் இவற்றை நோக்கமுடியும். முதனிலைத்துறையெனப்படும் விவசாயம் இரண்டாம் நிலைத் துறையான கைத்தொழில், மூன்றாம் நிலைத் துறையான சேவைகள் என்பன மொத்தத் தேசிய உற்பத்தியில் அல்லது மொத்த உள்நாட்டுற்பத்தியில் என்ன சதவீதத்தில் காணப்படுகின்றன என்பதையும் கட்டமைப்பு குறிப்பிடுகின்றது. இதே போல நாட்டின் மொத்தத் தொழில் வாய்ப்பில் ஒவ்வொரு துறையும் பெறுகின்ற சதவீதமும் கவனத்திற் கொள்ளப்படும். அதாவது நாட்டின் ஊழியப்படையில் எத்தனை சதவீதமானோர் விவசாயம், கைத்தொழில், சேவைகள் துறைகள் ஒவ்வொன்றிலும் தொழில் வாய்ப்பு பெற்றுள்ளனர் என்பதும் கட்டமைப்பு என்பதில் நோக்கப்படும்.

இவ்வாறு நாட்டின் பொருளாதாரத் துறை ஒவ்வொன்றும் மொத்தத் தேசிய உற்பத்தியிலும் அல்லது மொத்த உள்நாட்டுற்பத்தியிலும், மொத்த தொழில் வாய்ப்பிலும் கொண்டுள்ள சார்பளவான பங்கே பொருளாதாரக் கட்டமைப்பு எனப்படும். நாடுகளின் முன்னேற்றங்களை கண்டறிய கட்டமைப்பு மாற்றங்களை அவதானிப்பது அவசியமாயுள்ளது. ''கட்டமைப்பு மாற்றங்கள்'' என்பது பின்வருமாறு அறியப்படும்.

1. தேசிய உற்பத்தியிலான துறைகளின் சதவீதப் பங்கில் ஏற்படும் மாற்றங்கள்.

2. மொத்தத் தொழில் வாய்ப்பிலான துறைகளின் சதவீதப் பங்கில் ஏற்படும் மாற்றங்கள்.

தேசிய உற்பத்தியில் அதிகரிப்பு என்பது காரணிகளின் பயன்பாட்டுடன் பொருட்கள், சேவையின் அளவு உயர்வதுடன் மக்களின் வருமானம் உயர்வதனையும் குறித்து நிற்கிறது. தேசிய உற்பத்தியை பல்வேறு துறைகளாகப் பிரித்து நோக்குவது பொருளாதார அமைப்பினை புரிந்து கொள்ளவும் உதவுகிறது. துறைகளின் பொருளாதார முதன்மையைப் பொறுத்து பொருளாதாரங்கள் வேறுபடுத்தப்படுவதுண்டு, ஒரு நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்கு அதிகமாகவும் கைத்தொழிற் துறையின் பங்கு குறைவாகவும் இருப்பின் அது விவசாய பொருளாதாரமாகும், இங்கு விவசாயம் கூட யந்திரமயமாக்கப்படாததாயும். பிழைப்பூதிய தன்மையுடையதாயும் காணப்படுவதுண்டு. இவை வளர்முக நாடுகளைச் சுட்டுவனவாயுமுள்ளன, டென்மார்க். நியூசிலாந்து போன்ற ஒருசில விவசாயத் துறையில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் நீங்கலாக பெரும்பாலான விவசாய நாடுகள் பின்னடைந்தனவாகவேயுள்ளன. மறு புறமாக பொருளாதாரத்தில் 40 சதவீதம் அல்லது பெருமளவு கைத்தொழிற்துறை பங்கு காணப்படுமாயின் அது கைத்தொழிழிற் பொருளாதாரம் எனப்படும், இங்கு விவசாயத்துறையின் சார்பளவான பங்கு குறைவாக இருக்கும் என்பதோடு, பெருநில விவசாயமாயும் இயந்திரமயமாக்கப்பட்டதாயும், வர்த்தகப் பண்பு மிகுந்ததாயும் இருக்கும். இவை பெருமளவு வளர்ச்சியடைந்த நாடுகளாகவேயுள்ளன. இந்த அனுபவப் போக்குகளிலிருந்து ஒரு பொருளாதாரம் வளர்ச்சியடைவதை இந்த துறை சார்பகங்களில் பின்வரும் தன்மையிலான மாற்றங்கள் வெளிப்படுத்தும்,

1. விவசாயத் துறையின் மொத்தப் பெறுமதி கூடிச் சென்றாலும் சதவீதப் பங்கு குறைதல் வேண்டும். மொத்தத் தொழில் வாய்ப்பிலும் இதன் பங்கு குறைதல் வேண்டும்,

2. கைத்தொழிற் துறையின் மொத்த பெறுமதி உயர்வதோடு அதன் சதவீதப் பங்கும் உயர்தல்வேண்டும். மொத்தத் தொழில் வாய்ப்பிலான இதன் பங்கு கூடிச் செல்லவேண்டும்.

3. சேவைகள் துறையின் மொத்தப் பெறுமதி உயர்வதோடு, அதன் சதவீதப் பங்கும் உயர்தல் வேண்டும். மொத்தத் தொழில் வாய்ப்பிலான இத்துறையின் பங்கும் கூடிச் செல்லவேண்டும்.

*விவசாயம் - முதனிலைத்துறை:*

இயற்கையின் கொடையான நிலத்தை ஆதாரமாகக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளை இது குறிக்கிறது. மண் செழிப்புத்தன்மை, காலநிலை, இயற்கைத் தாவரம், கடல்வளம் சார்ந்த தொழிற்பாடுகளாக இவை அமைகின்றன.

எந்த நாட்டினதும் முதற் தேவையான உணவு வழங்கும் துறையாயிருப்பதோடு பொருளாதார வளர்ச்சியின் முதற்கட்டமாகவும் இது அமைகிறது. வளர்ச்சியின் அடித்தளத்தை இத்துறையின் வளர்ச்சி வழங்குகிறது. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் வளர்ச்சியிலிருந்து இதை உணரமுடியும்.

வளர்முக நாடுகள் காலநிலை, ஊழியத் தன்மை போன்றவற்றால் இத்துறையில் அதிக பங்கினைக் கொண்ட போதிலும், சுய தன்மையான உபாயங்களை விருத்தி செய்யத் தவறின. இந்நாடுகளின் மேன்மைக் குடியினர் அதிகாரத்திலிருந்தனர். மேற்கத்திய தொழில் நுட்பங்கள், நிறுவனங்கள் அவர்களால் வளர்முக நாடுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டன. ஜப்பான் இத்தகைய மேற்கத்திய பின்பற்றலின் விவசாய அபிவிருத்தியின் முதற்கட்டத்தில் தோல்வியடைந்ததால் சுய முறைகளுக்குத் திரும்பி வளர்ச்சி பெற்று விட்டது. ஏனைய நாடுகள் குடியேற்ற வாத மனோபாவத்தின் படி இயங்கியதால் விவசாயத்துறையில் எதிர்பார்த்த வளர்ச்சி மட்டத்தை அடைய முடியவில்லை.

பொருளாதாரம் வளர்ச்சியுறுவதானுல் பெருகும் குடித் தொகைக்கு உணவு வழங்கவும், ஏற்றுமதியைப் பெருக்கவும் இதன் மொத்த பெறுமதி உயரவேண்டும். ஆனுலும் இது தலைமைத் துறையாக விளங்க முடியாது. இதன் சதவீதப் பங்கு குறைய வேண்டும். தொழில் வாய்ப்புக்கு இத்துறையை எதிர்பார்ப்பதும் குறைய வேண்டும். இதற்கு இத்துறை சார்ந்த நலிவான பின்வரும் காரணங்கள் பொறுப்பாகும்.

1) காலநிலை, வானிலை தொடர்பான மாற்றங்கள் இத்துறையில் அடிப்படைப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனுல் விவசாய விளைபொருட்களின் நிரம்பல் நெகிழ்ச்சியற்றதாயுள்ளது. இதனுல் உலக சந்தை விலைக்கேற்ப இவ்வேற்றுமதிகளை அதிகரிக்க முடிவதில்லை இதனுல் இலாபத்தை அதிகரிப்பதும் கடினமாயுள்ளது.

5) இத்துறையில் பிரதேசக் கட்டுப்பாடு (Region Bound) மிக அதிகளவினதாயுள்ளது. குறித்த பிரதேசத்தின் விவசாய வளர்ச்சியானது அப்பிரதேச காலநிலை மண்ணின் தன்மை, இயற்கைத் தாவரம், விலங்குகள், சமூக அமைப்பு, தொழில் நுட்பமாதிரிகள், மதிப்பீட்டு முறைகள் போன்ற பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. இவை பிரதேசங்களுக்கேற்ப மாறுபடுவன. இவ்வியல்புகள் பல நூற்றுண்டுகளாக வளர்ச்சி பெற்று விட்டவை. சமூக வாழ்வுமுறையிலிருந்தும் பிரிக்க முடியாதனவாகி விட்டன. இதனுல் இத்துறையை மாற்றுதல். விரிவு படுத்தல் என்பது கடினமானதாயுள்ளது.

3) விவசாய பொருட்கள் குறித்த கேள்வியின் வருமான நெகிழ்ச்சி குறைவானதாகும். மக்களின் வருமான அதிகரிப்புக்கேற்ப கேள்வி உயர்வதில்லை. மக்கள், தாழ் வருமான நிலையிலிருக்கும் போது, வருமானத்தில் பெரும்பகுதியை விவசாய உற்பத்திகளில் செலவிடுவர். வருமானம் உயரும்போது இவற்றில் செலவிடப்படும் விகிதாசாரம் குறைந்தே செல்லும். இதனுல் இவற்றின் மொத்தக் கேள்வி மெதுவாகவே உயரும் இது வளர்ச்சிக்குத் தடையாகும்.

4) குடித்தொகை வளர்ச்சிக் கேற்பவே விவசாய ஏற்றுமதிகளின் கேள்வி உயர முடியும். மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும், இன்று நிகழ்வது போல் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைந்தால் அல்லது பூஜ்யமானுல் கேள்வி குறைய விவசாய ஏற்றுமதி வர்த்தகம் பாதிக்கப்படும். வளர்முக நாடுகளிற் கூட குடித்தொகைக் கட்டுப்பாடுகள் கூடிவருவதால், எதிர்கால ஏற்றுமதி விரிவு என்பது இத்துறையில் நிச்சய மற்றதாக அமையும்.

5) உலக ரீதியில் ஒரே வகைத் தானியத்திற்கான மொத்தக்கேள்வி உயரும் வாய்ப்பில்லை. ஏனெனில் காலநிலை, பழக்க வழக்கம் என்பவற்றுக் கேற்ப தானிய நுகர்வு வேறுபட்டு விடும். குளிர் வலய நாடுகளில் கோதுமைக்கும், அயன வல்ய நாடுகளில் நெல்லுக்கும் கேள்வி ஏற்படுதல் இவ்வகை மட்டுப்படுத்தப்பட்ட நிலையேயாகும். இதனுல் விவசாயத்துறை விரிவடைதல் கடினமானதாயமையும்.

6) இத்துறை நவீன தொழில்நுட்ப மாற்றங்களை அதிகம் உள்வாங்கக்கூடியதல்ல. புதிய நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்தும்போது உற்பத்தியாளர்களும் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவர். ஆசியாவில் அரிசி உற்பத்தியில் நல்லின விதையினங்கள் ஏனைய உள்ளீடுகள் என்பனவற்றின் பிரயோகத்தினுல் நிரம்பல் அதிகரித்த போதும் கேள்வி அந்த அளவுக்கு அதிகரிக்க வில்லை. கைத்தொழிற் பொருட்களைப் போன்று பொருள் வேறுக்கம் (Product Variation) இவற்றில் அதிகம் சாத்தியமாகாது. இதனுல், கேள்வி தொடர்ந்து விரிவடையாது. இவ்வாறு மிகை நிரம்பல் ஏற்பட்டபோது அரிசி விலை வீழ்ச்சியுற்று, உற்பத்தியாளர் வருமானம் குறையலாயிற்று. அதே சமயம்

தொழிலாளர்களின் கூலி குறைந்து செல்லும் நிலையும் உருவாகும். இயந்திரங்களின் பாவனை அதிகரித்தல் தொழிலாளர் கேள்வியை குறைத்து விடும். இதனால் தொழிலின்மையும் ஏற்பட முடியும். அவர்கள் புதிய தொழில் நுட்பத்துறைகளில் தொழில் நாடி நகர வேண்டும்.

7) பொருளாதார வளர்ச்சியில் விவசாயத் துறையின் நிரம்பல் கூடி தானிய விலை குறைய மக்களின் மெய் வருமானம் உயர முடியும். அப்போது அவர்கள் வேறு துறைப் பண்டங்களுக்கு கேள்வி ஏற்படுத்துவர். அத்துறைகளுக்கு விவசாய வளங்களை பொருளாதார வளர்ச்சியுடன் விவசாயத் துறையின் பங்கு மாற்ற மடைகையில் விவசாயத் துறையில் பன்முகப்படுத்தல் இடம் பெறுவதைக் காணலாம்.

## விவசாய பன்முகப்படுத்தல்

வளர்ச்சி என்பது விவசாயம் பன்முகப் படுத்துவதுடன் தொடர்புடையது. பிரதேசச் சிறப்பாக்கம், சர்வதேச வியாபார விரிவாக்கம் என்பனவற்றினடிப்படையில் வளங்களைப் பல்வேறு துறைகளுக்கும் பிரித்து ஒதுக்கும் சிக்கனமான செயல் முறையாகும். இது பல்வேறு மாதிரிகளில் நிகழ முடியும்.

அ) பண்ணைத் தொழிலில் இது வரை ஒரு பயிர் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தால் இப்போது அதில் புதிய பயிரை அல்லது விலங்கு வேளாண்மையைச் செய்யமுடியும். காலநிலையின் சீரற்ற தன்மை, விலைத் தளம்பல் போன்ற அபாயங்களிருப்பினும், உற்பத்தியாளன் பல பயிர் வருமானம் பெறுவதால் அதிகளவு வருமானம் பெற முடியும்.

கலப்பு பயிர் (Crop Mix) முறையினால் வளங்கள் பூரண பயன்பாடு பெறும். நிலப் பயன்பாடு உயரும். கிடைக்கும் உழைப்பும் பூரணமாகப் பயன்படுத்தப்படும். ஒரு பயிரின் விலை குறைந்தால், மறுபயிருக்கு மாறிவிடலாம்.

ஆ) துறைசார் பன்முகப்படுத்தலிலும் கவனம் செலுத்த முடியும். தொடக்கநிலையில் தானியம், உபஉணவுப் பொருட்களின் உற்பத்தியிலீடுபட்டிருக்கும் நாடுகள், தலா வருமானம் உயரும் நிலையில் பழவகை, காய்கறி, எண்ணெய் விதை, பண்ணை உற்பத்தி போன்ற துறைகளின் உற்பத்திக்கு தம்மை மாற்றிக் கொள்வர். இத்தகைய உற்பத்தி மாற்றம் நுகர்வு மாற்றத்தைத் தொடர்ந்து ஏற்படும்.

இ) பிரதேச மட்டத்தில் பன்முகப்படுத்தல் நிகழ முடியும். சில பயிர்கள் சில பிரதேசங்களில் சிறப்பாக வளர முடியும். ஒரு பண்ணைக்குள் நிகழத் தொடங்கிய இவ்வகைப் பன்முகப்படுத்தல் பின்பு தேசிய மட்டத்திலானதாக வளர்ச்சி பெற்று விடும். ஐக்கிய அமெரிக்காவில் இத்தகைய வளர்ச்சி தென்பட்டுள்ளது.

ஈ) தேசிய மட்டத்தில் நேரடியாகப் பன்முகப்படுத்தல் என்பது வளங்களைச் சிறப்பாக உழைப்பை விவசாயத்திலிருந்து நகர்த்துவதாகும். விவசாயத்துறைத் தொழிலாளரை வெளித்தள்ளும் போது பொருளாதாரத்தின் ஏனைய துறைகள் அவர்களை உள்ளே இழுத்துக் கொள்ளும். இத்தகைய இழுவிசை, தள்ளுவிசைச் செயற்பாடுகள் தேசிய மட்ட பன்முகப்படுத்தலாகும். அபிவிருத்தியின் போது இத்தகைய பன்முகப்படுத்தல் நிகழும் என்பது ஒரு (Iron Law) இரும்பு விதியாகக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் பெருந்தோட்ட விவசாயத்தை சிறுபயிர் ஏற்றுமதிக்கு மாற்றும் முயற்சிகளும், கிராமிய விவசாயத்தை நெல்லிலிருந்து காய்கறி, பூக்கள், கடலட்டை, ஆயுர்வேத மூலிகை, மீன், பண்ணை உற்பத்திகள் என்பவற்றிற்கு மாற்றும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஆயினும், இந்த பன்முகப்படுத்தல் போதிய

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-3-85)


ளவு திருப்தியுடையதாயில்லை. சிறு பயிர்களான வாசனைப் பொருட்களும் தேயிலை, றப்பர், தெங்கு ஏற்றுமதிகள் எதிர்கொள்ளும் அதேவகைப் பிரச்சனைகளைக் கொண்டுள்ளமை, விவசாயப் பன்முகப்படுத்தலை நிறைவுடையதாக்கவில்லை.

## கைத்தொழில்-இரண்டாம் நிலைத்துறை

கைத்தொழிற் துறை பொருளாதார வளர்ச்சியில் பிரதான இடம் வகிப்பதாகும். பொருளாதார வளர்ச்சி என்பது கைத்தொழில் மயமாக்கலுடன் இணைந்ததாகும். கைத்தொழிற்துறையல்லாத ஏனைய துறைகளின் வளர்ச்சியிலிருக்கும் தடைகளும் தாமதங்களும் கைத்தொழில் மயமாக்கத்தின் தேவையை முதன்மைப்படுத்துகின்றன. நாடுகளின் பொருளாதார வளர்ச்சி தொழில் வாய்ப்பு உருவாக்கம், ஏற்றுமதியபிவிருத்தி என்ற நோக்கில் கைத்தொழில் துறையின் வளர்ச்சி அவசியம் வேண்டப்படுகின்றது. தொழில் வாய்ப்பைப் பெருக்குவதன் மூலம் மக்களின் மெய்வருமானத்தை உயர்த்துவதில் இத்துறையின் வளர்ச்சி முக்கிய பங்கு பெறுகின்றது. பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது, கைத்தொழிற்துறையின் பங்கு அதிகரித்துச் செல்வதற்குப் பின்வரும் காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன.

1) கைத்தொழிற் பொருட்களின் நிரம்பல் நெகிழ்ச்சியுடையது. காலநிலை இதைக் கட்டுப்படுத்துவதில்லை. ஒழுங்கு முறையான நிறுவனங்கள் மூலப்பொருட்கள், நடைபெறும் வேலை, முடிந்த பொருட்கள் என்ற பல வடிவில் இருப்புக்களைப் பேணுவதால் விலை உயர்வுக்கேற்ப நிரம்பலை மாற்றியமைத்து இலாபம் உழைக்க முடியும்.

2) இப் பொருட்களின் கேள்வியின் வருமான நெகிழ்ச்சி ஒன்றிலும் கூடியதாகும். வருமானம் அதிகரிக்கும் போது அவ்வதிகரிப்பிற் பெரும் பகுதி கைத்தொழில் ஆடம்பரப் பாவனைப் பொருட்களில் செலவிடப்படும். இதன் காரணமாக கைத்தொழிற் பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்கும். இதனல் ஏற்றுமதியை அதிகரித்து செலவாணியை மிகையாக உழைக்கலாம். ஜப்பான் (1986 ன்படி) ஐக்கிய அமெரிக்காவுடனுன வியாபாரத்தில் 7700 மில்லியன் யென் மிகை உழைக்க முடிந்தமை இவ்வகை ஏற்றுமதிகளினுலேயேயாகும்.

3) கைத்தொழிற் துறையில் உற்பத்தி வேறுக்கம் அதிகளவில் சாத்தியமாகும். இதனுல் ஒரு உபயோகத்திற்கான பண்டத்தையே பல்வேறு வடிவில் பல்வேறு விலைகளில் வெவ்வேறுபட்ட சந்தைகளில் விற்க முடியும். இது பொருளின் மொத்த கேள்வியை அதிகரிக்கும். இதனுல் இத்துறை வளர்ச்சி வருமானத்தை உயர்த்தும்.

4) கைத்தொழில்கள் பல உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வியை உருவாக்கக் கூடியன. ஒரு கைத்தொழிலின் இறுதிக் கேள்வி முதலில் அப் பண்டத்துக்கான உள்ளீடுகளின் கேள்வியைத் தூண்டி விடும். இதனுல் நடுத்தரப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கும். வீடமைப்பானது மரம், சீமெந்து செங்கற்கள், ஓடுகள், உலோகம் போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்கிவிடும். தொடர்ந்து அவற்றின் மூலப்பொருள் உற்பத்தியையும் தூண்டிவிடும். அவற்றைக் கொண்டு செல்லும் போக்குவரத்து சேவையின் கேள்வியும் கூடும். அவற்றைப் பழுதுபார்க்கும் தொழிலின் கேள்வியும் கூடும். இஃது இப்படியே சென்றுகொண்டிருக்கும், தொழில் வாய்ப்பும் பெருகிச் செல்லும்.

5. கைத்தொழிற் துறையில் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியை நன்கு பிரயோகிக்க முடியும். இதனுல் உற்பத்தித் திறன் அதிகரிக்கும், உற்பத்தி கூடி பொருள் நிரம்பலும் கூடிவிடும். புதிய தொழில்நுட்பத் துறையில் தொழில் வாய்ப்புக் கூடி வருமானம் உயர்வதாலும், கைத்தொழிற்பொருட் கேள்வி அதிகரிக்கும்.

கைத்தொழிற்துறை வளரும்போது விவசாயத்துறைக்கான வளமாக்கி, இரசாயனம், உழவுயந்திரங்கள் போன்ற தொழில்களும், வளர்ச்சியடையும். இதனுல் விவசாயத்துறை நவீனமயமாகும்.

அப்போது அத்துறையினரின் வருமானம் உயரும். விவசாயிகள் கைத்தொழிற் பாவனைப் பொருட்களுக்கான சந்தையைஏற்படுத்துவர். கைத்தொழில்பல முனைகளிலும் விரிவடைய அதிக ஊழியரை உறிஞ்சிக்கொள்ளும். இலங்கையின்பொது முதலீட்டுத் திட்டத்திலும் கைத்தொழில் வளர்ச்சி பேணப்பட்டால் கைத்தொழில் அல்லாத ஏனைய துறைகளின் வளர்ச்சியின் மீது அது சாதகமான தாக்கங்களை ஏற்படுத்த முடியும் எனக் கூறப்பட்டுள்ளது.

6. நாடுகளின் மொத்த உற்பத்திப் பெருக்கம் என்பது மாத்திரமன்றி "பிரதேச சமநிலை" என்ற கருத்தும் அரசியல் சமூக ரீதியில் வலுவடைந்து வருகிறது. பலமொழி, இன, மத மக்களைக் கொண்ட வளர்முக நாடுகளில் ஒவ்வொரு பிரதேசத்திலும் தொழில் வாய்ப்பு, வருமானம் என்பவற்றை அதிகரிக்க வேண்டிய தேவையுண்டு. இதற்கு பிராந்திய தன்மைக்கேற்ப சிறிய, நடுத்தரக்கைத் தொழில்களை ஊக்குவிப்பது அவசியமாகிறது. பிராந்திய மட்டத்தில் பொருத்தமான தொழில்நுட்ப அபிவிருத்தியை ஏற்படுத்தவும் கைத்தொழில் மயமாக்கம் உதவுகிறது.

இக்காரணங்களின் அடிப்படையிற்றான் கைத்தொழிற் துறையின் சதவீதப்பங்கு உயரும்போது பொருளாதாரம் அபிவிருத்தி அடையும் எனப்படுகிறது.

## சேவைகள் -மூன்றும் நிலைத்துறை

நாடுகளின் முன்னேற்றத்தைச் சேவைகளின் வளர்ச்சியும் தீர்மானிக்கிறது. சேவைகள்துறை பொருளாதாரத்தின் உள்ளமைப் புத்துறை (Infra—Structure) என்ற வகையில் வளர்ச்சியின்பின்னணியாக அமைகிறது. இதன் முக்கியத்துவம் இருவகையிலமைகிறது.

1. விவசாயம், கைத்தொழில் போன்ற துறைகளின் வளர்ச்சிக்கான ஆதார சேவைகளை வழங்குகிறது. வளமாக்கிகள், இரசாயனம், எரிபொருள் கைத்தொழில் மூலப்பொருட்கள் இயந்திர உபகரணங்கள் போன்றவற்றை உற்பத்திப் பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லவும். உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லவும் தேவையான ஊழியத்தைக் கொண்டுசெல்லவும் போக்கு வரத்து உதவுகிறது.

இத்துறையினரின் கொள்வனவுக்கும் சந்தைப்படுத்தலுக்கும் நிதியுதவி அவசியமாகிறது. பொருளாதாரத்தில் விவசாயமும், கைத்தொழிலும் வளரும் போது நிதித்தேவை விரிவடையும், அப்போது நிதிநிறுவனங்கள், பணச் சந்தை என்பன வளர்ச்சியடையும்.

உற்பத்திப் பெருக்கம் ஏற்படும் போது மூலப்பொருட்கள், முடிவுப் பொருட்கள் என்பவற்றைக் களஞ்சியப்படுத்தும் சேவையும் விரிவடையும். அவற்றின் பாதுகாப்புக் கருதி அவற்றைக் காப்புறுதி செய்வதும் கூடிச்செல்லும். இவ்வாறு காப்புறுதிச் சேவைகள் விரிவடையும்.

இவ்வாறு உற்பத்தி விரிவடையும் போது சந்தைப்படுத்துவதும் விரிவடையும். இதனால் மொத்த சில்லறை வியாபாரமும், ஏற்றுமதியும் வளர்ச்சியடையும். இவை தொடர்பான தரகு நிலையங்கள் விளம்பர நிறுவனங்கள் என்பனவும் வளர்ச்சியடையும். இவற்றிடையான தொடர்புகள் வளர்ச்சியடைய தொடர்பூட்டல் சேவையும் நன்கு விரிவடையும்.

இவற்றை ஒழுங்குபடுத்தவும், பாதுகாக்கவும் கூடியவகையில் அரசாங்கம் தனது பாதுகாப்புத்துறையை விரிவுபடுத்த வேண்டியேற்படும். நிர்வாகத்தையும் ஒழுங்குபகுத்தி பன்முகப்படுத்த வேண்டிய நிலையேற்படும்.

இவ்வாறுகவே உற்பத்தித்துறைகளுடன் இணைந்து சேவைகள்துறை விரிவடைய அதன் மொத்த பெறுமதி உயர்வதோடு சதவீதப்பங்கும் உயர்ந்தே செல்லும். இத்துறையிலான தொழில் வாய்ப்பும்

கூடியே செல்லும். நேரடியாகவும், மறைமுகமாகவும் இத்துறைகளில் தொழில் வாய்ப்பு அதிகரித்துச் செல்லும்.

2) விவசாயம் கைத்தொழில் போன்ற துறைகளில் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட தொழில் வாய்ப்பும் ஏற்படும். இதனுல் மக்களுக்குப் புதிய வருமானம் கிடைக்கும். வருமான அதிகரிப்பும் ஏற்படும். இதன்படி குடும்ப வருமானம் உயரும். அவர்கள் தமது வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்திக் கொள்ள விரும்புவர். இத்தகைய மேல்நிலை நோக்கிய அக்கறையானது சேவைத்துறையை விரிவடையச் செய்யும்.

மக்கள் வருமானம் உயரும்போது மேலதிக வருமானத்தை சேமிக்கத் தொடங்குவர். இதனுல் வங்கிகள் வளர்ச்சியடையும். சேமிப்பை முதலிட முனைவர். இதனுல் ஆவணங்கள் முதலீட்டுப் பத்திரங்களின் பாவனை அதிகரிக்கும். அவை தொடர்பான முதலீட்டுக் கம்பனிகள், கழிவுசெய்யும் நிலையங்கள், தீர்வகங்கள் வளர்ச்சியடைய பணச்சந்தை மூலதனச் சந்தை என்பனவும் வளரும்.

இவற்றுடன் இணைந்தவகையில் தொடர்பூட்டல் சேவை வளரும், மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்போது தொலைபேசி, இன்றர்கம் போன்றவற்றை அதிகம் பயன்படுத்துவர். இதனுல் தொடர்பூட்டல் விரிவடையும்.

மக்களின் வருமானம் அதிகரிக்க ஓய்வை மகிழ்ச்சியாக செலவிட விரும்பி பணம் செலவிடுவர். இதனுல் "உள்ளூர் சுற்றுலா" வளர்ச்சியடையும். ஹோட்டல்களும் வளர்ச்சியடையும். அதேபோல் வானெலி தொலைக்காட்சிச் சேவைகளும் நன்கு வளர்ச்சி பெறும்.

வாழ்க்கைத்தரம் உயர, புதிய புதிய பண்டங்களைப் பயன் படுத்துவதில் மக்களிடையே போட்டி ஏற்படும். இதனுல் மக்களின் கொள்வனவுப் பழக்கம் சுறு சுறுப்படையும். இதனுல் வியாபார வளர்ச்சி ஏற்படும்.

மக்களின் வருமானம் உயரும் போது எதிர்காலத்திற்குரிய பாதுகாப்பினைத் தேடும் நாட்டம் உயரும். இதனுல் ஆயுட்காப்புறுதி அதிகரிக்கும். தமது வாகனங்கள், சொத்துக்கள் என்பனவற்றுக்கும் காப்புறுதி செய்யத் தொடங்குவர். இதனுல் காப்புறுதிச் சேவையும் வளர்ச்சி பெறும்.

வருமான மட்டம் உயரும் நிலையில் இருக்கும் குடும்பங்கள் சொந்தமான போக்குவரத்து வாகனங்களை கொள்வனவு செய்தல் கூடிச் செல்லும். குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தனித்தனியாக கார் வைத்திருக்கும் நிலை ஏற்படும். இதனுல் நண்பர்களைச் தரிசித்தல், பொழுதுபோக்கு பிராந்தியங்களுக்குச் செல்லுதல் போன்ற நடவடிக்கைகளும் அதிகரிக்கும். இவற்ருல் போக்குவரத்துச் சேவை இயல்பாகவே விரிவடையத் தொடங்கும்.

இவ்வாருக நேரடியாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையிலும் சேவைகள்துறை விரிவடையும். இதனுல் இவற்றின் சதவீதப் பங்கும் கூடிச் செல்லும். தொழில் வாய்ப்பும் பெருகிச் செல்லும். வளர்ச்சியடைந்த நாடுகளில் இத்தகைய மாற்றங்களை காணமுடிகிறது.

# இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பு மாற்றங்கள்

கடந்த காலங்களில் இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பில் தொடர்ச்சியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனுல் இந்தத் துறை சார்ந்த மாற்றங்களில் ஒரு சீரான போக்கினை அவதானிக்க முடியவில்லை. இதனுல் அவை தெளிவான பொருளாதார மாற்றத்தையும் காட்டவில்லை.

பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் பின்வரும் முறையில் நோக்கப்படுகிறது.

(1) மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (GDP) அல்லது மொத்தத் தேசிய உற்பத்திக்குரிய துறைசார் பங்களிப்பு (சதவீதம்) மாற்றங்கள்.

(2) மொத்தத்தொழில் வாய்ப்பிலான துறைசார் பங்களிப்பு மாற்றங்கள்.

இலங்கையில் தொழில் வாய்ப்புக்கள் பற்றித் துறை வாரியான தரவுகளை கால ஒழுங்கின்படி பெறுவது கடினமானதாயுள்ளது, இதனுல் தொழில் வாய்ப்பு சார்ந்த பங்களிப்பு மாற்றங்களை ஒப்பிடுதல் இங்கு கவனிக்கப்படவில்லை,

தேசிய உற்பத்தி பற்றிய புள்ளி விபரங்களை பயன்படுத்தும்போதும்; அடியாண்டுகள் அடிக்கடி மாற்றப்பட்டமை, முதற் துறை, துணைத்துறை, சேவைத்துறை என்பவற்றில் உள்ளடக்கும் உபதுறைகள் பற்றிய பகுப்புகள் மாற்றப்பட்டமை போன்ற காரணங்களினுல் அவற்றையும் முழுக்கால அளவுக்கும் ஒப்பிடுதல் கடினமாகவேயுள்ளது. எனினும் இங்கு 1970—1987 காலப் பகுதியிலான துறைசார் பங்களிப்பு தொடர்பான மாற்றங்கள் நோக்கப்படுகின்றன. பொருளாதாரம் வளர்ச்சியடைவதைக் காட்டக்கூடிய வகையில் கட்டமைப்பு மாற்றங்கள் பின்வருமாறு அமைவது விரும்பப்படுகிறது.

(அ) விவசாயத்துறையின் மொத்தப் பெறுமதி அதிகரித்து வரவேண்டும். ஆனுல் மொத்தத் தேசிய உற்பத்தியிலான அதன் சதவீதம் படிப்படியாகக் குறைந்து வரவேண்டும்.

(ஆ) கைத்தொழிற் துறையின் மொத்தப் பெறுமதி அதிகரித்து வரவேண்டும். மொத்தத்தேசிய உற்பத்தியில் அதன் சதவீதமும் படிப்படியாக அதிகரித்து வரவேண்டும்.

(இ) சேவைகள் துறையின் மொத்தப் பெறுமதி அதிகரித்துவர வேண்டும். மொத்தத் தேசிய உற்பத்தியிலான அதன் சதவீதமும் படிப்படியாக அதிகரித்துவர வேண்டும்.

இலங்கையின் தேசிய உற்பத்தி தொடர்பாக இத்தகைய மாற்றங்கள் மிகத் தெளிவானவையாகக் காணப்படவில்லை.

இலங்கையின் பொருளாதாரத்தையும் பிறநாடுகளைப் போன்று மூன்று பிரதான துறையாகப் பிரித்து நோக்க முடியும். அவை

(1) விவசாயம் (முதற்துறை)
(2) கைத்தொழில் (இரண்டாம் துறை)
(3) சேவைகள் (மூன்ரும் துறை)

இத்துறைகளின் பங்களிப்பினை, 1970 — 1987 காலப்பகுதிக்குரியதைப் பின்வரும் அட்டவணை தெள்வாகக் காட்டுகிறது.

| | துறைகள் | 1970 | 1977 | 1979 | 1982 | 1987 |
|---|---|---|---|---|---|---|
| | விவசாயம், காட்டுத் தொழில், வேட்டையாடல், மீன்பிடித்தல் | 28.8 | 26.9 | 25.2 | 27.4 | 24.2 |
| 1 | **முதற்துறை** | **28.8** | **26.9** | **25.2** | **27.4** | **24.2** |
| | சுரங்கத் தொழில், கல் அகழ்வுத் தொழில் | 0.7 | 3.2 | 3.5 | 2.5 | 2.8 |
| | தயாரிப்புத் தொழில் | 16.9 | 14.7 | 14.5 | 14.9 | 16.5 |
| | கட்டிடவாக்கம் | 5.7 | 3.9 | 5.2 | 8.7 | 7.4 |
| | மின்சாரம், வாயு, நீர், நலத்துறைப் பணிகள் | 0.8 | 0.8 | 1.0 | 1.2 | 1.3 |
| 2 | **இரண்டாம் துறை** | **24.1** | **22.6** | **24.2** | **27.3** | **28.0** |
| | போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 9.7 | 9.4 | 9.3 | 11.6 | 11.9 |
| | மொத்த, சில்லறை வியாபாரம் | 19.5 | 18.7 | 19.3 | 21.6 | 21.6 |
| | வங்கித்தொழில், காப்புறுதி, மெய்ச்சொத்துக்கள் | 1.2 | 1.8 | 1.9 | 2.4 | 4.8 |
| | குடியிருப்புக்களின் உரிமை | 3.1 | 3.0 | 2.8 | 3.6 | 3.1 |
| | பொது நிர்வாகமும், பாதுகாப்பும் | 4.0 | 4.9 | 4.0 | 3.2 | 4.8 |
| | ஏனைய சேவைகள் | 11.2 | 13.1 | 13.0 | 5.0 | 3.9 |
| 3 | **மூன்றும் துறை** | **48.7** | **50 9** | **50.3** | **47.4** | **50.1** |
| | மொத்த உள்நாட்டுற்பத்தி (காரணிச் செலவு விலையில்) | 101.7 | 100.4 | 100.6 | 102.1 | 102.3 |
| | தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் | – 1.7 | – 0.4 | – 0.6 | – 2.1 | – 2.3 |
| | மொத்தத் தேசிய உற்பத்தி (காரணிச் செலவு விலையில்) | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்; மத்திய வங்கி மீளாய்வு 1977, 1987

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

## முதற்துறை :

இலங்கையில் இவற்றில் ஏற்றுமதி விவசாயமான பெருந்தோட்ட உற்பத்திகளும், உள்நாட்டு விவசாயமான கிராமிய விவசாய உற்பத்திகளும் அடங்குகின்றன. ஏற்றுமதி விவசாயத்தில் தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திகளும், கிராமிய விவசாயத்தில் நெல்லுற்பத்தி, மீன் பிடித்தல் என்பனவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றுடன் வேட்டையாடல், காட்டுத் தொழில் பூங்கனிச் செய்கை, விலங்கு வேளாண்மை, சிறு பயிருற்பத்தி போன்றனவும் அடங்குகின்றன இவை பிரதானமாக ஐந்து உப பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவற்றின் பங்களிப்பு பின்வருமாறு காணப்படுகின்றது,

அட்டவணை

| விவசாயத்துறையின் உபதுறைகள் | 1987ல் உள்ளபடி விவசாயத்தின் சதவீதங்கள் |
|---|---|
| நெல் | 24 |
| தேங்காய் | 13 |
| தேயிலை | 10 |
| இறப்பர் | 3 |
| ஏனையவை | 50 |
| மொத்தம் | 100 |

ஆதாரம்:

நெல்லுற்பத்தி மரபு வழியான கிராமிய விவசாயமாயுள்ளது. இது தொடர்ந்து பிரதான இடத்தைப்பெற்று வருகிறது. கிராமியத் துறையில் இவற்றுடன் உப உணவுப் பயிர்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதேபோல் பெருந்தோட்டத்துறையில் ஏற்றுமதி விவசாயமான தேயிலை, தெங்கு, உற்பத்திகள், இறப்பர் என்பன முதன்மையுடையனவாயுள்ளன. கறுவா, ஏலம், கராம்பு கொக்கோ, கோப்பி போன்றன சிறு ஏற்றுமதிப் பயிர்களேயாகும் ; இவற்றுடன் மீன் பிடி, காட்டுத்தொழில், வேட்டையாடல் போன்றனவும் அடக்கப்படுகின்றன.

இத்துறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதும் ஒரே மாதிரியாக மாற்றமடைந்திருக்கவில்லை. இத்துறையில் கூட்டிய பெறுமதி தளம்பிச் செல்வதாகவே காணப்பட்டுள்ளது. இதனால் விவசாயத் துறையின் பங்களிப்பை மதிப்பிடுவது கடினமாயுள்ளது. பின்வரும் அட்டவணை இந்த மாற்றங்களைக் காட்டுகிறது.

| வருடங்கள் | மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயத்தின் சதவீதம் |
|---|---|
| 1970 | 28 . 8 |
| 1977 | 26 . 9 |
| 1979 | 25 . 2 |
| 1982 | 27 . 4 |
| 1987 | 24 . 2 |

குறிப்பு : இதில் 1970, 1977, 1979ஆம் ஆண்டு தரவுகள் 1970ம் ஆண்டை அடியாண்டாகவும் 1982, 1987ம் ஆண்டுத் தரவுகள் 1982ம் ஆண்டை அடியாண்டாகவும் கொண்டுள்ளன.

இத்தகைய மாற்றங்கள் பெருமளவிற்கு ஆட்சியாளர்களின் பொருளாதார துறை சார்ந்த ஆதரவுகளின் தன்மையில் தங்கியுள்ளன. இந்த ஆதரவுகள் அரசிறை, நாணய மாற்றுவிகிதங்கள் போன்றவற்றின் மூலம் அதிகம் வெளிப்படுத்தப்பட்டன.

இந்த விவசாயத்துறையின் மாற்றங்கள் காலநிலை, விலைகள், உற்பத்திச் செலவுகள் உள்நாட்டு, வெளிநாட்டு கேள்வி தொடர்பான மாற்றங்கள், நிதிச் செலவுகள், உள்ளீடுகளின் கிடைப்புத் தன்மை, களஞ்சியப் படுத்தல், சந்தைப் படுத்தல் வசதிகள் போன்ற பலவற்றினுலும் பாதிக்கப்பட்டிருந்தன.

விவசாயத் துறையில் நெல், தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திகள் போன்ற பாரம்பரிய துறைகளின் பங்கு ஏனையவற்றிலும் குறைவாக உள்ளது. ஆனுல் வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் கூடிய பங்கினை இவை பெற்று வருகின்றன. ஏனைய துறைகள் முதன்மையான இடத்தைப் பெற்ற போதிலும் நிதி ஒதுக்கீடு தொடர்பாக அவற்றில் அதிக அக்கறை காட்டப்படவில்லை.

விவசாயத் துறையின் சதவீதங்கள் சில காலங்களில் வீழ்ச்சியடைந்திருப்பினும். அது தொடர்வதாகவோ, அந்நிலை உறுதிப் படுத்தப்படுவதாகவோ இல்லை. இது இலங்கையின் வளர்ச்சி நிலையின் உறுதியின்மையை வெளிப்படுத்துவதாகும். விவசாயத் துறையானது இயந்திரமயமாக்கப்படுவது குறைவாயிருந்தது. அத்துடன் வர்த்தக மயமாகும் தன்மை கிராமிய விவசாயத்தில் மிகமெதுவாகவே நிகழ்ந்தது. பலவருடங்களில் பாரம்பரியமற்ற துறைகளின் பங்கு மறையான பங்களிப்பாயும் காணப்பட்டன. ஆனுலும் 1978 – 86 காலப்பகுதிகளில் மறையான பங்களிப்பு அவற்றில் காணப்படவில்லை.

1977ன் பின்னுன தாராள இறக்குமதி உள்ளீடுகளின் கிடைப்புத்தன்மையை அதிகரித்த போதிலும் நாணய மதிப்பிறக்கத்தினுல் அவற்றின் உற்பத்திச் செலவுகள் கூடியே இருந்தன. துரித மகாவலித் திட்டத்தின் H பகுதியில் நெல்லுற்பத்தி குறிப்பிடத்தக்களவு கூடியே இருந்தது, ஆயினும் மரபுவழி நெல்லுற்பத்திப் பிரதேசங்கள் பல வறட்சியினுல் பாதிக்கப்பட இத்துறையின் வளர்ச்சி துல்லியமாகத் தெரிய முடியாமற் போயிற்று. அபுதாபி செயற்திட்டம் நெதர்லாந்து செயற் திட்டம், ஆசிய அபிவிருத்தி செயற் திட்டம், போன்றவற்றுல் மீன்பிடித் துறையில் ஊக்கமளிக்கப்பட்ட போதிலும் வடக்கு கிழக்கு மாகாண குழப்ப

நிலைமைகள் இத்துறை வளர்ச்சியைப் பாதித்தே வந்தன.

இலங்கையின் விவசாயத்துறையின் கட்டமைப்பு மாற்றங்கள் பொருளாதார வளர்ச்சி நிலையை உறுதியாக வெளிப்படுத்தக் கூடியதாயில்லை என்பது தெளிவாகிறது.

## துணைத்துறை

இலங்கையில் துணைத் துறையாகிய இதில் சுரங்கத் தொழில், கல் அகழ்தல், தயாரிப்புத் தொழில், கட்டிடவாக்கம், மின்சாரம். வாயு, நலத்துறைச் சேவைகள் என்பன அடங்கும். இயந்திர சாதனங்களையும், வலுப்பொருட்களையும் பயன்படுத்தி நிகழும் எல்லா உற்பத்திச் செய்முறைகளும் கைத்தொழில் என்பதில் சேர்க்கப்படுகின்றன. மின்சாரம், வாயு போன்றவற்றின் உற்பத்தியிலும் இயந்திரங்கள், தொழிற்சாலைகள் பயன்படுகின்றன. மின்வலு உற்பத்திக்கு அனல் மின் விசை உருளைகள் பயன்படுத்தப்படும்போது அதிகளவு பெற்றோலியம் நுகரப்படுகின்றது. சீமெந்துத் தொழிற்சாலைகள் போன்றவற்றிலிருந்தும் மின்வலு உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனுல் மின்சாரம். வாயு. நலச்சேவைகள் போன்றவற்றையும் கைத்தொழிலில் சேர்த்துக்கொள்கிறோம்.

இலங்கையில் இத்துறையின் பங்கு குறிப்பிடத்தக்களவில் மாற்றமடைந்து வந்துள்ளது,

| வருடங்கள் | மொத்தத் தேசிய உறபத்தியிலான கைத்தொழிலின் சதவீதம் |
|---|---|
| 1970 | 24.1 |
| 1977 | 22.6 |
| 1979 | 24.2 |
| 1982 | 27.3 |
| 1987 | 28.0 |

இவ்வாறு இவற்றின் பங்கு 1970 — 1977 காலப்பகுதிக்குள் வீழ்ச்சிப் போக்கையே காட்டியுள்ளன. இக்காலத்தில் சுரங்கம், கல் அகழ்தல் போன்ற தொழில்கள் 0·7 சதவீதத்திலிருந்து 3 2 சதவீதமாகக் கூடியிருந்தன. இது இரத்தினக்கல் அகழ்வுத் தொழிலின் விரிவாக்கத்தைக் காட்டி நிற்கிறது. மின்சாரம், வாயு, நலச் சேவைகள் மாற்றமின்றி 0.8 சதவீதத்திலேயே தொடர்ந்திருந்தன. மின்வலு உற்பத்தி சார்ந்த அதிகரிப்பு இக்காலத்தின் பின்புதான் ஏற்பட்டன.

கட்டிடவாக்கம் 5·7 சதவீதத்திலிருந்து 3.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. தயாரிப்புத் தொழில் 16.9 சதவீதத்திலிருந்து 14.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தன. இக்காலத்தில் அரச துறைக் கைத்தொழில்கள் விரிவடைந்திருந்த போதும், தனியார்துறைக் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டிருக்கவில்லை. கைத்தொழில்களுக்கான உள்ளீடுகள் தொடர்பான இறக்குமதிகளுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தமை காரணமாக தனியார்துறையில் நிறைபோட்டி ஏற்பட்டிருக்கவில்லை.

இக்காலப் பகுதியில் காணப்பட்ட கைத்தொழில்கள் நான்கு மாதிரிகளில் நோக்கப்பட்டன,

| வகை | உற்பத்தி அலகுகள் | கைத்தொழிலின் சதவீதம் |
|---|---|---|
| 1 பாரம்பரிய 'கைப்பணி, குடிசைக் கைத்தொழில் சிறிய அலகுகள் | 100,000 | 10% — 15% |
| 2 தனியார் துறைக் கைத்தொழில் சிறிய, பெரிய அலகுகள் | 3,000 | 45% |
| 3 கூட்டுத்தாபனங்கள் முதற் பொருள் உற்பத்தி அலகுகள் | 30 | 40% |
| 4 கூட்டுறவுக் கைத்தொழில் தொழிற் செறிவான அலகுகள் | 500 | — |

இத்தகைய கைத்தொழில் மாதிரியில் தனியார் கைத்தொழிற்துறைக்கான வரிச் சலுகைகள், நிதிசார் ஊக்குவிப்புக்கள் போதியளவில் வழங்கப்படாதமையால் இவை வளரமுடியவில்லை,

1979—87 காலப்பகுதிகளில் கைத்தொழிற்துறையின் பங்கு ஓரளவு வளர்ச்சிப் போக்கை காட்டியுள்ளன,

சுரங்கம், கல்அகழ்தல் போன்ற கைத்தொழில்கள் கீழ் நோக்கிய தளம்பலைக் காட்டி நிற்கின்றன, இரத்தினக்கல் அகழ்வுப் பிரதேசங்களின் கால நிலைப் பாதிப்புக்கள், தனியார் நடைமுறைப் பிரச்சினைகள் இவற்றுக்குப் பொறுப்பாயிருந்தன.

கட்டிடவாக்கம் அரசதுறையில் வளர்ச்சி பெற்றிருந்தது. துரிதமகாவலி, ஒரு மில்லியன் வீடமைக்கும் திட்டம், நகர்ப்புற வர்த்தக கட்டிடங்கள், முதலீட்டு ஊக்குவிப்பு வலையம். புதிய பாராளுமன்ற நிர்மாணம் போன்றன இவ்வாறனவை. இதே போல் தனியார் துறையில் வீடமைப்பு. வர்த்தக நிலையங்களின் நிர்மாணம் என்பனவும் பெருகியிருந்தன, இவற்றால் கட்டிடவாக்கத்துறையின் பங்கு 1979ல் 5·2 சதவீதத்திலிருந்து 1984ல் 7.4 சதவீதமாயிற்று. ஆனால் 1986 இன் பின் இதில் மந்த போக்கு தென்பட்டதால், 1987 ல் 7·4 சதவீதமாக காணப்பட்டது.

விக்ரோரியா செயல்திட்டம் போன்றன செயல்படத் தொடங்கியதால், மின்வலு உற்பத்தி இக்காலப்பகுதியில் வளர்ச்சியைக் காட்டியது. 1979 ல் 1·0 சதவீதமாயிருந்து 1987ல் 1·3 சதவீதமாகக் கூடியிருந்தது.

தயாரிப்புத் தொழில் இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைக் காட்டியது. இவற்றின் பங்கு 1979 இல் 14·5 சதவீதமாயிருந்து; 1987ல் 16·5 சதவீதமாகக் கூடியது. இக்காலப் பகுதியிலான உற்பத்தி சார்ந்த கைத்தொழில்களை மூன்று மாதிரியில் நோக்க முடியும்.

| வகை | உற்பத்தி அலகுகள் | கைத்தொழிலின் சதவீதம் |
|---|---|---|
| 1 ஏற்றுமதிப் பதப்படுத்தல் முதலீட்டு வலயமும், பெருந்தோட்டத்துறையும் | - | 22% |
| 2 தொழிற்சாலைக் கைத்தொழில் கொழும்பிலும், உப நகரங்களிலும் உள்ளவை | ௨000 | 65% |
| 3 சிறுகைத்தொழில் நகரங்கள், அவற்றுக்கு வெளியேயும் உள்ளன | 20,000 | 13% |

இக்காலப்பகுதியில் தனியார் தமது எல்லா உள்ளீடுகளையும் போதியளவில் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டதால் உள்நாட்டு வெளிநாட்டுத் தனியார் கைத்தொழில்கள் வளர்ச்சியடைய முடிந்தது அரசின் வரிச்சலுகைகள், நிதியுதவிகள், வங்கிச் சேவைகள், போக்குவரத்து, தொடர்பூட்டல் சேவைகளின் வளர்ச்சி என்பனவும் போதிய ஊக்குவிப்புக்களை வழங்கியிருந்தன.

அரச துறை உற்பத்திக் கூட்டுத்தாபனங்களும் இக்காலத்தில் உற்பத்தியில் ஈடுபட்டன. ஆயினும் இவற்றில் 70 சதவீதமானவை ஏமாற்றம் தருவனவாயிருந்தன. இறக்குமதிப் போட்டி, முகாமைத்துவ திறமையின்மை, அளவுக்கு மீறிய அரசியல் தலையீடு போன்றன இவற்றுக்குப் பொறுப்பாயிருந்தன.

எனினும் தனியார்துறை விரிவாக்கம் இக்காலத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாகத் தோன்றுகிறது. ஏற்றுமதிக் கைத்தொழில் வளர்ச்சியினை வெளிப்படுத்தி நிற்பதாலும் கைத்தொழிற்பங்கு கூடியிருத்தல் சாதகமான மாற்றமேயாகும்.

## சேவைகள் துறை

இது மூன்றும் நிலைத்துறையெனப்படுகிறது. பொருளாதார அபிவிருத்தியிலும், கட்டமைப்பு மாற்றத்திலும், இத்துறை பிரதான அம்சமாகவுள்ளது. இவற்றில் வியாபாரம் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. 1970ல் 19.5 சதவீதத்திலிருந்து 1987ல் 21.6 சதவீதத்துக்கு கூடியது. இத்தகைய வியாபார வளர்ச்சியென்பது மொத்த, சில்லறை வியாபாரத்தினதும் வெளிநாட்டு வியாபாரத்தினதும் வளர்ச்சியாகும். தாராள வர்த்தகக் கொள்கையின் விளைவாகவும், செலாவணிக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதாலும், தடையற்ற சந்தைச் சக்திகளின் தொழிற்பாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டதனாலும் ஏற்பட்ட மாற்றங்களாக இவை அமைந்தன. இதேபோல் 1977ன் பின்னுன முக்கிய விரிவாக்க நிலையைக் காட்டி நிற்பது போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் சேவைகளாகும். தனியார்துறையினர் இவற்றில் தடையின்றி இயங்க அனுமதிக்கப்பட்டதாலும், வாகனங்கள், கருவிகளின் இறக்குமதி அனுமதிக்கப்பட்டதாலும் ஏற்பட்டிருந்தன.

இதே காலத்தில் நாட்டில் பணச்சந்தைத் தொழிற்பாடுகளும் விரிவடைந்தன. வங்கிகள், நிதிநிறுவனங்களின் தொழிற்பாடுகள் விரிவடைந்தன. கடல் கடந்த வங்கிகளின் (Off – Shore Banking) தொழிற்பாடுகளும் இக்காலத்தில் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சிபெற்றிருந்தன. இதனுல் 1977க்குப் பின் இவை நன்கு வளர்ச்சியடைந்திருந்தன. இத்துறையின் பங்கு 1977ல் 1.8 சதவீதமாயிருந்து 1987ல் 4.8 சதவீதமாக வளர்ச்சி பெற்றிருந்தது. ( தொடர்ச்சி 56ம் பக்கம் )

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழா... தெற்... ...கம்.

# 'பெருந்தோட்டம்' : ஓர் எண்ணக்கரு ரீதியான அறிமுகம்

**வி. நித்தியானந்தம்**

இலங்கையின் நவீனகாலப் பொருளாதார அபிவிருத்தியும் அதன் பிரச்சினைகளும் பெருந்தோட்ட வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்தவையாகும். அவ்வகையில் இலங்கையின் பொருளாதார வரலாற்றையோ அதன் தற்கால அமைப்பினையோ பெருந்தோட்டங்கள் பற்றிய தகுந்த அறிவின்றி விளங்கிக் கொள்வது கடினம். அதனால் இலங்கைக்கும் பொருந்தோட்டங்களுக்குமிடையிலான தொடர்பினை ஒரு கட்டுரைத்தொடராகப் படைப்பதற்குக் கலாநிதி வி. நித்தியானந்தன் சம்மதித்துள்ளார். இந்த ஆய்வுக் கட்டுரைத் தொடரின் முதலாவது கட்டுரை இது.

ஐரோப்பியர் புதிய பிரதேசங்களைத் தேடிக் குடியேற்றங்களை ஆரம்பித்து அவற்றின் உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தத் தொடங்கிய நாள் முதலே பெருந்தோட்டங்கள் ஒரு விவசாய முறையாக வளர்ச்சி அடைந்திருந்தன. எனினும் குறைவிருத்தி நாடுகளின் பெருந்தோட்டங்கள் 19ம் நூற்றாண்டில் பெருநகரப் பொருளாதாரங்களிற் குறிப்பிட்ட சில பண்டங்களுக்கு ஏற்பட்ட உயர்ந்த கேள்வியை அடிப்படையாகக் கொண்டு அயனமண்டல நாடுகளிற் தோன்றியவையேயாகும். இவை அயனமண்டலக் குடியேற்றங்களில் ஏற்கனவே நிலவிய விவசாய முறைமைகளுக்குள் அறிமுகம் செய்யப்பட்டன. அல்லது அம்முறைமைகளின்மீது மேல்வாரியாகத் திணிக்கப்பட்டன. இதன் மூலம் ஏற்பட்ட முக்கிய விளைவு யாதெனில் இப்பிரதேசங்களின் விவசாய அபிவிருத்தி திரிபு பட்டு அது ஏற்றுமதி கருதிய தனியொரு உற்பத்தியில் அல்லது ஒரு சில உற்பத்திகளிற் கூடிய கவனம் செலுத்த முற்பட்டமையேயாகும். உள்நாட்டு உணவுப் பயிர்ச்செய்கை ஓர் இரண்டாந்தர நிலைக்குத் தரம் குறைக்கப்பட்டது. இக்காலம் முதல் பெருந்தோட்டங்கள் குடியேற்ற நாடுகளின் விவசாய அபிவிருத்தியில் ஒரு முக்கிய இடம் வகித்திருப்பது மாத்திரமன்றி அவற்றின் முற்றான பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிப்பதிலும் அவை பெரும்பங்கு கொண்டுள்ளன. இந்நாடுகளின் சமூக அமைப்பிற் பல மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அவை பொறுப்பாக இருந்துள்ளன.

ஏனைய பல குறைவிருத்தி நாடுகளைப் போன்றே இலங்கைப் பொருளாதாரத்தின் தன்மையை உருப்படுத்துவதிலும் பெருந்தோட்டங்கள் முக்கிய பங்கு வகித்துள்ள காரணத்தினால் அவற்றின் தோற்றம், வளர்ச்சி, அவை பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்கள் என்பவை பற்றி அறிவதற்குமுன் அவற்றுக்குக் கருவாக அமைந்த 'பெருந்தோட்டம்' என்ற அலகு பற்றி அறிந்து கொள்வது அவசியமாகின்றது. பெருந்தோட்டம் என்றால் என்ன, அசன் பயிர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றன, அதனமைப்பு எத்தகையது என்பது போன்ற அம்சங்கள் அவ்வளவாக இதுவரை ஆராயப்படவில்லை. இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட அம்சங்களுக்கு முக்கியத்துவம் வழங்கிப் பெருந்தோட்டங்களை வரையறை செய்து, ஒரு விவசாய உற்பத்தியலகு என்ற வகையில் அதன் பண்புகளை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்,

**பெருந்தோட்டம் பற்றிய வரைவிலக்கணம்:**

ஒரு பெருந்தோட்டத்தை வரையறை செய்யுமிடத்துப் 'பெருந்தோட்டம், என்ற

பதம் பல கருத்துக்களை உடையதென்பது கவனிக்கப்பட வேண்டும். அது பிரதான மாக ஒரு விவசாய உற்பத்தி முறைமையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டாலும் பலர் அதனை ஒரு குறிப்பிட்ட பயிரிடுமுறை யாகவன்றி ஒரு நிறுவனமாகவே கருதுவர். சமூகவியலாளர் பெருந்தோட்ட சமூகங்க ளைப்பற்றியும் அபிவிருத்திப் பொருளியலா ளர் பெருந்தோட்டப் பொருளாதாரங்க ளைப்பற்றியும் எடுத்துக் கூறுவர். மேலும் கிறிக் (Grigg. 1974:215) என்ற ஆசிரியர் குறிப்பிடுவது போன்று பெருந்தோட்டம் பற்றிய பல வரைவிலக்கணங்கள் ஒரு குறிப் பிட்ட காலப்பகுதியின் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட வையாகவே காணப்படுகின்றன. ஆரம்ப கால அமெரிக்கப் பெருந்தோட்டம் 19நூற் ருண்டின் பிற்பகுதியில் தூர கிழக்கில் நிறு வப்பட்ட பெருந்தோட்டங்களை விடப் பெரி தும் வேறுபட்டதாகும். அதே போன்று 20ம் நூற்ருண்டின் ஆரம்பம் முதல் பெருந் தோட்டம் உள்நாட்டின் குடியானவருக்குப் பெருமளவு விட்டுக்கொடுக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. இதனுலேயே 'நவீ னவழக்கில் ''பெருந்தோட்டம்'' என்ற பதத்திற்குரிய சரியான கருத்து நன்கு அகப்படாததொன்று' என பின்ஸ் என்ற ஆசிரியர்(Binns 1955 : 32) குறிப்பிடுவது கூடியளவுக்குப் பொருத்தமுடையதொன் ருக உள்ளது. ஆனுல் எத்தகைய கருத் திற் பயன்படுத்தப்பட்டாலும் பெருந் தோட்டம் என்பதன் சாரம் ஒரு பெரும் பண்ணை அலகேயாகும்.

ஜோன்ஸ் (Jones 1968:154) என்ற ஆசிரியர் ஒரு பெருந்தோட்டத்தைப் பின் வருமாறு வரையறை செய்கின்ருர்: ''பெருந் தோட்டம்'' என்பது கால்நடை வளர்ப்பு டன் தொடர்புபடாத விவசாயப் பொருட் களை (கழனிப் பயிர்கள் அல்லது தோட்டப் பயிர்கள்) விற்பனைக்காக உற்பத்தி செய்யும் ஒரு பொருளியல் அலகாகும். இது நுண் ணிய கண்காணிப்பின் கீழ், ஒப்பீட்டு ரீதி யில் மிகப் பெருந்தொகையான, திறமை யற்ற தொழிலாளரை உற்பத்திக்குப் பயன் படுத்துகின்றது. பெருந்தோட்டங்கள் பொதுவாக வருடம் முழுவதிலும் கணச மான ஒரு தொகுதி தொழிலாளரை வேலை யில் ஈடுபடுத்துவதுடன், சந்தைப்படுத்தக் கூடிய ஓரிரு உற்பத்திகளிலேயே வழமை யாகச் சிறப்புநிலையடைகின்றன. உற்பத் திக் காரணிகளை, அதுவும் குறிப்பாக முகா மையையும், ஊழியத்தையும் ஒன்று சேர்க் கும் முறையிலேயே அவை ஏனைய பண்ணை வகைகளிலிருந்து வேறுபடுகின்றன.'

பெருந்தோட்டங்கள் சாதாரணமாகச் சனஅடர்த்தி குறைவாயுள்ள பிரதேசங்களி லேயே நிறுவப்படுகின்றன. ஊழியத்தை இறக்குமதி செய்து அதற்கு வேண்டிய இருப்பிடவசதி, உணவு, கல்வி, மருத்துவ வசதிகள் போன்றவற்றை வழங்க வேண்டி யிருப்பதற்கும் இதுவே காரணமாகும். ஆரம்பத்தில் அடிமை முறையே ஊழிய நிரம்பலுக்குரிய முக்கிய மார்க்கமாக விளங் கியது. ஆனுல் அடிமைமுறை ஒழிப்புடன் ஒப்பந்தத் தொழிலாளர்முறை தோற்றுவிக் கப்பட்டு .அதன்வழி ஏராளமான இந்தியர் களும், சீனர்களும் வேலைக்கமர்த்தப்பட்ட னர்.

பெருந்தோட்டமொன்றின் இன்னெரு தனிச்சிறப்பு யாதெனில் ஏறக்குறைய அதன் உற்பத்திகள் முழுவதுமே பெருந்தோட்டங் களை விட்டுச் செல்வதற்கு முன் ஏதோ ஒரு வகையிற் பதப்படுத்தப்பட வேண்டியனவா யுள்ளன. பெரும்பாலான உற்பத்திகள் பதப் படுத்தாத நிலையிற் பழுதடையக் கூடிய வையாகும். எனினும் வேண்டப்படும் பதப் படுத்தலினளவு பயிருக்குப்பயிர் வேறுபடும். பொதுவாகக் கூறின், பதப்படுத்தற் செய் முறை எந்தளவிற்குச் சிக்கல் நிறைந்ததா யுள்ளதோ, அந்தளவுக்கு அதற்குட்படும் பயிர் பெருந்தோட்டங்களினுல் வளர்க்கப்ப டுவதற்குரிய வாய்ப்புக் கூடுதலாயிருக்கும்

பெருந்தோட்டங்கள் பற்றிய மேற்கூறிய அம்சங்களை உள்ளடக்கும் ஒரு வரைவிலக் கணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட் டாலும் கூடச் சிலவகைக் கண்டனங்களுக் குட்படாமலும் இல்லை. உற்பத்தி அலகினை மாத்திரம் இது உள்ளடக்கிப் பெருந்தோட் டங்களிலிருந்து உருவாகும் பல்வகைச் சமூகத் தொடர்புகளையும் புறக்கணிக்கிற

தென்றும் அந்தளவில் இந்த வரைவிலக்கணம் தவருன பாதையில் இட்டுச் செல்வதொன்றெனவும் கூறப்படுகிறது. இதனுல் உற்பத்தி நடத்தையை மாத்திரம் கொண்டன்றிப் பெருந்தோட்டங்களிலிருந்தெழும் தனித்துவமான சமூகத் தொடர்புகளையும் கொண்டே அவற்றை வரையறை செய்யவேண்டுமெனக் குறிக்கப்படுகின்றது, (Mandle 1972: 57-58) எனினும் நுணுகிப் பார்ப்பின் பெருந்தோட்டமொன்றின் பொருளாதார சமூக அம்சங்கள் ஒன்ருேடொன்று பின்னிப் பிணைந்தவையென்பதும் அவற்றைத் தனித்தனி பிரிப்பது ஓரளவு கடினமானதென்பதும் தெளிவாகும். பெருந்தோட்டங்களின் தோற்றம் இதனை நன்கு எடுத்துக் காட்டும்.

பெருந்தோட்டங்களின் தோற்றம்:

உலகின் பல பாகங்களிற் பெருந்தோட்கள் முதலிற் குடியேற்றங்களுக்குரிய ஒரு கருவியாகவே ஆரம்பித்தன. இவ்வகையில் இவை அதிகாரத்தின் ஓர் அலகாக விளங்கின. குடியேற்றங்கள் குடியேறும் வல்லரசுக்கு வருமானம் உழைத்துக் கொடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதால், இத்தகைய வருமானம் விவசாயத்தினூடாகக் கிடைக்க வேண்டியவிடத்துப் பெருந்தோட்டங்கள் அதற்குரிய நிறுவன அமைப்பினை வழங்கின. இவற்றின் ஊடாக நிலம், ஊழியம், மூலதனம், முகாமை, தொழில் நுட்பம் என்பன ஒன்ருக இணைக்கப்பட்டன. இக்காரணிகளுள், பல சந்தர்ப்பங்களில், நிலம், மட்டுமே குடியேற்றத்துக்குச் சொந்தமானதாக இருந்தது. ஏனையவை குறிப்பிட்ட பிரதேசத்துக்குப் புறம்பானவையாயிருந்து வேண்டப்படும் விவசாயப் பொருளை உற்பத்தி செய்யும் முகமாகப் பிரதான காரணியாகிய நிலத்தின் மீது ஒன்று சேர்ந்தன. முகாமை, தொழில்நுட்பம், மூலதனம், என்பன குடியேறிய வல்லரசிஞற் கொண்டு வரப்பட்டன. ஆனுல் ஊழியம் குடிபெயர்ந்தவர்களால் அல்லது சுதேசிகளால் வழங்கப்பட்டது. இக்காரணிகளெல்லாம் ஒருங்கிணைந்து பெருந்தோட்டச் சமூகமொன்றை உருவாக்கின. இச்சமூகம் உருப் பெறுவதற்கு உற்பத்தி அலகாகிய பெருந்தோட்டமே காரணமாதலால் இதன் சமூக அமைப்பு, அதன் அங்கத்தவரிடம் ஏற்படும் தனிப்பட்ட தொடர்புகள் என்பனவற்றிலும் உற்பத்தியை நிர்ணயிக்கும் அதே பொருளாதார ஒழுங்கு முறை பிரதிபலிப்பதைக் காணலாம்

பெஸ்ற் (Best 1968 : 285 - 287) என்ற ஆசிரியர் கருத்துப்படி மாநகர நாடுகளின் குடியேற்ற நடவடிக்கைகள் பொதுவாக மூன்று வடிவங்களில் வெளிப்பட்டன. குடியேற்ற வல்லரசுகள் குடியேற்றங்களை ஆரம்பிப்பதற்குரிய நோக்கங்களின் அடிப்படையிலேயே இவை ஏற்பட்டன. தாம் கைப்பற்றிய பகுதிகளை 'அடக்கியாளும்' நோக்கத்துடன் அல்லது தாம் அவற்றிற் சென்று 'குடியேறும்' நோக்கத்துடன் அல்லது அவற்றைச் 'சுரண்டும்' நோக்கத்துடன் வல்லரசுகள் அவற்றை நிர்வகிக்க முற்பட்டனர். முதலாவது நிலையைப் பொறுத்தவரை குடியேற்ற நாட்டிலிருந்து மாநகரம் நோக்கிச் செல்வத்தை இலகுவில் எடுத்துச் செல்லக் கூடிய ஒரு நிர்வாக, இராணுவ ஒழுங்கு முறையை நிறுவுவதே முக்கிய தேவையாக இருந்தது. ஸ்பானியாவின் அமெரிக்கக் கண்டக் குடியேற்றங்கள் 'அடக்குமுறை' ரீதியிலமைந்த பிரதேசங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இரண்டாவது சந்தர்ப்பத்தில் மாநகரவாசிகள் தனிநபராக அல்லது குடும்பங்களாக அல்லது குழுக்களாக மாநகரத்திலிருந்து குடியேற்றங்கள் நோக்கிக் குடிபெயர்ந்து சென்றனர். பலவகைகளில் இவ்வாறு குடிபெயர்ந்தோர் தாம் சென்ற பிரதேசங்களிற் புதிய மாநகர்களை உருவாக்கிக் கொண்டனர். வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய இடங்களில் இத்தகைய செய்முறையே இடம் பெற்றது. இவை இரண்டுக்கும் நடுவிற் காணப்படுபனவே மூன்ருவது வகையாகும். இவற்றை எஸ் பீ. டீ. சில்வா 'குடியேருத குடியேற்றங்கள்' என அழைக்கின்ருர் (விபரங்களுக்கு de Silva 1982 : 53 - 72). இங்கு தாய்நாட்டின் நோக்கம் வர்த்தகத்திற்காக உற்பத்தியிலீடுபடுவதாகும். ஆனுல் இந்த உற்பத்தி உள்நாட்டு நுகர்வுக்கு உதவவில்லை. 'அடக்கு முறைக்' குடியேற்றங்களில் இராணுவ,

நிர்வாகப் பின்னணி அமைப்பை வழங்கு வதே மாநகர அரசின் தேவையாக இருந் தது. ஆனால் 'சுரண்டும்' குடியேற்றங்களிற் பொருளாதார முயற்சி, ஒழுங்கு முறை என் பனவற்றுடன் ஆரம்பத்தில் மூலதனத்தை யும் வழங்க வேண்டியிருந்தது. ஊழியத்தை அவ்விடத்திலேயே பெற்றுக் கொள்ளவேண் டியிருந்தது, ஏனெனில் மாநகர ஊழியம் தான் 'குடியேறக்' கூடிய குடியேற்றங்கள் நோக்கியே பெயர்ந்து சென்றது. ஆகவே அக்குறிப்பிட்ட இடத்தில் ஊழியத்தைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் அதனை மாநகரம் தவிர்ந்த வேறு பிரதேசங்களிலி ருந்து இறக்குமதி செய்து கொள்ள வேண் டியதாயிற்று.

'சுரண்டல்' நிலைக்குட்பட்ட குடியேற்றங் களில் மாநகரத்தின் தேவைகளுக்குப் பெருந் தோட்டம் மிக உகந்த ஒரு நிறுவனமாயி ருந்தது. தென்கிழக்காசிய நாடுகளாகிய இலங்கை, மலேசியா என்பன இப்பிரிவில டங்குபவையாகும். இப்பிரதேசங்கள் ஒப் பீட்டு ரீதியில் நன்கு முன்னேறிய நாகரீ கங்களையும் அடர்ந்த குடித்தொகையையும் கொண்டிருந்ததால் மாநகரவாசிகள் குடியே றுவதற்குகந்தவையாக இருக்கவில்லை. அத னால் இப்பிரதேசங்களை நாடி வந்த ஆரம்ப கால ஐரோப்பியர் வர்த்தகத்தில் ஈடுபடுவ துடன் தம்மை மட்டுப்படுத்திக் கொண்ட னர். ஆனால் 19ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியளவில் மேற்கு நாடுகளின் கைத் தொழில் மயவாக்கமும், அதனுடன் இணைந்த வகையில் ஏற்பட்ட வருமான உயர்வும் பெருந்தோட்ட உற்பத்திகளுக்குக் கூடிய கேள்வியை ஏற்படுத்தின. கூடியளவான மக்கள் இப்போது ஆடம்பரப் பொருட்க ளாகிய கோப்பி, தேயிலை, சீனி, புகையிலை என்பவற்றை நுகரக் கூடிய ஆற்றலுடைய வராக இருந்ததுடன் அபிவிருத்தியடைந்த நாடுகளிற் புதிதாக நிறுவப்பட்ட கைத் தொழில்களுக்கு ஆரம்ப நிலையில் அதிகள வான பருத்தி, சணல், தாவர எண்ணெய் என்பனவும் சிறிது பிந்திய காலப் பகுதி யில் றப்பரும் தேவைப்பட்டன. எனினும் கேள்வி வளர்ச்சியடைந்தளவுக்கு நிரம்பல் நெகிழ்ச்சியுடையதாக இருக்கவில்லை. 1833 ஆம் ஆண்டு பிரித்தானிய குடியேற்றங்க ளுடன் ஆரம்பித்து 1888 ஆம் ஆண்டு பிரே சிலில் முடிவுற்ற அடிமை ஒழிப்பு அமெரிக்க மேற்கிந்திய பெருந்தோட்டங்களின் வெளி யீட்டைப் பெருமளவுக்குப் பாதித்திருந்தது. பிரித்தானிய வர்த்தகக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை அல்லது அதன் வர்த் தகத் தாராண்மைக் கொள்கை கைத்தொ ழில் உற்பத்தியாளரை மேலும் பாதுகாப் பற்ற ஒரு நிலைக்குட்படுத்தியிருந்தது. இத னால் ஐரோப்பிய வல்லரசுகள் படிப்படியாக ஆசிய நாடுகள் நோக்கித் தமது கவனத் தைத் திருப்பலாயின. 1869ஆம் ஆண்டு சூயெஸ் கால்வாய் திறக்கப்பட்டமை பிர யாணக் கால அளவு பொறுத்து ஆசியா மேலும் நெருங்கி வருவதற்குதவி செய்தது. ஆகவே ஆசிய நாடுகளிற் பெருந்தோட்டங் களின் தோற்றம் கைத்தொழிற் புரட்சி யின் விளைவாக மேற்கு நாடுகளில் முதல் விளைவுப் பொருட்களுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய கேள்வியுடன் பொருந்துவதொன் றாக இருந்தது. உலகின் பல்வேறு பகுதிக ளிலிருந்தும் முயற்சி, மூலதனம், ஊழியம் என்பன ஒரு அல்லது ஒரு சில முக்கிய பொருட்களை உற்பத்தி செய்யும் முகமாக நிலத்துடன் இணைக்கப்படுவதற்காக இப்பிர தேசங்களுக்குக் கொண்டு வரப்பட்டன.

இந்தச் செய்முறையின்போது இன, கலாச்சார அம்சங்களிற் பெரிதும் வேறுபட் டிருந்த குடிபெயர்ந்த ஊழியத்தில் அவர் கள் கணிசமானளவு தங்கியிருக்க வேண்டி யிருந்ததால் இந்நாட்டுப் பொருளாதாரங் களின் சமூக முறைமையினுள் புதியதும், வேறுபட்டதுமான பல இயல்புகள் அறிமு கப்படுத்தப்படுவதற்கும் ஏதுவாயிற்று. இதன் விளைவாகப் பெருந்தோட்டங்கள் 'மக்களின் நிலத்துடனான தொடர்பை உருப்படுத்தி அவர்கள் நிலத்தில் எவ்வாறு வாழ வேண்டுமென்பதையும் ஒருவர் மற் றொருவருடன் எவ்வாறு வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதையும்' (Thompson 1957: 30) பெருமளவுக்கு நிர்ணயிக்கின்ற நிறுவ னங்களாயின. இந்நிலைமை அதன் எல்லைக ளுக்கிடையில் வசிக்கும் மக்களது வாழ்க் கையின் சகல அம்சங்களையும் கட்டுப்படுத்

கூடிய அதிகார பிரயோகத்தின் மூலமே சாத்தியமாகியது. பொருளியல் ஒழுங்கு முறையை அணிசெய்த அதிகார அமைப்பு முறை சமூகத் தொடர்புகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாகப் பெருந்தோட்டச் சமூகமானது இயல்பாகவே இறுக்கமானதொரு சமூகப் படிமுறையைக் கொண்டதாக வளர்ச்சியடைந்திருந்தது— பொதுவாக (மேற்கத்திய) சொந்தக்காரர் அல்லது முகாமையாளர் உச்சக்கிளையிலும், கலாச்சார ரீதியிற் கலப்புடைய திறமை மிக்க தொகுதியினர் நடுநிலையிலும், கலாச்சராரீதியில் வேறுபட்ட திறமையற்ற தொழிலாளர் அடிமட்டத்திலும் காணப்பட்டனர். இவர்கள் எல்லாருமே தமது வாழ்க்கைக்குப் பெருந்தோட்டத்தின் மீது தங்கியிருந்தனர். எனினும் இந்த ஒவ்வொரு சாராரும் தமது மட்டத்திலிருந்து மேல் நோக்கியோ கீழ்நோக்கியோ அசைவதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இருக்கவில்லை. உச்சத்திலிருந்த ஒருசில சொந்தக்காரர் அல்லது முகாமையாளர், அதேநேரம் அடித்தளத்திலிருந்த பரந்த திறமையற்ற தொழிலாளரின் தொகுதி என்பவற்றின் வழியாகப் பெருந்தோட்டச் சமூகம் ஒரு பிரமிட் வடிவத்தைப் பெற்றுக்கொண்டது. (Beckford 1972:53-83). பெருந்தோட்டங்களின் இத்தகைய உட்புற, வெளிப்புற அம்சங்கள் எந்தவொரு நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல்அமைப்பையும் அதன் வெளியுலகத் தொடர்புகளையும் பாதித்து அதன் மீது ஆதிக்கம் செலுத்துகின்றனவோ, அந்த நாட்டை 'பெருந்தோட்டப் பொருளாதாரம்' என அழைக்கலாம்.

பெருந்தோட்டப் பயிர்கள்:

பெருந்தோட்ட முறைமையின் தோற்றம், அது பற்றிய வரைவிலக்கணம் என்பவற்றிலிருந்து பெருந்தோட்டங்கள், வெளிநாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்யும் பொருட்டு, அயனமண்டலப் பயிர்களை விஞ்ஞானரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு முறையிற் பயிரிட முன்வந்தன என்பது தெரியவரும். குறிப்பிட்ட ஒரு பெருந்தோட்டம் ஒரு பிரதான பயிரின் உற்பத்தியில் ஈடுபடுவதே வழமையாக இருந்தது. அதே பிரதேசத்திலிருக்கும் இதர பெருந்தோட்டங்கள் வேறு பயிர்களைப் பயிரிடலாம். ஆனால் ஒரு தனிப் பெருந்தோட்டம் உயர்ந்த சிறப்புத்தன்மை பெற்ற ஓர் அலகாகவே விளங்கியது. இதற்கான மிகக் குறைவான புறநடைகளுள் முக்கியமானதாக இலங்கையின் தேயிலை-றப்பர்த் தோட்டங்கள் விளங்குகின்றன. எவ்வாறாயினும், பெருந்தோட்ட முறைமையிற் பயிரிடப்படும் பயிர்கள் பற்றிய பொதுவான ஒரு மேலோட்டம், ஒரு குறிப்பிட்ட பெருந்தோட்டத்திற்கு, அல்லது மொத்தமாக ஒரு பெருந்தோட்டப் பொருளாதாரத்திற்குக் கூடப், பயிர்களைத் தெரிவு செய்வதில் எந்தவிதமான ஒரு குறிப்பிட்ட வரையறையும் கிடையாதென்பதை எடுத்துக்காட்டும். பிம் (Pim 1946: 177) என்ற ஆசிரியர் குடியேற்ற நாடுகளின் விவசாய உற்பத்திக்குச் சுதேச குடியான்கள், அந்நிய முயற்சி என்பன தனித்தனி வழங்கியுள்ள பங்கினை ஆராயுமிடத்துப் பின்வருமாறு முடிவு செய்கின்றார்: 'இந்நாடுகளின் வணிக, கைத்தொழில் விவசாயத்திலிருந்து அறிந்து கொள்ளப்பட வேண்டிய ஓர் அனுபவம் என்னவெனில் விவசாய உற்பத்திகளிடையே பெருந்தோட்ட உற்பத்தி முறைக்கு அல்லது குடியான்களின் உற்பத்தி முறைக்குப் பொருத்தமானதென எந்த ஒரு வரையறுக்கப்பட்ட அல்லது நிரந்தரமான பிரிவினையையும் ஏற்படுத்த முடியாதென்பதாகும்.'

பயிர்த் தெரிவை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணி குறிப்பிட்ட பிரதேசத்தின் இயற்கை அமைப்பும் காலநிலையுமே என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. ஆனால் பெருந்தோட்டப் பயிர்கள் பொதுவாக 'அயனமண்டலப் பயிர்கள்' என அழைக்கப்பட்டாலும் அவை ஒன்றிலிருந்து மற்றது வேறுபட்டிருப்பதுடன் அயனமண்டல உலகின் எல்லாப் பகுதிகளிலும் அவற்றைப் பயிர் செய்யவும் முடியாது. ஒரு பயிரைக் குறிப்பிட்ட பிரதேசமொன்றில் வளர்க்க முடிந்தாலும் அதிலிருந்து கிடைக்கும் லாபம் பெருந்தோட்டமொன்றை நிறுவுகின்ற அளவுக்கு பெரியதொன்றாக இல்லாமல் இருக்கலாம். ஆகவே பெருந்தோட்டப் பயிர்களின் பரம்பல் முக்

கியமாக நாட்டின் சூழல் நிலைமைகளினாலும் பயிர்களிலேயே காணப்படும் சில வேறுபாடுகளினாலுமே நிர்ணயிக்கப்படுகின்றது. அயன மண்டல விவசாயத்தின் வேறுபட்ட ஆயிரக் கணக்கான பயிர்களில் ஒரு சிலவே சர்வதேச வர்த்தகத்திற் பிரவேசித்து அவை பயிரிடப்படும் பொருளாதாரங்களுக்கும் இன்றியமையாத முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. அத்தகைய பயிர்களின் தேர்ந்தெடுக்கபபட்ட பட்டியலொன்றை விக்கைசர் என்ற ஆசிரியர் தமது கட்டுரையொன்றிற் குறிப்பிடுகின்றார்(wickizer 1960: 54).

குறிப்பிட்ட நிறுவனம் அல்லது கைத்தொழிலொன்றின் பொருளியல் நடத்தை அதன் உற்பத்தி ஒழுங்கு முறையினாலும், குறிப்பாக அது எதிர்நோக்கும் போட்டி அமைப்பினாலும் பாதிக்கப்படுகிறதென்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அயனமண்டல ஏற்றுமதிப் பயிராக்கத்திற் பெருந்தோட்ட முறைமை, குடியான்கள் முறைமை, என்ற வேறுபாடொன்றை ஏற்படுத்துவது வழக்கமாயிருந்து வருகின்றது. பெருந்தோட்டப் பயிர்களின் ஒரு பொதுவான பண்பு யாதெனில் ஏறக்குறைய அவை யாவும் ‘மரம்’ அல்லது ‘செடி’ வகையைச் சார்ந்தவையாயிருப்பதுடன் அவற்றிற் பெரும்பாலானவை பெருந்தோட்ட முறையின் கீழ்க் கொண்டுவரப்படுவதற்கு முன்பும் அவ்வாறு கொண்டுவரப்பட்ட பின்பும் குடியான்களாற் பயிரிடப்பட்டன என்பதாகும். ஏற்றுமதிப் பயிராக்கம் எந்த ஒரு நிலையிலும் பெருந்தோட்டங்களின் தனியுரிமையாக இருக்கவில்லை. இன்றைய பெருந்தோட்டப் பயிர்களுட் சிலவாகிய தென்னை, கரும்பு, வாழை போன்றன ஐரோப்பியர் அவற்றைப் பேரளவு உற்பத்தி முறையின் கீழ்க் கொண்டுவர முனைவதற்கு முன்பே வர்த்தகப் பண்டங்களாக நன்கு நிலைபெற்றிருந்தன. சில பெருந்தோட்டப் பயிர்கள் கூடியளவு சாதகமான நிலைமைகளை வேண்டித் தாம் தோன்றிய இடங்களிலிருந்து அயனமண்டலத்தின் வேறு பகுதிகளுக்கு இடம் மாற்றப்பட்டிருந்தன, இலங்கையின் தேயிலை, றப்பர் என்பன இதற்குரிய எடுத்துக்காட்டுகளாகும். எனவே ஏற்றுமதிப் பயிராக்கத்திற் பெருந்தோட்டங்கள் ஈடுபட முற்பட்டவிடத்து அதிற் குடியான்களும் ஈடுபட்டுள்ளார்கள் என்பதைக் கருத்திலெடுக்க வேண்டியதாயிருந்தது. ஆகவே குடியான்கள் இலகுவிற் பயிர் செய்யக்கூடிய ஒரு பயிரைப் பெருந்தோட்டமும் தேர்ந்தெடுப்பது அதற்கு நன்மை தருவதாக இராது. இவ்வாறு செய்வது குறுகிய காலத்தில் லாபந் தருவதாக இருந்தாலும் நீண்டகாலத் தீர்மானம் ஒன்றைப் பொறுத்தவரை தகுந்தளவு லாபமற்றதாக இருக்கலாம். உயர்ந்த வெளியீட்டுக்கு அவசியம் ஏற்பட்ட காரணத்தினாலேயே சில பயிர்களை ஐரோப்பியர் பாரிய அளவிற் பயிர் செய்ய முற்பட்டனர். ஆகவே பெரும் பாலான சந்தர்ப்பங்களிற் பெருந்தோட்டமானது உற்பத்தி முறைமையில் ஏற்பட்ட ஒரு மாற்றத்தை மாத்திரமே பிரதிபலிப்பதாக இருக்கிறது.

எனினும் அயனமண்டலத்தின் எல்லா ஏற்றுமதிப்பயிர்க் கைத்தொழில்களும் ‘பெருந்தோட்டம் – சிற்றுடமை என்ற இந்த இரு கவர்ப் பிரிவினுள் தெளிவாக அடங்கிவிடுவதாக கூற முடியாது. வேறு பல ஒழுங்கு முறை அமைப்புகளை உள்ளடக்கும் ஓர் அளவீட்டின் துருவநிலைகளை மட்டுமே இவை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறலாம். ஆனால் உற்பத்தி ஒழுங்குமுறையின் சம்பந்தப்பட்ட வேறுபாடுகளுடன் நன்கு தொடர்புபடக்கூடிய ஒரு பாகுபாட்டை அபிவிருத்தி செய்வது அவசியமாகின்றது. இது விடயத்தில் விக்கைசர் என்பார் வெளியிட்ட பாகுபாடே அயனமண்டல விவசாய இலக்கியத்திற் தோன்றியவற்றுள் கூடியளவு பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. (wickizer 1960: 53-89) இதனை ஆதாரமாக கொண்டி பெக்போேட் (G.L. BECKFORD 1964: 418) என்பார் அயனமண்டல ஏற்றுமதிப் பயிர்களை உள்ளடக்கக்கூடிய நான்கு பிரிவுகளை வெளியிட்டுள்ளார். அவையாவன, (i) சிற்றுடமை (ii) பெருந்தோட்டம் (iii) கலப்புத் தற்சார்பு, (iv) கலப்பு முழுமை என்பனவாகும்.

சிற்றுடைமைப் பயிர்கள் சிற்றுடைமையாளரால் மாத்திரம் வளர்க்கப்படுபவையாவும், அதேபோன்று பெருந்தோட்டப் பயிர்கள் பெருந்தோட்டத்தின் தனியுரிமையாகவும் இருக்கும். கானுவின் கொக்கோ, நைஜீரியாவின் தாவர எண்ணெய் என்பவற்றை முன்னையதற்குரிய எடுத்துக்காட்டாகவும் ஹவாய்த் தீவின் சீனி, பிரேசில் கொக்கோ என்பவற்றைப் பின்னையதிற்குரிய – எடுத்துக்காட்டாகவும் கூறமுடியும். கலப்புத் தற்காப்பு என்பது சிற்றுடைமையாளர், பெருந்தோட்டங்கள் என்ற இருசாராரும் ஒருவர் மற்றவரிலிருந்து சுயமான முறையில், ஆனுல் ஒவ்வொருவரும் கணிசமான அளவு உற்பத்தியிலீடுபடும் கைத்தொழில்களைக் குறிக்கும். மலேசியா, இலங்கை, இந்தோனேசியா ஆகிய நாடுகளின் றப்பர், இலங்கையின் தெங்குச் செய்கை என்பன இதற்குரிய சிறந்த உதாரணங்களாகும். கலப்பு முழுமையென்பது சிற்றுடைமையாளரின் பங்கு முக்கியமாக இருந்தாலும் அவர்கள் பதப்படுத்தலுக்கும் பிறவசதிகளுக்கும் அதே கைத்தொழிலிலுள்ள பெருந்தோட்டங்களின் மீது தங்கியிருக்கும் ஒரு நிலையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை, இந்தோனேசியா ஆகிய நாடுகளின் தேயிலைப் பயிர்ச் செய்கை இப் பிரிவினுள் அடங்கும்.

மேற்கூறிய பாகுபாட்டிலிருந்து வெளிப்படும் ஒரு சிறப்பு நிலை யாதெனில் எந்தவொரு தனியேற்றுமதிப் பயிரையும் இந்த நான்கு பிரிவுகளுள் ஏதாவது ஒன்றுக்கான 'மாதிரிப் படிவம்' அல்லது ஏதாவது ஒன்றுடன் முற்றிலும் பொருந்தக்கூடியதெனக் கூறிவிட முடியாது. ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட முறையின் கீழ்ப் பயிரிடப்படும் அதே பயிர்கள் வேறொரு நாட்டின் வேறொரு முறையின் கீழ்ப் பயிர் செய்யப்படுவதைக் காணலாம். ஆகவே இந்தப் பாகுபாடு பயிர்களை விடக் கூடியளவுக்கு நாடுகளை ஆதாரமாகக் கொண்டு அமைந்ததொன்றேயாகும். இதிலிருந்து ஒரு குறிப்பிட்ட ஏற்றுமதிப் பயிருக்கும் தரப்பட்ட ஒரு பயிராக்க முறைமைக்குமிடையிலான பொருத்தம் அந்தப் பயிரைவிடப் பிரதானமாக அது வளர்க்கப்படும் பிரதேசத்தின் பொருளாதார, அரசியல், சமூகக் காரணிகளினுலேயே நிர்ணயிக்கப்படுகின்றது என்பது தெளிவாகின்றது. காலப்போக்கில் ஏற்றுமதிப் பயிர்களுக்கும் பெருந்தோட்ட அல்லது சுதேச உற்பத்தி முறைக்குமிடையிலான பொருத்தம் தூய பொருளியல் அம்சங்களினுலன்றிப் பிற காரணிகளைக் கொண்டே தீர்மானிக்கப்படுவதாயிற்று. இதற்கு உலகின் பல பெருந்தோட்டப் பொருளாதாரங்களையும், அவற்றின் பயிர்களையும் உதாரணம் காட்டமுடியும். கிழக்காபிரிக்காவில் ஏனைய முறைமைகளைவிடப் பெருந்தோட்ட முறைமையை ஆதரித்த பிரித்தானியக் கொள்கை மேற்காபிரிக்காவிற் சிற்றுடைமை முறைமையை வேண்டி நின்றது. (Wickizer 1958:69) மேற்காபிரிக்காவில் பெருந்தோட்ட முறைமை நன்கு வேரூன்றாத காரணத்தினுல் சிற்றுடைமையாளரைத் தமக்கு வேண்டிய பயிர்களைப் பயிராக்குமாறு பிரித்தானியர் ஊக்குவித்தனர். ஜாவாவில் டச்சு அரசாங்கம் ஏற்றுமதிப் பயிர்களை மரபு ரீதியான விவசாய முறைமையினுட் கட்டாயத்தின் மூலம் புகுத்த முனைந்தது. கலாச்சார முறைமையென அழைக்கப்பட்ட முறைமையின்கீழ் லாபந்தரும் என எதிர்பார்க்கப்பட்ட எல்லாப் பயிர்களுமே முயற்சிக்கப்பட்டன. இவற்றில் கரும்பு, கோப்பி என்ற இரண்டையும் தவிர மற்றயவையெல்லாம் தோல்வியிலேயே முடிவுற்றன. (Geertz 1971:54) கரும்பு நெல் வயல்களிற் குடியான்களாற் சுலபமாகப் பயிராக்கப்பட முடிந்தவிடத்தும் டச்சு அரசாங்கம் பெருந்தோட்டத்துக்கு முன்னுரிமை அளித்துக் குடியான்கள் கரும்பு பயிரிடுவதைப் பலவகைகளிலும் தடைசெய்தது. அதே நேரத்திற் கோப்பி சீவனேபாய விவசாயப் பிரதேசங்களிலிருந்து புறம்பாயிருந்த காரணத்தினுல் பெருந்தோட்ட முறைமைக்குக் கூடியளவு பொருத்தமுடையதாயிருந்தது. ஆனுல் டச்சு அரசாங்கம் கோப்பி உற்பத்தியிற் பெருமளவு அக்கறை காட்டாத காரணத்தினுல் அதன் பயிராக்கத்தை ஊக்குவிக்கவும் இல்லை. அதேநேரம் தடைப்படுத்தவுமில்லை. இதனுலது குடியான்களாற்

கூடியளவு வளர்க்கப்படலாயிற்று. ஆகவே குடியேற்ற நாட்டுக் காலப்பகுதியின் கடைசி மூன்று தசாப்தங்களில் உருவாகிய வளர்ச்சியமைப்பு முறையில் 60சதவீத மான இந்தோனேசியக் கோப்பி சிற்றுடைமைத்துறையில் உற்பத்தியாக, 95சதவீத மான கரும்பு டச்சுக்காரருக்குச் சொந்த மான கூட்டுடமைப் பெருந்தோட்டங்களில் உற்பத்தியாகியது. (Geertz 197: 56-60) இதேபோன்று ஹாவாய்ப் பிரதேசத்திற் கரும்பு உற்பத்தி பெருந்தோட்ட முறையைத் தழுவியதென்றால் அப்பிரதேசம் ஐக்கிய அமெரிக்காவுடன் கொண்டிருந்த விசேட அரசியற் தொடர்பினுல் உருவாக்கப்பட்ட சாதக நிலையின் ஒரு விளைவென்றே இதனைக் கொள்ள வேண்டும். (Beckford 1964:421).

அத்துடன் எந்தவோர் ஏற்றுமதிப் பயிரையும் 'தூய பெருந்தோட்டப்' பயிர் என்றோ அல்லது 'தூய சிற்றுடமைப்' பயிர் என்றோ குறிக்க முடியாதென்பதும் உண்மையேயாகும். இலங்கையின் முதல்விளைவு உற்பத்தி இதற்குரிய சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. அதன் முக்கிய மூன்று ஏற்றுமதிப் பயிர்களும் — தேயிலை, றப்பர், தெங்கு என்பன — 'பெருந்தோட்டம்' அல்லது 'சிற்றுடமை' என்ற பிரிவின் கீழ் அடங்கவில்லை. ஆனல் நாம் குறிப்பிட்ட பாகுபாட்டின் கடைசியிரு பிரிவுகளாகிய 'கலப்புத் தற்சார்பு', 'கலப்பு முழுமை' என்பவற்றிலேயே அடங்குகின்றன. எவ்வாறெனினும், விக்கைசர் என்பவர் கருத்துப் படி தேயிலை, தென்னையென்பன முறையே பெருந்தோட்ட முறையின்கீழ் வளர்க்கப் படக்கூடிய அதிபொருத்தமுடைய, அதி பொருத்தமற்ற பயிர்களுக்குரிய மாதிரிப்படிபவங்களாகும். (Wickizer 1960:63). ஆனல் இலங்கையில் இவை இரண்டுமே பெருந்தோட்டங்களினுலும், சிற்றுடமையாளராலும் வளர்க்கப்படுகின்றன. உலகத்தேயிலை ஏற்றுமதியிற் சிற்றுடமையாளரின் பங்கு 3 சதவீதத்திற்கு, மேலாக அதிகரிக்காத தொன்றுக இருப்பினும் (Wickizer 1960: 64) இலங்கையில் அவர்கள் ஓரளவு முக்கியத்துவம் வாய்ந்த நிலையில்உள்ளனர். ஆரம்ப கா்லமாகிய 1946ம் ஆண்டளவிலேயே தேயிலைக் கட்டுப்பாட்டாளரின் அறிக்கைப் படி தேயிலையின் கீழிருந்த மொத்த நிலப் பரப்பாகிய 489,695 ஏக்கரில் 63,158 ஏக்கர், அதாவது ஏறக்குறைய 12.8 சதவீதம் சிற்றுடமைகளின் கீழிருந்தது. வருடாவருடம் இந்த வீதாசாரம் அதிகரித்து வருவ தொன்றுகவே காணப்படுகிறது. உதாரணமாக 1974ம் ஆண்டு தேயிலை மொத்த நிலப்பரப்பாகிய 598,466 ஏக்கரில் 110,564 ஏக்கர் அல்லது 18.48 சதவீதம் சிற்றுடைமைகளாகக் காணப்பட்டது. எனினும் தமக்கு வேண்டிய பல வசதிகளுக்குச் சிற்றுடைமையாளர் தேயிலைத் தோட்டங்களிலேயே தங்கியிருக்க வேண்டியவர்களாயிருந்தனர். மறுபுறம், தென்னை பெருந்தோட்டச் சொந்தக்காரர் மத்தியில் அத்துணை பிரபல்யம் பெற்றிருந்ததால் 1949ம் ஆண்டின் தெங்கு விசாரணைக்குழு அதனை ஒரு சிற்றுடைமைப் பயிர் என்பதைவிடப் பெருந்தோட்டப் பயிர் என்பதே கூடியளவுக்குப் பொருந்தும் எனக் கருத்து தெரிவித்தது. (Sessional Paper 1949:23) இதேபோன்று றப்பரும் மிக இலகுவாகப் பெருந்தோட்டங்களினுலும் சிற்றுடமையாளராலும் வளர்க்கப்பட்டது.

ஆகவே இதுவரை கூறியவற்றிலிருந்து பெருந்தோட்டங்களின் கீழ் வளர்க்கப்படும் பயிர்களை வரையறுத்துக் கூறக்கூடிய தெளிவான முறையொன்று இல்லையென்பதும், அவையொரு குறிப்பிட்ட நாட்டின் உள் நாட்டு நிலைமைகளிலேயே பிரதானமாகத் தங்கியிருக்கின்றன என்பதும் புலனுகும். எனினும், சிற்றுடமைகளுடன் ஒப்பிடுமிடத்துப், பெருந்தோட்டங்களுக்கு எப்போதும் சாதகமாக உள்ள சில காரணிகளைச் சுட்டிக்காட்ட முடியும். இந்நன்மைகளை நிதி, தொழில்நுட்பம், வணிகம் எனப் பிரித் கூறமுடியும்.

உற்பத்தி முறைகளின் வளர்ச்சியை நிர்ணயிப்பதில் மூலதனத் தேவைகள் ஒரு முக்கிய காரணியாக விளங்கியுள்ளன. உற்பத்தி வசதிகளை நிறுவிக்கொள்வதற்காயினும் சரி, பிரமாண்டமானதொரு வேலைப்

படையை அமர்த்திக் கொள்வதற்காயினும் சரி உயர்ந்த மூலதன ஒதுக்கீடு அவசியமாகலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களிற் சிற்றுடைமையாளரை விடப் பெருந்தோட்டங்கள் கூடியளவு வாய்ப்பான ஒரு நிலையில் இருந்துள்ளன எனலாம். ஆனால் இத்தகைய பேரளவு மூலதனத்தைத் தனிப்பட்ட பெருந்தோட்டச் சொந்தக்காரர் கூட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. படிப்படியாக அவர்களும் வேறு மார்க்கங்களை நாட வேண்டியதாயிருந்தது. கூட்டுடைமைகள் இந் விடயத்தில் அவர்களுக்குக் கைகொடுத்துதவின 19-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி முதல் பெருந்தோட்டக் கைத்தொழில்களின் அபிவிருத்தியிற் கூட்டுடைமைகள் முக்கிய சக்தியாக விளங்கி அவற்றுக்கு வேண்டிய பெருந்தொகை மூலதனத்தைத் தந்துதவின. நிதி விடயத்திற் பெருந்தோட்டமொன்று அனுபவித்த பிரதான நன்மை யாதெனில் ஆபத்தை எதிர்நோக்கக்கூடிய கடன்களைப் பணச் சந்தையிலிருந்து அது இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிந்தமையும், அதன் கடன்பெறு தகுதியுமே யாகும். பெரும் நிறுவனங்களுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்கள் அந்நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலிருந்த வர்த்தக நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே பெரும்பாலும் விளங்கியிருந்தன. இதனால் பெருந்தோட்ட நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கோ அல்லது அதன் துணைச் சாதனங்களைப் புதுப்பிப்பதற்கோ வேண்டிய நிதி வளங்களைச் சாதாரண மாாக்கங்களாகிய புதிதாகச் சேர்க்கப்பட்ட பங்கு மூலதனம், வங்கிக் கடன்கள் என்பவற்றுக்குப் புறம்பாகவும் குறிப்பிடத்தக்க அளவிற் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தது. ஏற்றுமதிப் பயிர்கள் எல்லாப் பருவங்களிலும் பயன் தரக்கூடியவையாயிருப்பதனாலும் மூலதன ஒதுக்கீடு முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் அவற்றின் திறமையை அதிகரிக்கும் விகிதத்திலேயே அவற்றின் நீண்டகால உற்பத்தி விரிவாக்க விகிதமும் தங்கியுள்ளது. நிலத்தைக் கட்டற்ற ஒரு காரணி என எடுத்துக்கொள்வோமாயின் உற்பத்தி விரிவாக்கம் ஏனைய இணைவுக் காரணிகளாகிய ஊழியம், மூலதனம் என்பன கிடைக்கும் அளவினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. இவற்றைப் பெருந்தோட்டம் போன்றதொரு பாரிய ஒழுங்கு முறையே இலகுவிற் பெற்றுக் கொள்ள முடியும்.

மூலதனத் தேவையுடன் நெருக்கமாக இணைந்த இன்னோர் அம்சம் உற்பத்தி நுட்பமாகும். கிறீவ்ஸ் என்பார் (Greaves 1935 77—81) பேரளவு உற்பத்தியை நியாயப்படுத்தும் நான்கு காரணிகளை அடையாளம் காட்டுகின்றார்,

(1) எந்நேரமும் தரத்தில் உயர்ந்த உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது நோய்கள், கிருமிகள் என்பன பரவாமற் தடுக்கும் பொருட்டு நடுகை, கத்தரித்தல், தெளித்தல், என்பவை பொறுத்து வேண்டப்படும் விஞ்ஞான நடத்துமுறை.

(2) தனிப்பட்ட கவனம், திறமை, என்பவை பொறுத்துப் பயிரிடல் அல்லது அறுவடையில் ஊழியத்தின் கைத்திறமைக்கான அவசியம் ஒரு மிகையை ஏற்படுத்தும் அளவு.

(3) பரந்ததொரு நிலப்பகுதியில் ஒரே தன்மைத்தானதும் ஒழுங்கானதுமான நிரம்பலைப் பெற்றுக் கொள்வதற்கான அவசியம்.

(4) வேண்டப்படும் ஊழிய நிரம்பலிற் பருவகால மாறுபாடுகள் ஏற்படுத்தும் விளைவு.

எனினும் ஒரு பயிரின் பதப்படுத்தற் தேவைகள் முக்கியமானவையென்பதுடன் வலியுறுத்தப்படவும் வேண்டியவையாகும். எல்லா அயனமண்டலஏற்றுமதிப் பயிர்களும் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்னதாக ஏதோ ஒருவகையிற் பதப்படுத்தலுக்குள்ளாக வேண்டுமென்பதும், வேண்டப்படும் பதப்படுத்தலின் அளவு, தன்மை என்பன பயிருக்குப் பயிர் வேறுபட்டுச் செல்லுமென்பதும் ஏற்கனவே கூறப்பட்டது. சில பயிர்களைப்

பொறுத்தவரை பதப்படுத்தல் எளிமையாகவும், இலகுவாகவும் வேறு சிலவற்றைப் பொறுத்தவரை அது சிக்கலாகவும், கடினமாகவும் காணப்படுகின்றது. இவையிரண்டுக்கும் நடுவில் இன்னும் சில பயிர்களின் பதப்படுத்தல் மிக எளிமையாகவோ அல்லது மிகக் கடினமாகவோ அன்றி மத்திம நிலையிற் காணப்படுகின்றது. பதப்படுத்தற் செய்முறை எளிமையாக இருக்குமாயின், அதாவது ஏற்றுமதிப் பண்டம் கொக்கோ அல்லது கொப்பராவைப் போன்று பெருமளவுக்கு அதன் மூலப் பொருள் நிலையிற் காணப்படுமாயின் அது பெருந்தோட்ட உற்பத்தியை விடக் குடியான்கள் உற்பத்திக்குக் கூடியளவு துணை செய்வதாயிருக்கும். ஆனால் மறுபுறம் பதப்படுத்தல் சிக்கலுடைய தொன்றுகப் பாரிய இயந்திரப் பொறிகளின் பாவனையினூடாக பல படிகளைக் கடந்து செல்ல வேண்டுமாயின் அளவுத்திட்டச் சிக்கனங்கள் எப்போதும் பெருந்தோட்டங்களுக்கே சாதகமாக இருந்திருக்கின்றன. மாறுபடும் தொழில்நுட்பத்திற்கேற்ப இயந்திரப் பொறி எந்தளவுக்கு முன்னேறி வருகிறதென்பதும் இது விடயத்திற் கணிப்பிலெடுக்கப்பட வேண்டும். இயந்திரப் பொறி அதன் ஆரம்ப நிலையிலிருந்து எந்தளவுக்கு மாற்றமடைகின்றதோ, அந்தளவுக்கு அது சிற்றுடைமையாளரின் பாவனைக்குப் பொருத்தமற்றதாகின்றது. சில பெருந்தோட்ட உற்பத்திகளின் தரத்தை உயர்த்துவதற்கு இயந்திரப் பொறிகள் அத்தியாவசியமாக உள்ளன. ஆகவே அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான மூலதனம் வேண்டும். அத்துடன் பயிர்கள் சம்பந்தப்பட்ட தகுந்த ஆராய்ச்சி வசதிகளும் அவசியமாகும். ஆராய்ச்சி என்பது பெரிய நிறுவனங்களுக்கு மாத்திரமே சாத்தியமாகும் ஒரு விடயமாகும். குடியான்கள் இந்தச் சேவைக்குப் பெருந்தோட்டங்களிற் தங்கியிருப்பதைத் தவிர வேறு வழியில்லை. சில நாடுகளில் அரசாங்கங்கள் குடியான்களுக்குக் கை கொடுத்து அவர்களுக்கு வேண்டிய ஆராய்ச்சி வசதிகளை வழங்குவதற்கு முன் வந்திருக்கின்றன. ஈக்குயிடோர் வாழைப்பழக் கைத்தொழிலே இதற்குரிய எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இலங்கையிலும் மூன்று பெருந்தோட்ட உற்பத்திகளுக்குமான ஆய்வு நிறுவனங்கள் பெருந்தோட்டங்களுக்கு மாத்திரமன்றிக் குடியான்களுக்கும் வேண்டிய உதவிகளை வழங்க முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் சிற்றுடைமையாளர் இத்தகைய வசதிகளுக்கு பெருந்தோட்டங்களின் மேல் தங்கியிருப்பது பொதுவாகத் தவிர்க்க முடியாததாகும். உதாரணமாகப் பல்வேறு நாடுகளினதும் கரும்பு உற்பத்தியாக்கும் குடியான்கள் தமது ஆராய்ச்சி வசதிகளுக்கு ரேற் அன் லைல் (Tate and Lyle) நிறுவனத்தை நம்பியிருக்க வேண்டியநாயுள்ளது.

பெருந்தோட்ட உற்பத்திகள் வெளிநாட்டுச் சந்தை வசதிகளிற் பெருமளவு தங்கியிருப்பதால் களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து, வணிக மற்றும் சந்தைப் படுத்தும் ஒழுங்கு முறைகள் என்பன எந்த ஓர் உற்பத்திக்குமுரிய அத்தியாவசிய தேவைகளாகும். எனினும் வாழை போன்ற ஒரு சில கைத்தொழில்களில் அவை மிக முக்கியத்துவம் பெறுகின்றன. ஏனெனில் இவற்றின் இலகுவாகப் பழுதடையக் கூடிய தன்மை விரைந்த போக்குவரத்து, திறமையான சந்தைப் படுத்தல் என்பவற்றை இன்றியமையாதவையாக்குகின்றன. இத்தகைய பயிர்கள் வேறு எந்த முறைமையையும் விடப் பெருந்தோட்டங்களினால் வளர்க்கப்படுவதற்குச் சுலபமானவையாகும். பெருந்தோட்ட மொன்று இது விடயத்தில் அனுபவிக்கும் வணிக ரீதியான பல நன்மைகளில் சலுகைக் கட்டணங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பேரளவான உற்பத்தியை ஒழுங்காக வழங்குதல், விசேட தேவைப் பொருட்களாகிய தாங்கிகள், பெரும் களஞ்சிய வசதிகள், கப்பல்கள் போன்றவற்றை உடமையாக வைத்திருத்தல், சர்வதேச சந்தை, அதன் தேவைகள் என்பன பற்றிப் பரந்த அறிவு பெற்றிருத்தல் போன்றன குறிப்பிடத்தக்கவையாகும்.

மேலே குறிப்பிட்ட காரணிகள் பலவற்றையும் முன்மாதிரியாகக் கொண்டதொன்றுகத் தேயிலைக் கைத்தொழில் விளங்குவதால் தேயிலையை மிகச் சிறந்ததொரு பெருந்தோட்டப் பயிர் எனக் குறிப்பிட முடி

யும், கொக்கோ, கொப்பரா, றப்பர் போன்றவை அவை நுகர்வு செய்யப்படும் நாடுகளை அடைந்த பின்னரே சிக்கலான பதப்படுத்தற் செய்முறைகளுக்கு உள்ளாகின்றன எனலாம். ஆனால் தேயிலை அதன் இறுதிச் சேர்விடத்தை அடையும் போது விற்பனைக்காகக் கலந்து அடைப்பதொன்றே செய்ய வேண்டியதாகும். ஆகவே அதன் பதப்படுத்தல், ஏறக்குறைய முற்றாகவே, அது உற்பத்தி செய்யப்படும் நாட்டிலேயே செய்யப்படவேண்டியதாயுள்ளது. அதற்குரிய முக்கிய காரணம் யாதெனில் கொழுந்துகள் செடியிலிருந்து பறிக்கப்பட்ட ஒரு சிறிது நேரத்திற்குள் பதப்படுத்தற் செய்முறை ஆரம்பித்து விட வேண்டும். இதில் ஏதாவது தாமதம் ஏற்படுமாயின் புதிதாகப் பறிக்கப்பட்ட தளிர்கள் நிறையிற் குறைவடைந்து அதன் வழி அவற்றின் தரமும் பாதிக்கப்படும். ஆகவே தேயிலை வளர்க்கப்படும் இடத்திலேயே பதப்படுத்தவும் களஞ்சியப் படுத்தவும் வசதிகள் இருக்க வேண்டுமென்பது தெளிவு. காலதாமதம் ஒரு புறமிருக்கத் தேயிலையின் பதப்படுத்தும் செய்முறையே முற்றாக நுண்ணயமுடைய, சிக்கலான ஒரு கலையாகும். இது தவிரத் தேயிலைப் பயிர்ச் செய்கையும் கடினமானதென்பதுடன் மிகுந்த கவனமாகவும், அக்கறையுடனும் மேற் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும். தேயிலையின் சந்தைப்படுத்தும் பொறிமுறை விரிவானதும், சிக்கல் நிறைந்ததும் மாத்திரமன்றித் தனித்துவம் வாய்ந்த தொன்றும் ஆகும், ஆகவே அதிலிருந்து ஆகக் கூடிய பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், அதுபற்றிய நிறைந்த அறிவு அத்தியாவசியமாகும். தேயிலை விற்பனையாகும் ஏலங்கூறு நிலையங்கள் தோட்டங்களுக்கு மிகுந்த தூரத்திலிருப்பதாற் சந்தைப்படுத்தும் செலவுகளைக் குறைந்த அளவில் வைத்திருப்பதற்குத் திறமை வாய்ந்த போக்குவரத்து ஒழுங்கு முறைகள் வேண்டப்படுகின்றன. சுருக்கமாகக் கூறின், தேயிலை உற்பத்தியானது திறமை மிக்க முகாமை, நவீன சாதனங்களை உள்ளடக்கிய உயர் தரம் வாய்ந்த உற்பத்தி, சந்தைப்படுத்தும் நுட்பங்கள் என்பவற்றை வேண்டி நிற்கின்றது. இவை யாவும் அதிகளவான மூலதனத்தை உறிஞ்சக்கூடியனவாகும். பெருந்தோட்டம் போன்ற பெரியதோர் அலகே இத்தகைய வசதிகளுக்கு இடமளித்துச் சிக்கனமான ஒரு முறையிற் பயன் பெறக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கும். கோர்ற்னே (Courtenay 1971 : 127) என்ற ஆசிரியர் இந்நன்மைகளைச் சுருக்கிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். பெருந்தோட்டமானது ஆராய்ச்சி, அபிவிருத்தி என்பவற்றை மேற்கொள்ளக்கூடிய வகை வளமுடையது மாத்திரமன்றி அவற்றின் முடிபுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய பரந்த பிரதேசத்தின் மீது தகுந்த கட்டுப்பாட்டையும் உடையதாகும். உதாரணமாகக் களைகொல்லி, செயற்கை உரம் என்பவற்றின் பிரயோகத்தில் ஒரே சீரான முறைகளைப் பரந்த பரப்பிற் கையாள முடிவதுடன், தோட்டம் முழுவதிலும் திறமையான பயிரிடு முறைகளை நடைமுறைப்படுத்தவும் முடிகின்றது. இது ஒரே சீரான பயிர் கிடைப்பதை உறுதி செய்து பதப்படுத்தற் செய்முறையைச் சுலபப்படுத்துகின்றது. இதன் மூலம், ஒரே தரம் வாய்ந்த வெளியீட்டை வழமையாக வேண்டி நிற்கும் சந்தையின் தேவையையும் பூர்த்தி செய்யமுடிகின்றது.

மேலே காட்டிய நன்மைகள் பலவும் பெருந்தோட்டம் ஆதிக்கம் செலுத்தும் கைத்தொழில்கள், சிற்றுடைமையாளரின் செல்வாக்கினுக்குட்பட்டவற்றை விட விரைவாக வளரக் கூடிய உள்ளாற்றலுடையவை என்றதொரு கருத்துக்கு இடமளிக்கும். குடியான்கள் சந்தை வழங்கக்கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முன்வருவதில்லையெனவும், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களினால் அவர்கள் கட்டுப் படுத்தப்படுகிறார்களெனவும் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. எனினும் வேறுபட்ட உற்பத்தி முறைமைகளின் வளர்ச்சி விகிதங்கள் பற்றிய பெக்போர்ட் (Beckford) என்பாரின் ஆய்வு இதிலிருந்து மாறுபட்ட ஒரு முடிவையே வெளிப்படுத்துகின்றது. இதன்படி சிற்றுடைமை வர்க்கம் உயர்ந்த சராசரி விகிதத்தையும், பெருந்தோட்டங்கள் குறைந்த விகிதத்தையும் பெற்றிருக்கக் கலப்புக் கைத்தொழில்கள் நடு வரிசையைப் பிடித்துக்

கொண்டுள்ளன. இவருடைய முடிவுப் படி சிற்றுடைமைத் துறையின் சராசரி வளர்ச்சி விகிதம் 7.04 ஆகவும் பெருந்தோட்டத் துறையினது 5·95 ஆகவும் காணப்பட, கலப்புத் தற்சார்பு, கலப்பு முழுமை என்ற இரண்டும் முறையே 6.60, 6.05 என்ற விகிதங்களைக் கொண்டுள்ளன. (Beckford) 1964: 418) ஆகவே சிற்றுடைமைக் கைத்தொழில்கள் 'பெருந்தோட்ட முறையில் அமைந்தவற்றைவிடக் கூடியளவு விரைந்த அபிவிருத்தி நாட்டமுடையனவையாகும்' (Ibid).

இதற்கான காரணங்கள், மூலதன, ஊழியத் தேவைகளிலிருந்தே, சிறப்பாக, எழுவதாகக் கூறமுடியும். சிற்றுடைமையாளர், ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு குறைந்த மூலதனத் தேவையுடைய பயிர்களிலேயே கவனம் செலுத்துகிறார்களென்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. அதே நேரத்திற் பெருந்தோட்டங்கள் பதப்படுத்தற் செய்முறைகளை நிறுவுதல், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல் என்பவற்றுக்கான நிலையான மூலதனம், பெரியதொரு வேலைப்படையை அமர்த்திக் கொள்வதற்கான மாறும் மூலதனம் என்ற இரண்டையும் பேரளவில் வேண்டி நிற்கின்றன; சிற்றுடைமையாளரின் குறைவான மூலதன ஊழியத் தேவைகள் அவர்களுடைய நடவடிக்கைகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தும் ஒரு காரணியாக இருக்கவில்லை. சந்தைகள் பூரிப்பு நிலையிலிருந்து விலைகள் உயர்வாயிருந்தபோது, சிற்றுடைமையாளரின் வருமானத்திலிருந்தே அவர்களுக்கு வேண்டிய சிறியதொகை மூலதனம் வழங்கப்படக் கூடியதாயிருந்தது. ஊழியத்தை முதலீடு செய்வதன் மூலமும் மூலதன ஆக்கம் இடம் பெற முடிந்தது. மறுபுறம் ஊழியமானது குடும்ப ஊழியமாகவே காணப்பட்டதுடன் பெருமளவு நெகிழ் தன்மை கொண்டதொன்றாகவும் விளங்கியது. அயனமண்டல உலகின் பல குறைவிருத்தி நாடுகளில் சீவனோபாய உற்பத்தியில் ஈடுபட்டிருந்த குடும்ப ஊழியம், பொதுவாக கீழ் உழைப்பு நிலையிலேயே பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக, அறுவடைக்காலம் தவிர்ந்த பிறகாலப் பகுதிகளில் இது கூடியளவு உண்மையுடையதாயிருந்தது. அதனால் இந்த ஊழியத்தை வேறு தேவைகளுக்கு இலகுவாகப் பயன்படுத்த முடிந்தது. ஆகவே பெறுமதி வாய்ந்த ஏற்றுமதிப் பயிரொன்றின் அறிமுகம் கிடைக்கக்கூடிய ஊழியத்தின் எல்லைவிளைதிறனைச் சடுதியாக உயர்த்தி, அதன் பயன்பாட்டு விகிதத்திலும் விரைந்த அதிகரிப்பைக்கொண்டு வந்தது. ஆனால் பெருந்தோட்டங்கள் இதற்கு முற்றிலும் முரண்பட்டதாகத் தமது ஊழியத் தேவைகளை எந்நிலையிலும் இலகுவாகப் பூர்த்தி செய்து கொள்ள முடியவில்லை. இலங்கை, மலேசியா, மேற்கிந்திய தீவுகள், போன்ற நாடுகளில் ஊழியப் பற்றாக்குறை அத்துணை மோசமாயிருந்ததால், ஒழுங்கான ஊழிய நிரம்பலை உறுதி செய்து கொள்ளும் பொருட்டுப் பெருந்தோட்டங்கள் ஊழிய இடப்பெயர்வுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதாயிருந்தது. இது விடயத்திற் குறிப்பிடப்பட வேண்டிய இன்னோர் அம்சம் என்னவெனில் பெருந்தோட்டங்களிலான சில கட்டமைந்த இறுக்கத் தன்மைகள் ஆகும். இது அவற்றின் பேரளவு உற்பத்தி, பாரிய மூலதன ஒதுக்கீடு என்பவற்றின் வழி ஏற்படும் ஒரு விளைவாகும். பெருந்தோட்டங்களை நிர்வகிப்பதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் தீர்மானங்களை எடுத்தல் ஓரிடத்திற் குவிந்திருத்தல், ஊழியக் கட்டுப்பாடு போன்றவை சில நெகிழாத் தன்மைகள் ஏற்படுவதற்குக் காரணமாயமைந்தன. எனினும், குடியான்கள் உற்பத்தியில் இவை பொதுவாகக் காணப்பட மாட்டா. ஆகவே இதிலிருந்து, சிற்றுடைமையாளர் தமது உள்ளீடுகள் மீதான கட்டுப்பாடு பெருமளவுக்கு நெகிழ்ந்து கொடுக்கக்கூடியதொன்றாயிருப்பதால் தமது பெருந்தோட்டச் சகபாடிகளை விட உற்பத்தி இயலுமையை விரிவுபடுத்துவதிற் கூடியளவு வாய்ப்புடையவர்கள் என முடிவு செய்யலாம்.

(அடுத்த இதழில் தொடரும்)

# அரச அடைமான முதலீட்டு வங்கி

1975 ஆம் ஆண்டு 13ஆம், இலக்க அடைமான முதலீட்டுச் சட்டப்படி 1979 ஜனவரி மாதம், விவசாய கைத்தொழிற் கடன் கூட்டுத்தாபனத்தையும் அரச அடைமான முதலீட்டு வங்கியையும் இணைத்து இவ்வங்கி உருவாக்கப்பட்டது.

கடமைகள்,

(I) விவசாய கைத்தொழில் முயற்சிகளுக்காக காணிகளை விலைக்கு வாங்கவோ, வாடகைக்குப் பெறவோ தேவையான கடன் பணத்தை வழங்குதல்.

(II) விவசாய, கைத்தொழில் முயற்சிகளுக்கு கட்டிடங்கள், பொறிகள், கனிப் பொருள் உடைய நிலங்கள் போன்றவற்றை விலைக்கு வாங்கவோ, வாடகைக்குப் பெறவோ கடன் வழங்குதல்.

(III) குடியிருப்புக்காக நிலங்களை வாங்கவோ, வாடகைக்குப் பெறவோ கடன் வழங்குதல்.

(IV) மேற் கூறப்பட்ட தேவைகளுக்காக பெறப்பட்ட கடனை அடைக்கக் கடன் கொடுத்தல்.

(V) பொருளாதார ஆராய்ச்சி தொடர்பான கல்வி முயற்சிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் நடாத்துதல் போன்றவற்றுக்குக் கடன் வழங்குதல்.

செயலாற்றம்:

அண்மைக் காலங்களில் இவற்றின் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் தொகை 1986 இல் 684 மில்லியனுயிருந்தது. வழங்கப்பட்டிருந்த கடன்கள் இதே ஆண்டில் 531 மில்லியனுகக் காணப்பட்டன.

வீடுகளின் நிர்மாணம், கொள்வனவு என்பவற்றுக்கு மொத்தக்கடனில் 86சதவீதம் வழங்கப்பட்டிருந்தது. வேளாண்மை நோக்கங்களுக்கு 3 சதவீதம் வரையே வழங்கப்பட்டன. கைத்தொழில் நோக்கங்களுக்கு கடன்கள் பெருமளவு வழங்கப்படவில்லை.

திருத்தம்;

1984இன் 29 ஆம் இலக்க அரச முதலீட்டு வங்கித் திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டத்தின்படி இவ்வங்கி தனது பணியாளர் சபையை விரிவாக்கவும், தனது நடவடிக்கைகளை விரிவாக்கவும் அனுமதிக்கப் பட்டது. இதன்படி அரசாங்கம், மத்தியவங்கி, வேறு வங்கிகள், நிதித் திட்டமிடல் அமைச்சினுல் ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனங்கள் என்பவற்றுல் வெளியிடப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட பங்குத் தொகுதி, பங்குகள், தொகுதிக் கடன் ஈடுகள், முறிகள் அல்லது பிணைகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்தல், விற்பனை, முதலீடு, போன்றவற்றில் ஈடுபடுவதற்கு இவ் வங்கிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

நிதி பெறல் :

இவ்வங்கி தனது தொழிற்பாடுகளுக்கான நிதியை பொதுத் திறைசேரியிலிருந்தும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்தும் (Employees Trust Fund) பெற்றுக் கொண்டது. இவற்றுடன் மேலதிகமாக தனது தொகுதிக்கடன் பத்திரங்களை வெளியிட்டும் நிதி திரட்டுவதுண்டு. கடன் மீட்புத் தொகையையும், தன் இலாபத்தையும் கூட அகநிதியாக பயன்படுத்துகிறது.

# இலங்கையின் அடிப்படை பொருளாதாரத் தகவல்கள்

| | 1986 | 1987 | 1988 |
|---|---|---|---|
| குடித்தொகை ('000) (நடு ஆண்டு) | 16,117 | 16,361 | 16,587 |
| குடித்தொகை அதிகரிப்பு (%) | 1.8 | 1.5 | 1.4 |
| குடித்தொகை அடர்த்தி (ச. கி. மீற்றருக்கான ஆட்கள்) | 249 | 254 | 256 |
| **தேசிய வருமானம்** | | | |
| மொ உ உ இன் வளர்ச்சி வீதம் (%) (உண்மை நியதிகளில்) | 4.3 | 1.5 | 2.7 |
| மொ தே உ இன் வளர்ச்சி வீதம் (%) (உண்மை நியதிகளில்) | 4.5 | 1.6 | 2.5 |
| தலைக்குரிய மொ தே உ (நடைமுறை விலைகள்) | | | |
| ரூபா | 9,918 | 10,598 | — |
| ஐ அ டொலர் | 354 | 360 | — |
| **முதலீடும் சேமிப்புகளும்** | | | |
| மொ உ உ இன் சதவீதமாக முதலீடு | 23.7 | 23.3 | — |
| மொ உ உ இன் சத வீதமாக தேசிய சேமிப்புகள் | 14.3 | 15.3 | — |
| **சென்மதி நிலுவை** | | | |
| மொ உ உ இன் சதவீதமாக ஏற்றுமதிகள் | 18.9 | 20.5 | 20.2 |
| மொ உ உ இன் சதவீதமாக இறக்குமதிகள் | 30.8 | 31.0 | 30.8 |
| மொ உ உ இன் சதவீதமாக நடைமுறைக் கணக்குக் குறை | 6.6 | 5.2 | 6.0 |
| மொ உ உ இன் சதவீதமாக மொத்தக் குறை | 1.4 | 1.4 | 1.9 |
| மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின் இறக்குமதிகளுக்கு | 4.4 | 3.7 | 2.6 |
| படுகடன் பணி விகிதம் | 26.4 | 27.7 | 28.8 |
| **அரச நிதிகள்** | | | |
| மொ உ உ இன் சதவீதமாக அரசிறை | 20.8 | 21.4 | 19.0 * |
| மொ உ உ இன் சதவீதமாக செலவு | 33.0 | 32.5 | 34.1 * |
| மொ உ உ இன் சதவீதமாக மீண்டெழும் செலவு | 18.9 | 20.1 | 21.1 * |
| மொ உ உ இன் சதவீதமாக நடைமுறைக் கணக்கு மிகை/குறை | 1.8 | 1.3 | — 2.1 * |
| மொ உ உ இன் சதவீதமாக வரவுசெலவுத் திட்டக் குறை (கொடைகளுக்கு முன்) | 12.2 | 11.1 | 15.1 * |

| | | | |
|---|---|---|---|
| **பண நிரம்பல்** | | | |
| $M_1$ இன் சதவீத மாற்றம் | 12.9 | 18.4 | 29.1 |
| $M_2$ இன் சதவீத மாற்றம் | 5.1 | 14.7 | 16.4 |
| $M_1$ இன் சதவீதமாகப் பொது மக்கள் வசமிருந்த கேள்வி வைப்புக்கள் | 45.4 | 46.2 | 42.8 |
| உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்க வீதம் (%) | 8.2 | 17.9 | 27.4 |
| **விலைகள்** | | | |
| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100) | | | |
| % மாற்றம் (திசெம்பரிலிருந்து திசெம்பர்) | 9.1 | 10.2 | 15.0 |
| ஆண்டுச் சராசரி % மாற்றம் | 8.0 | 7.7 | 14.0 |
| மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (1974 = 100) | | | |
| % மாற்றம் (திசெம்பரிலிருந்து திசெம்பர்) | 12.7 | 13 0 | 9.3 |
| ஆண்டுச் சராசரி % மாற்றம் | — 2.9 | 13.4 | 17.8 |

* திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## உள்நாட்டு உற்பத்தியின் சேர்க்கை (சதவீதத்தில்)

| | 1958 | 1978 | 1988 |
|---|---|---|---|
| **துறைகள்** | | | |
| சேவைத்துறை | 45.3 | 51.2 | 49.8 |
| விவசாயம் | 36.5 | 26.0 | 23.8 |
| தயாரிப்புத் தொழில் | 12 8 | 14.6 | 16.5 |
| கட்டட அமைப்பு | 5.0 | 4.6 | 7.1 |
| சுரங்கத் தொழிலும் கல் அகழ்தலும் | 0.4 | 3.6 | 2.8 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100 0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## இலங்கையின்.... (40ம் பக்கத் தொடர்ச்சி)

வியாபாரம் போக்குவரத்து போன்ற துறைகளில் நேரடி மறைமுக தொழில் வாய்ப்புகளும் கணிசமான வளர்ச்சி பெற்றன. குறிப்பாக தனியார் நிறுவனங்களில் தொழில் வாய்ப்பு விரிவடைந்து சென்றிருந்தது.

இக்காலப் பகுதியில் சுற்றுலாத்துறையும் குறிப்பிடத்தக்கதாகும். 1966க்குப் பின் ஓரளவு கவனத்திற்கு உட்பட்ட இத்துறை 1977லிருந்து சிறப்பான வளர்ச்சி பெற்று வந்தது. 1983 வரை இத்துறையின் பங்கு குறிப்பிடத்தக்கதாகவே காணப்பட்டது. தொடர்ந்து அதன் பங்கு அதிகரித்தும் வந்தது. இனக்கலவரங்களின் பின் இலங்கைக் கெதிராக பிரசாரங்கள் அதிகரித்ததாலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் பாதித்த மந்த நிலைமைகளினாலும் 1983லிருந்து இத் துறையின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. ஆனாலும் 1986லிருந்து மீண்டும் நிலைமை ஓரளவு திருத்தமடைந்து வருகிறது. இத்துறையும் ஊழியச் செறிவானது என்பதால் இதுவும் தொழில் வாய்ப்பு அதிகரிப்பில் குறிப்பிடத் தக்க பங்கினை வழங்கி வருவதாயமைந்துள்ளது.

| வருடங்கள் | மொத்தத்தேசிய உற்பத்தியிலான சேவைகள் துறையின் சதவீதம் |
|---|---|
| 1970 | 48.7 |
| 1977 | 50.9 |
| 1979 | 50.3 |
| 1982 | 47.4 |
| 1987 | 50.1 |

மூலம்; மத்திய வங்கி மீளாய்வுகள் 1977, 1987

இத்துறையில் சிறிதளவு மாற்றங்கள் காணப்படுகின்றன. இத்தளம்பல் குறிப்பிடத்தக்களவில் இல்லை. இதனால் பெருமளவில் மாற்றமில்லாதனவாகவே இதன் சதவீதங்கள் காணப்படுகின்றன.

முழுமையாக நோக்கும்போது இந்த மாற்றங்கள் பொதுவான வளர்ச்சியையே காட்டுவனவாயுள்ளன.

—X—X—

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் 18-8-??)

# இலங்கையில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் பிரிவுகள்

சி. அம்பிகாதேவி

*1977* ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற வெளிநோக்கிய பொருளாதாரக் கொள்கையின் மற்றுமோர் வெளிப்பாடாக நாட்டின் நிதித் துறை அபிவிருத்திகளைக் கூறிக்கொள்ள முடியும். திறந்த பொருளாதாரக் கொள்கையும் அதன் வழி நெறிப்படுத்தப்படுகின்ற உள்நாட்டு, வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளும் பாரியளவான நிதித் தேவையை வேண்டி நின்றதன் காரணமாக அதற்கேற்ப நிதிச் சந்தையும் விரிவுபட வேண்டியதேவை ஏற்பட்டது. முக்கியமாக கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் ஆதரவில் சுதந்திர வர்த்தக வலயம் தாபிக்கப்பட்டபின் இவற்றில் வெளிநாட்டுத் தனியார் முதலீட்டைக் கவருவதற்கு இவ்வாறான ஒரு வெளிநோக்கிய நிதித்துறைச் சேவை அவசியமாகக் கருதப்பட்டது. இவ்வகையில் வெளிநாட்டு முதலீடுகளைக் கவரக்கூடிய வகையிலும், அவற்றை ஒழுங்குபடுத்தக்கூடிய வகையிலும் 1977 – லிருந்து இலங்கையின் நிதித்துறை ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது

வெளிநோக்கிய நிதித் தொழிற்பாடு என்பது இலங்கை வங்கியியல் வரலாற்றில் புதிதானதொன்றல்ல. இலங்கையின் வங்கி வரலாற்றின் ஆரம்ப கட்டங்களே (1825) வெளிநாட்டு வங்கிகளுடனேயே ஆரம்பிக்கின்றன. உதாரணமாக பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்ட முதலீடுகளை ஊக்குவிக்கவும் அவற்றின் லாபங்களைத் தாயகத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் அக்காலத்தில் இயங்கிய வங்கிகள் பெரிதும் உதவின. எனவே வெளிநோக்கிய ஒரு வங்கிச் செயற்பாடு இலங்கையின் பெருந்தோட்ட வரலாற்றுடனேயே ஆரம்பித்துவிட்டது எனலாம். எனினும் இன்றைய கால வங்கிச் செயற்பாடுகளுக்கும், ஆரம்பகால வங்கிச் யெயற்பாடுகளுக்குமிடையில் அவை மையம் கொண்டுள்ள பிரதேசங்களைப் பொறுத்து முக்கிய வேறுபாடு காணப்படுகின்றது. இன்றைய கால வங்கிச் செயற்பாடுகள் பெரும்பாலும் கைத்தொழில், வர்த்தகத் துறைகளைத் தமது முதலீட்டு மையங்களாகக்கொள்ள, ஆரம்பகால வங்கிகள் பெருந்தோட்டத் துறையையே தமது முதலீட்டு மையங்களாகக் கொண்டுள்ளன. மேலும் இன்றைய கால வங்கிகள் நவீன நிதிச் சந்தை அமைப்புக்கேற்ற வகையில், பல்வேறு பணக் கருவிகளினூடாக பன்முகப்படுத்தப்பட்ட வகையில் செயற்படுகின்ற போது முன்னைய வங்கிகள் இவற்றுக்கு மாறாக ஒருமைப்பட்ட செயற்பாட்டினை, அதாவது குறிப்பிட்ட வங்கி தாய்நாட்டு வங்கியுடன், அல்லது அதன் குடியேற்ற நாடுகளில் உள்ள தனது கிளைகளுடன் மட்டுமே செயற்பட்டு வந்தது.

இன்று இலங்கையில் ஆறு சுதேச வர்த்தக வங்கிகளும், பதினுன்கு வெளிநாட்டு வர்த்தக வங்கிகளும் தொழிற்படுகின்றன. இவ்வெளிநாட்டு வங்கிகளில் ஐந்து மட்டும் சுதந்திரத்திற்கு முற்பட்ட கால வங்கிகளாகக் காணப்பட ஏனைய வங்கிகள் மிகவும் காலத்தால் பிந்திய அதாவது 1979 திலும், அதற்குப் பின்னரும் தாபிக்கப்பட்டவையாகும். வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்பிரிவுகள் என்பது தனியொரு வங்கியாகவன்றி மேற்கூறிய வர்த்தக வங்கிகளுடன் செயற்படும் ஒரு வங்கிப்பிரிவாகும். இந்த வகையில் இலங்கையின் வெளிநோக்கிய நிதிக்கொள்கை என்ற அம்சத்திற்குள் சுதேச வர்த்தக வங்கிகளும் (வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற்பிரிவுகளை அமைத்துக் கொண்டதன் மூலம்) உள்ளடங்குவதை அவதானிக்கலாம்.

பொதுவாக இலங்கையின் வெளிநோக்கிய நிதிக்கொள்கையைப் பின்வரும் மூன்று அம்சங்களின் கீழ் ஆராயமுடியும்.

1. இலங்கையின் சுதேச வர்த்தக வங்கிகள் வெளிநாட்டில் கிளை திறந்து செயற்படுதல்.
2. வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் இலங்கையில் கிளை திறந்து செயற்படுதல்.
3. இலங்கையில் வர்த்தக வங்கித் தொழிலில் ஈடுபடுகின்ற சகல வங்கிகளும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்பிரிவை ஏற்படுத்திச் செயற்படுத்தல்.

இம்மூன்று அம்சங்களிலும் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட உள்நாட்டு வர்த்தக வங்கிகள் வெளிநாட்டில் கிளை திறந்து இலங்கையின் நிதிச் சந்தையைப் பிரபல்யமடையச் செய்வதில் மிகக் குறைந்தளவு பங்களிப்பினையே செய்கின்றன.

இதுவரை இலங்கை வங்கி மட்டுமே வெளிநாட்டுக் கிளை திறப்பினைச் செய்ய முன் வந்துள்ளது. இதுவும் 1949, 1982 ஆகிய ஆண்டுகளில் முறையே லண்டன், சிங்கப்பூர் ஆகிய நகரங்களில் கிளை திறந்து வங்கித் தொழிலை நடாத்துகின்றமையால் வெளி நாடு நோக்கிய இதனது. செயற்பாடு இன்னமும் ஒரு பரீட்சார்த்தக் கட்டத்திலேயே இருப்பதால் இதுபற்றிய மதிப்பீடுகள் ஆய்வு செய்யப்பட முடியாததாக உள்ளன. அடுத்து இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட அம்சம் உள்நாட்டு நிதிச் சந்தை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் எதிர்பார்த்தளவு வெற்றியை வழங்கவில்லை என்றே கூறலாம். ஏனெனில் வெளிநாட்டு வங்கிகள் கொழும்பு மாவட்டத்தையே தலைமை அலுவலகமாகக் கொண்டுள்ளதனுல் பணமயப்படுத்தப்படாத கிராமியத் துறைகளும், ஏனைய மாவட்டங்களும் இது தொடர்பாகப் புறக்கணிக்கப் படுவதை அவதானிக்கலாம். எனவே தேசிய மட்டத்திலிருந்து நோக்கும்போது இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் எதிர்பார்த்தளவு வங்கியியல் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாதனவாக உள்ளன.

ஒப்பீட்டளவில் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட சகல வர்த்தக வங்கிகளிலும் இயங்குகின்ற வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவு (FCBU) என்பதே இலங்கையில் பரந்தளவில் வெளி நாட்டு வங்கித் தொழிலை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. கரைகடந்த வங்கித் தொழிற்பாடு இதன் ஆரம்பத்துடன் செயற்படுகின்றது. FCBU என்பது வெளிநாட்டு நாணயங்களில் வைப்புக்களை ஏற்பது, கடன் வழங்குவது என்ற தொழிற்பாடுகளைச் செய்வதற்காக வர்த்தக வங்கிகளினுல் தாபிக்கப்பட்ட ஒரு பிரிவாகும். பொதுவாக இதனுடன் தொடர்புகளை வைத்திருப்பதற்கு வதிவற்றோரே (Non – Residents) தகுதியுடையோராயினும், (வதிவற்றோரால் ஆரம்பிக்கப்படும் கணக்கு வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு எனப்படும். இதுபற்றிய விபரம் பின்னிணைப்பில் உள்ளது). இன்று கொழும்பு பெரும்பாக ஆணைக்குழு முதலீட்டாளர்களும், மற்றும் மத்திய வங்கியின் அனுமதியைப் பெற்ற வதிவுடையோரும் (Residents) தகுதியுடையவர்களாகக் கருதப்படுகின்றனர்.

FCBU தனியே சுதேச வங்கிகளினதும், வெளிநாட்டு வங்கிகளினதும் தலைமையலு

வலகங்களுடன் மட்டுமன்றி அவற்றின் பிராந்திய கிளைகளுடனும் இணைந்து செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் இது மக்கள் மத்தியில் வங்கிப்பழக்க வழக்கத்தையும், வெளிநாட்டு நாணயச் சம்பாத்தியங்களையும் ஏற்படுத்துவதற்கு உதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் வர்த்தக வங்கித்தொழில் நடவடிக்கையிலிருந்து இதுவரை அந்நியப்படுத்தப்பட்டிருந்த பணச்சந்தை அபிவிருத்திகள் புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் மாற்றமடைந்துள்ள பணச்சந்தைக் கருவிகள் உதவியுடன் இவ்விரு தொழிற்பாட்டையும் ஒன்றிணைக்கும் அலகாக FCBU செயற்பட்டு வருகின்றமை அதன் சிறப்பம்சமாகும். (FCBUக்கள், உட்பட சகல பணச்சந்தை அமைப்புக்களையும், பணத்தரகர்களையும் இணைத்து செயற்படும் கழகங்களாக வொறெக்ஸ் களரி காணப்படுகின்றது. பின்னிணைப்பு - II ஐப் பார்க்க) 1979 ஆம் ஆண்டு மத்திய வங்கி பொருளாதார மீளாய்வில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கையினை ஒரு சர்வதேச நிதிநிலையமாக ஊக்குவிப்பதற்கும், வெளிநாட்டு மூலவளங்களை நாட்டின் அபிவிருத்தி நோக்கி அசைவுறச் செய்வதற்கும் இவ்வங்கிப் பிரிவுகள் உதவ வேண்டும் என நிதிமந்திரியால் கூறப்பட்டது. 1979 - மே மாதத்தில் கரைகடந்த வங்கித் தொழில் முறையின் (Off - Shore Banking System) ஆரம்ப கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்ட FCBU, இன்று நாட்டின் நிதித்துறை அபிவிருத்திக்கு மட்டுமன்றி, முதலீட்டுத்துறை அபிவிருத்திக்கும் முக்கிய பங்காற்றி வருகின்றது.

இலங்கையில் FCBU தாபிக்கப்படுவதற்கு புவியியல் ரீதியாக அது ஒரு கேந்திர நிலையமாக அமைந்திருப்பது (மேற்குலக - கிழக்குலக நிதிச்சந்தைகளின் மத்தியில்) ஒரு காரணமாக அமைந்தாலும் பின்னணியில் அரசியல், பொருளாதார காரணங்களும் இணைந்தே இவ்வாறு இயங்க வைத்துள்ளது எனலாம். அரசியல் ரீதியாக நோக்குமிடத்து அமெரிக்கா, யப்பான், இந்தியா மற்றும் மேற்கைரோப்பிய நாடுகளினது அரசியல் லாபம் கருதிய செயல் என்பதும், பொருளாதரர ரீதியாக அடிப்படையில் இலங்கை வெளிநாட்டு உதவிகளை நாடி நிற்பதும், இதனை இலகுபடுத்தக்கூடிய வகையில் திறந்த பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப் பட்டதும், இவற்றின் பலாபலன்களாக உருவாக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயமும் இகர பல்தேசியக் கம்பனியின் நடவடிக்கைகளும் ஒரு நிதித் தேவைக்கான சூழ்நிலையை உருவாக்கியதால் இங்கு FCBU தோற்றம் பெற்றதெனலாம். மேலும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் கொழும்பில் அமைந்திருப்பதனுல் வெளிநாட்டவர்களின் பணக்கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்தவும், வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கவும் சிறந்த வங்கி வசதியை ஏற்படுத்தும் நோக்குடனும் முக்கியமாக கொழும்பையொரு சர்வதேச நிதி நிலையமாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

FCBU ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதன் தொழிற்பாடுகள் தனியே ஐக்கிய அமெரிக்க டொலருடனும், ஸ்ரேலிங் பவுனுடனும் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டுமென அனுமதிக்கப்பட்டது. ஆனுல் சர்வதேச வங்கித்தொழில் விருத்திக்கு இவ்விரு நாணயங்களும் மட்டும் நிறைவு தருவனவாக அமையமாட்டாது என்பதால் 1980-ஆம் ஆண்டளவில் மேலும் எட்டு நாடுகளது (பிரெஞ்சு பிராங், நெதர்லண்ட் கில்டர், யப்பான் யென், சுவிஸ் பிராங், சுவீடிஸ் குரோணர், மேற்கு ஜேர்மன் மார்க், சிங்கப்பூர், கொங்கொங் டொலர்) நாணயங்களும் FCBU வில் தொழிற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் FCBU பின்வரும் இலக்குகளின் அடிப்படையில் தாபிக்கப்பட்டது.

1. இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தனியார் முயற்சிக்கு அவர்களது திட்டத்திற்கான செலவையும் நடைமுறை மூலதனத் தேவையையும் சமாளிக்கக்கூடிய வகையில் வெளிநாட்டு நாணயத்தில் நிதியீட்டம் செய்தல்.

2. சுதந்திர வர்த்தக வலய முதலீட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி செய்தல்.

3. வெளிநாட்டு நாணயங்களில் வைப்புக்களைத் திரட்டிக் கடன் வழங்கல்.

4. சர்வதேச வங்கி வசதிகளை வழங்குவதும், சர்வதேச நிதிமையத்தின் அபிவிருத்தியின் முக்கிய செயல்முறையாகவும் விளங்க வேண்டும்.

FCBU யின் வெளிநோக்கிய நிதிச் செயற்பாடென்பது மேற்கூறியவகையிலான செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மட்டுமன்றி நடைமுறை அனுபவங்களும் கூட இதனை நிரூபிப்பனவாகவே உள்ளன. வெளிநாட்டுக் கடன்களைத் திரட்டி வழங்குவதினூடாகவும், வெளிநாட்டு நாணயங்களில் வைப்புக்களை ஏற்பதன்மூலமும், மேலதிக மூலவளங்களை நாட்டின் அபிவிருத்தி நோக்கி நகரச் செய்கின்றது.

FCBU க்கான தெளிவான வரைவிலக்கணம் இல்லாதபோதும் இதனுடைய தொழிற்பாட்டின் முக்கியதன்மையென்னவெனில், நாட்டுக்கு வெளியே வசிப்பவர்களுடனும், உள்ளே வசிப்பவர்களுடனும் தாராள வங்கியயற் கொள்கையில் வங்கித் தொழிலைக் கடைப்பிடிக்கின்றது. பொதுவாக FCBU நடவடிக்கைகளில் நாணய அதிகாரிகளின் கட்டுப்பாடோ அல்லது தலையீடோ குறைவாகத்தான் காணப்படுகின்றன.

1979-ம்ஆண்டு FCBU ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து வர்த்தக வங்கிகள், வெளிநோக்கிய வங்கித் தொழிற்பாட்டில் முன்னேற்றகரமான செயற்பாட்டைக் கொண்டிருக்கின்றன. 1979ல் 11 வர்த்தக வங்கிகள் மட்டும், FCBU வைத் தாபித்திருந்தன. ஆனல் 1984- முடிவதற்குள் நாட்டின் சகல வர்த்தக வங்கிகளுமே இதனைத் தாபித்துக் கொண்டன. FCBU க்களின் முழு அளவிலான செயற்பாட்டைப் பொறுத்தவரையிலும்கூட 1980-1987 ற்கு மிடைப்பட்ட காலப்பகுதியில் 5.4 மடங்கு வளர்ச்சியினை அடைந்துள்ளன. (மொத்தச் சொத்துக்கள் 3796. 2 மில்லியன் ரூபாவிலிருந்து 20404.7 மில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளன. அடுத்து யூரோ கடன்களைத் திரட்டி வழங்கும் செயற்பாட்டிலும் FCBU, குறிப்பிடக் கூடியளவு முன்னேற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது எனலாம். முக்கியமான கடன்வழங்கும் துறைகளாக GCEC பிரதேசங்களையும், ஏனைய அனுமதி பெற்ற வதிவுடையோரையும் தேர்ந்தெடுத்ததிலிருந்து யூரோ நாணயக்கடன் வழங்கல் செயற்பாடு அதிகரித்து வந்துள்ளது. உதாரணமாக 1981-ல் யூரோநாணயச் சந்தையில் (Euro-currency market) அரசாங்கம் திரட்டிய கடனில் 5 % தை (US டொலர் 75 மிலியன்) FCBU மூலம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

FCBU இன் வளர்ச்சியினை வங்கிச் செறிவுச் சுட்டெண் மூலமும் கணிப்பிடமுடியும். உதாரணத்திற்குக் கொழும்பு மாவட்ட சனத்தொகையையும், FCBU க்களின் எண்ணிக்கையையும் எடுத்து நோக்குவதன் மூலம் 1979 ற்கும் 1987 ற்குமிடையிலான FCBU—வாடிக்கையாளார் உறவு நிலையில் ஏற்பட்ட விரிவுநிலை புலப்படுகின்றது. 1979ல் 241,000 பேருக்கு ஒரு FCBU என்ற நிலையிலிருந்து 1987-ல் 74,520 பேருக்கு ஒரு FCBU என வங்கி — வாடிக்கையாளர் தொடர்பு நெருக்கமடைந்துள்ளதை அவதானிக்கலாம். இன்னொரு வகையில் கூறின் 1979-ம் ஆண்டு 4.13 ஆக இருந்த வங்கி செறிவுச் சுட்டெண் 1987-ல் 13.4 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறாக மேற்கூறிய தரவுகள் யாவும் FCBU கள் குறித்து சாதகமான போக்கினைத் தெளிவு படுத்துவதாக அமைந்த போதும், இந்நிலைமையானது FCBU களின் சமத்துவ வளர்ச்சியினூடாக ஏற்படுத்தப் படவில்லையென்பதும் இங்கு அவதானிக்கப் படக் கூடியதாக உள்ளது. இதனை FCBU கொண்டுள்ள வளங்களை உதாரணமாகக் கொண்டு நோக்கலாம். உதாரணமாக 1983 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் FCBU களின் மொத்த வளங்களில் 90 % தினை பதினொரு FCBU கள் (46 %) கொண்டிருக்க மீதி 10% வளங்களை பதின்மூன்று FCBU கள் (54%) கொண்டிருந்தன. இத்தரவு FCBU கள்

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் : 18-8-85)



தமக்கிடையே சமமான வளர்ச்சியை ஏற்ப டுத்தவில்லையென்பதையே எடுத்து விளக்கு கின்றது.

வெளிநாட்டு நாணயங்களில் பெறு கின்ற நிதிகளை (வைப்புக்கள்) உள்நாட்டுப் பொருளாதார அபிவிருத்தி குறித்துச் செயற்படுத்துவதில் FCBU கள் எவ்வகை யில் உதவின என்பதை அதன் சொத்த மைப்பை ஆராய்வதன் மூலம் புலனு கின்றது.

**இலங்கையில் FCBU வின் சொத்தமைப்பு ( துறைவாரியாக வீதாசாரப்படி )**

| காலம் | வதிவற்றோர் | | வதிவுடையோர் | | மொத்த |
|---|---|---|---|---|---|
| | வைப்பு% | கடன் % | வைப்பு% | கடன் % | சொத்துக்கள் |
| 1980 | 61.9 | 54.0 | 32.6 | 41.3 | 3796.2 |
| 1982 | 66.8 | 59.2 | 29.9 | 35.5 | 13648 6 |
| 1984 | 65.7 | 61.2 | 26.2 | 32.3 | 19872.1 |
| 1985 | 61.7 | 58.1 | 32.4 | 33.9 | 20079.4 |
| 1986 | 66.6 | 61.2 | 27.2 | 30.3 | 18123.6 |
| 1987 | 68.7 | 60.7 | 31.3 | 39.3 | 20404.7 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை — 1987

இலங்கைக்கான வெளிநாட்டுதவி கிடைப்பதற்கான ஆதாரங்கள் குறைவ டைந்துவரும் இக்கால கட்டத்தில் FCBU வெளிநாட்டிலிருந்து வைப்புக்களைப் பெற்று உள்நாட்டவருக்குக் கடன் வழங்கி வருவது சிறம்பம்சமாகும். பொதுவாக FCBU வின் செயற்பாட்டில் அது ஏற்றுக்கொள்ளும் வைப்புக்களையும்' வழங்குகின்ற கடன்களை யும் எடுத்து நோக்கும்போது அதன் முத லாவது நிதியாண்டிலிருந்து (1980) இன்று வரையிலான செயற்பாடுகளில் ஏறக்குறைய 54% திலிருந்து 70% வரை வதிவற்றோரு டனும், 30% திலிருந்து 42% வரை வதிவுடையோருடனும் (உள்நாட்டவருட னும்) மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது புலனுகிறது. இதன்படி உள்நாட்டு முதலீட் டாளர் FCBU தொடர்பிலிருந்து சிறிது விலகிக் காணப்படுகின்றனர் என்றவொரு தவறான கருத்து நிலவினுலும்கூட உண்மை யில் FCBU விலிருந்து தேறிய நன்மைகளைப் பெருமளவில் அனுபவித்தவர்கள் சுதேசிக ளேயென்பதனை அதன் சொத்தமைப்பிலி ருந்து அறியமுடிகின்றது. உதாரணமாக 1987-ம் ஆண்டினை எடுத்து நோக்கும் போது வதிவற்றோரின் வைப்புகள் முழுதும் அவர்களுக்கே திரும்பவும் கடனுக்கம் செய் யப்படாது, அதிலொரு பகுதி அதாவது 809 மில்லியன் ரூபா மிகைவைப்பும், FCBU வினுல் திரட்டப்பட்ட நிதியாகக் காணப்ப டுகின்றது. (1987-ல் வதிவற்றோரின் வைப் புக்கள் 12544.9 மில்லியன் ரூபா கடன்கள் 11735.9 மில்லியன் ரூபா) இந்நிதியானது வங்கியினுல் சோம்பிக் கிடக்கும் பணமா கக் கருதப்படாது. மீண்டும் வதிவோர் சார்பில் ஏற்படுகின்ற எதிர்க்கணிய நிலு வைகளை ஈடு செய்யப் பயன்படுகிறது. இந்த காலத்தில் வதிவுடையோரிடமிருந்து பெற்ற வைப்பாக 5721.8 மில்லியன் ரூபாவும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடனுக 7603.4 மில்லியன் ரூபாவும் காணப்பட இதிலுள்ள எதிர்க்கணிய நிலுவையான 1882 மிலியன் ரூபாவின் ஒரு பகுதி இவ்வாறு திரட்டிய நிதியிலிருந்தே நிரப்பப்படுகின்றது. எனவே இன்னெருவகையில் கூறின் உள்நாட்டு முத லீட்டாளரின் நிதித்தேவையை ஈடுசெய்யக் கூடிய வகையில் வெளிநாட்டு நிதியைத்

திரட்டி வழங்குகின்ற அதே நேரம் இது ஆரம்பித்த காலத்தில் எவ்வகையான நிதித் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனவோ (மேலதிக நிதிகளைத் திரட்டி அபிவிருத்திக்கு வழங்குதல்) அவற்றை இப்போது ஓரளவிற்காவது நிறைவு செய்வதையும் அவதானிக்க முடிகிறது. சுருங்கக்கூறின் FCBU வின் சொத்தமைப்பில் காட்டப்பட்டவாறு வதிவற்றோரின் நிலுவைகள் நேர்க்கணியப் போக்கில் அமைவதும், வதிவுடையோரின் நிலுவைகள் எதிர்க்கணிய ரீதியில் அமைவதும் மறைமுகமாக FCBU ஊடாக வெளிநாட்டுநிதி இலங்கையில் GCEC முதலீட்டாளருக்குப் பயன்படுகிறது என்பதையே புலப்படுத்துகின்றது.

உள்நாட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு வேண்டிய நிதிக்கு கணிசமான அளவு பங்களிப்பினைச் செய்கின்றன எனினும், இலங்கையில் செயற்படுகின்ற FCBU கள் அரசாங்கத்தின் வெளியுலக அரசியலுறவுகளின் வெளிப்பாட்டின் ஓரம்சமே என்பதும் புலனாகிறது. அதாவது பல்தேசியக் கம்பனிகளின் ஊடாக நிர்வகிக்கப்படுகின்ற கைத்தொழில் முதலீடுகளுக்கான நிதியீட்டத்தைத் தொடர்ந்தேர்ச்சியாக வழங்குவதற்கொரு நிதிநிறுவனம் வேண்டுமென்ற அடிப்படையிலேயே குறிப்பிட்ட வெளிநாடுகளால் இலங்கையில் வெளிநாட்டு வங்கிக் கிளைகளும், அவற்றில் FCBU களும் தாபிக்கப்பட்டனவேயொழிய உண்மையில் இலங்கை அரசாங்கம் குறிப்பிடுவது போல வெளிநாட்டவர் தமது மிகை மூலவளத்தை உள்நாட்டுப் பொருளாதார அபிவிருத்தியில் ஈடுபடுத்துவதற்கல்ல. இவ்வகையில் உலகின் பெரும் செல்வந்த நாடுகளான அமெரிக்கா, யப்பான் போன்றனவே FCBU வுடன் அதிளவு தொடர்பினைக் கொண்டுள்ளன. இலங்கையில் தனிப்பட்ட முறையில் இவ்வங்கிப் பிரிவுகளிற் சில வெவ்வேறு புதிய திட்டங்களை (பணக்கருவிகளை) அறிமுகப்படுத்தி கையாள்வதினூடாக தமக்குள்ளே போட்டியடிப்படையில் வளர்ச்சியடைகின்றன. உதாரணமாக இந்தியன் வங்கிகளினுல் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மிதக்கும் வீத வைப்புச் சான்றிதழ் திட்டமானது (Floating Rate Certificate of Deposits FRCD) கூடுதலான அளவு வைப்புக்களை ஏற்பதற்கும், அத்துடன் வங்கித்தொழிலை மேலும் விருத்தியடையச் செய்வதற்கும் உதவுகின்றது.

எவ்வாறுயினும் அந்நியச் செலாவணித் தட்டுப்பாட்டையும், மூலதனப் பற்றுக்குறையையும் எதிர்நோக்கியுள்ள இலங்கை போன்ற நாடுகளுக்கு வெளிநாட்டு உதவிகள் நெருக்கடியாகவுள்ள இக்காலத்தில் FCBU வின் நிதியீட்ட வசதிகள் சாதகமாக அமைவதுடன், புதிய பணச்சந்தையினூடாக நிதிச்சந்தையை வளர்ச்சியடையச் செய்யவும் உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இலங்கையில் FCBU களின் செயற்பாடு இன்னமும் வளர்ச்சிப் பருவத்திலேயே இருப்பதனுல், இது பற்றித் தற்போது கிடைக்கின்ற மதிப்பீடுகளின் படி இலங்கையை மேலும் நிதித்துறையில் வளர்ச்சியடையச் செய்வதற்கான சாத்தியங்களே பெருமளவில் காணப்படுகின்றன.

—X—X—

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்,
(ஆரம்பம் : 18-8-85)

# பொருளியலாளன்

## யூன் 1989

★

## வினு விடைத் தொகுதி - 3
(இலவச இணைப்பு)

★

இளம் பொருளியலாளர் நிறுவனம்

## கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்;

1964 மார்ச் மாதத்தில் உருவாக்கப்பட்டவை இவையாகும். இது ஒரு மரபுவழியான வங்கி மாதிரியானதல்ல. கிராமியத் துறைக்கு வங்கித்துறை வசதிகளை வழங்குதற்காக மக்கள் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்டவை இவையாகும். இவ்வங்கிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிக்கருவியாகும். தற்போது 282 கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும் 685 கூட்டுறவுக் கிராமிய வங்கிக் கிளைகளும் காணப்படுகின்றன.

இது பின்வரும் நோக்கங்களுடன் தொடக்கப்பட்டிருந்தது.

1. சங்க அங்கத்தவர்கள் நலன் கருதி கடன்வசதி கொடுத்தல்
2. வழங்கப்பட்ட வசதிகள் தொடர்பாக கடன் மேற்பார்வை செய்தல்
3. கணக்குப் பதிவுகள், ஆவணமுறை என்பவற்றைச் சீராகப் பேணுதல்
4. சேமிப்பு அதிகரிப்பு வழிகளை மேம்படுத்தல்

இந்த நோக்கங்கள் கொண்டதாக, தெரிந்தெடுக்கப்பட்ட தகுதியுடைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வங்கித் தொழிலை மக்கள் வங்கி ஏற்படுத்தியது.

மக்கள் வங்கி பின்வரும் வழிகளில் இதற்கு உதவியளித்தது:

1. கடன் வழங்குதற்காக நிதி வழங்குதல்
2. அதன் அலுவலர்க்கு முகாமைத்துவ உதவி வழங்குதல்
3. தளபாடங்கள், பெட்டகம், உபகரணங்கள் போன்றவற்றை வழங்குதல்
4. தேவையான மேற்பார்வை நடவடிக்கைகளைச் செய்தல்
5. அடைவு பிடித்தலுக்கான எல்லா உதவிகளையும் வழங்குதல்
6. இவ் வங்கிகளில் மிகை ஏற்படும் காலங்களில் மக்கள் வங்கியில் நிலையான வைப்புக்களிலும், சேமிப்பு வைப்புகளிலும் அவற்றை இடுவதற்கு அனுமதித்தல்

(தொடர்ச்சி பின் அட்டை உட்பக்கம்)

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

# இலங்கையின் பொருளாதார அமைப்பு

**வினா 1**

(அ) இலங்கை சுதந்திரம் எய்திய காலகட்டத்தில் பிரித்தானியக் குடியேற்ற ஆட்சியின் பயனாக அது பெற்ற பொருளாதாரத்தின் பிரதான இயல்புகள் யாவை?

(ஆ) சுதந்திரத்திற்குப் பின்னர் கடந்த நாற்பது ஆண்டுகளில் நமது பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பிரதான மாற்றங்கள் யாவை? *(1988)*

**விடை 1**

(அ) பிரித்தானியர் இலங்கையை 1796ம் ஆண்டு கைப்பற்றி 153 வருடங்கள் ஆண்ட பின்னர் இலங்கைக்கு 1948ல் சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரமடைந்த காலகட்டத்தில் பிரித்தானியக் குடியேற்ற ஆட்சியின் பயனாக இலங்கை பெற்றிருந்த பொருளாதாரத்தின் பிரதான இயல்புகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

(A) அதிகளவிலான ஒழுங்கமைக்கப்பட்ட இந்தியத் தொழிலாளர்களையும் அந்நிய முதலீட்டையும், நவீன முறையிலமைந்த முகாமைத்துவத்தையும், ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு உற்பத்தியை மேற்கொள்ளும் பெருந்தோட்டத்துறை ஒரு புறமும் பெருமளவிலான ஒழுங்கமைக்கப்படாத உள்ளூர் விவசாயிகளையும் குறைந்த முதலையும் பாரம்பரிய உபகரணங்களைப் பயன்படுத்தி சுயதேவைப் பூர்த்தியை நோக்கமாகக் கொண்டு உற்பத்தியை மேற்கொள்ளும் பின்தங்கிய கிராமியத்துறை மறுபுறமுமாகக் காணப்படும் இரட்டைப் பொருளாதாரத் தன்மை காணப்பட்டது.

(B) இலங்கை ஒரு ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாகக் காணப்பட்டது. ஏற்றுமதி வருமானத்தில் 90 சதவீதமான பங்கு தேயிலை, றப்பர், தெங்கு ஆகிய மூன்று பயிர்களிலிருந்தே பெறப்பட்டன. இம் மூன்று பயிர்கள் மூலம் பெற்றவருமானம் தேசிய உற்பத்தியில் மூன்றிலொரு பகுதியாகக் காணப்பட்டது. அரசாங்க வருமானம், இறக்குமதிகள் போன்றன பெருமளவு ஏற்றுமதி வருமானத்திலேயே தங்கியிருந்தன. அத்தியாவசிய உணவுப்பொருட்களான அரிசி, மா, சீனி போன்றனவும் பெருமளவு இறக்குமதி செய்யப்பட்டன. இதனால் ஏற்றுமதிப்

பொருட்களின் விலைகள் உலக சந்தையில் வீழ்ச்சியடையும் போது இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டது.

(C) பிரித்தானியர் காலத்தில் உள்நாட்டு விவசாயம் நன்கு கவனிக்கப்படாமல் இருந்ததால் உள்நாட்டு விவசாயத்துறை மிகவும் வளர்ச்சி குன்றிய நிலையில் இருந்தது. இதனால் சமமற்ற பொருளாதார வளர்ச்சி நாட்டில் காணப்பட்டது.

(D) பிரித்தானியர் தமது தாய் நாட்டில் உற்பத்தி செய்த கைத்தொழில் பொருட்களுக்கான சந்தையாக இலங்கையையும் கருதியிருந்ததனால் இலங்கையில் கைத்தொழிலை வளர்ப்பதில் அக்கறை காட்டவில்லை. இதனால் கைத்தொழில் துறையும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது.

(E) 19ம் நூற்றாண்டில் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது சிங்கள மக்கள் பெருந்தோட்டங்களில் வேலை செய்ய முன் வராததால் இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டனர். இதனால் நிலமற்ற ஒரு பாட்டாளிவர்க்கம் உருவாயிற்று.

(F) பிரித்தானியர் இலங்கையை கைப்பற்றியபோது மானியமுறைப் பொருளாதார அமைப்பாக இருந்தது. சுதந்திரமடைந்தபோது அது முதலாளித்துவ தன்மை கொண்ட பொருளாதாரமாக மாற்றமடைந்திருந்தது.

(G) 1947ம் ஆண்டில் இலங்கையின் மொத்த சனத்தொகை 7 மில்லியனாக இருந்தது. உயர்ந்த பிறப்பு விகிதமும், இறப்பு விகிதமும் காணப்பட்டன. பிறப்பு விகிதம் 39.7 ஆகவும், இறப்பு விகிதம் 13.0 ஆகவும் இருந்தது. ஆயுள் எதிர்பார்க்கை 50 வருடங்களுக்கும் குறைவாகவே இருந்தது.

(ஆ) சுதந்திரத்திற்குப் பின்னர் இற்றைவரை இலங்கையின் பொருளாதார அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவை பின்வருமாறு;-

(A) பெருந்தோட்ட விவசாயத்துறையின் முக்கியத்துவம் ஒப்பீட்டு ரீதியில் குறைவடைந்து உள்நாட்டு விவசாயத்துறையின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. 1986இல் பெருந்தோட்டத்துறை மொத்த தேசிய உற்பத்திக்கு அளித்த பங்கு 7 சதவீதமாக இருக்கையில் உள்நாட்டு விவசாயத்துறை குறிப்பாக நெல்லும் ஏனைய விவசாயப் பொருள்களும் அளித்த பங்கு 16 சதவீதமாகும்.

(B) இலங்கை சுதந்திரமடைந்த போது தேவையான அரிசியில் ஏறக்குறைய 1/3 பங்கு வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யவேண்டியிருந்தது. தற்போது அந்நிலை அகன்றுவிட்டதென்று கூறின் மிகையாகாது. குடியேற்ற திட்டங்கள், உரமானியம் வழங்கல், கிராமியக்கடன் வசதிகள், நீர்ப்பாசனவிருத்தி போன்ற பல்வேறு காரணங்களால் உள்நாட்டு அரிசி உற்பத்தி சுதந்திரம் பெற்றபோது இருந்த நிலையை விட பெருமளவு முன்னேற்றமடைந்துள்ளது.

(C) சுதந்திரத்திற்குப் பின்னர் வந்த அரசாங்கங்கள் காட்டிய ஆர்வத்தினால் கைத்தொழில் துறையும் வளர்ச்சி கண்டுள்ளது. தற்போது கைத்தொழில்துறை தேசிய உற்பத்தியில் பெறும் பங்கு ஏறக்குறைய 26 சதவீதமாக உள்ளது. ஏற்றுமதி நோக்கில் கைத்தொழிலினது வளர்ச்சி (உடுபுடவைகளும் ஆடையும்) 1977க்குப் பின்னர் துரித முன்னேற்றம் கண்டுள்ளது.

(D) ஏற்றுமதி வருமானத்திற்கு ஒரு சில பயிர்களில் மட்டும் தங்கி நின்றநிலை மாற்றமடைந்து ஏற்றுமதி பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. 1987 ல் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் தேயிலை (25.9%), றப்பர் (7.1%), தெங்கு (5.2%) ஆகியன 38%தை மட்டுமே பெற்ற அதேவேளையில் கைத்தொழில் பொருட்கள் பெற்ற பங்கு 48.6%மாக இருந்தது

(E) சுதந்திரம் பெற்றபோது இருந்ததைவிட தற்போது மொத்தசனத்தொகையினளவு இரு மடங்குக்கு மேலாக அதிகரித்துள்ளது. 1986 இல் சனத்தொகையினளவு 16.1 மில்லியனாகும். இறப்பு விகிதமும் (6.0) பிறப்பு விகிதமும் (22.3) குறைந்துள்ளன. ஆயுள் எதிர்பார்க்கை 69 வருடங்களாக அதிகரித்துள்ளது. சனத்தொகை வளர்ச்சி வேலைப்படையின் பருமனை அதிகரித்துள்ளது (6 மில்லியன்). கல்வியறிவு படைத்தோர் விகிதம் 87% மாக அதிகரித்ததால் கல்வியறிவு படைத்தவர்களிடையேயான வேலையின்மையும் அதிகரித்துள்ளது. தற்போது வேலையின்மையின் அளவு 18.4 % மாக உள்ளது.

வினா 2.

(I) ஏறத்தாழ 1983 ம் ஆண்டின் பின்னர் இனரீதியான பிணக்கு அதி தீவிரமடைந்தமை காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பிரதான இழப்புக்கள் என நீர் கருதுபவை யாவை?

(II) இலங்கையின் தற்போதைய தொழிலின்மை வீதம் தொழிற் சேனையின் சுமார் 18 % ற்கு அதிகரித்துள்ளது எனக் கூறப் படுகின்றது. இத் தொகை ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டவர் களைக் கொண்டதாகும். இத் தொகையினரிற் பெரும்பாலா னோர் இளைஞர்களே எனக் கருத முடியும்.

(அ) இத்தகையதொரு வேலையின்மைப் பிரச்சினை நிலவுவதனல் ஏற்படும் பொருளாதார சமூக விளைவுகள் யாவை?

(ஆ) ஏறத்தாழ ஐந்து வருட காலத்தினுள் இவ் வேலையின்மைப் பிரச்சினையைக் குறிப்பிடத்தக்களவு குறைப்பதற்கு நீர் செய்யக் கூடிய கொள்கை விதப்புரைகள் யாவை? (1988)

**விடை 2**

(I) (A) இனரீதியான பிரச்சினை தீவிரமடைந்தபோது அதனைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் இராணுவ பலத்தினையும் அதிகரிக்க முற்பட்டதனல் பாதுகாப்புச் செலவு அதிகரித்தது பாதுகாப்புச் செலவுக்கென ஒதுக்கப்பட்ட பணத்தை வேறு விடயங்களில் குறிப்பாக பொருளாதாரத்தில் அபிவிருத்தியினை ஏற்படுத்தத் தக்க விடயங்களில் செலவழித்திருப்பின் நாட்டின் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கலாம். அத்தகைய அபிவிருத்தி இல்லாமற் போனமை பொருளாதார ரீதியான ஒரு இழப்பாகும்.

(B) இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மீன்பிடித் தொழில், விவசாயம் (நெல், உப உணவுப் பயிர்கள்) என்பன வற்றின் உற்பத்தியில் கணிசமான அளவு வீழ்ச்சி ஏற்பட்டது.

(C) சேவைத் துறையின் உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. வங்கிகள் வேலை செய்த நாட்களின் எண்ணிக்கை குறை வடைந்தது. இதனுடன் தொடர்புடைய வர்த்தகமும் பாதிக்கப் பட்டது. இனப் பிரச்சினை காரணமாக நாட்டில் இருந்த அமைதியற்ற நிலையால் அமைதியையும், மகிழ்ச்சியையும் நாடி வரும் சுற்றுப் பிரயாணிகளின் தொகை வீழ்ச்சியடைந்தது.

(D) சமூகப் பொது முதலீடுகள் அழிவுற்றன. தொலைதொடர்பு, மின்சார வசதி, பெருந்தெருக்கள் அரசாங்கக் கட்டடங்கள் போன்றவற்றில் ஏற்பட்ட அழிவுகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

(E) அமைதியின்மை காரணமாக வியாபார நம்பிக்கை குறை வடைந்ததால் உள்நாட்டு, வெளிநாட்டு புதிய முதலீடுகள் தடைப்பட்டன. வெளிநாட்டு உள்நாட்டு முதலீட்டாளர்கள் சிலர் தமது உற்பத்தி நிலையங்களை மூடிவிட்டு சென்றனர்.

(F) வடக்கிலும், கிழக்கிலும் மக்களின் பொருளாதார வாழ்க்கை பாதிக்கப்பட்டது. குடும்பங்கள் உழைக்கும் நபர்களை இழந்தன.

இத்தகைய பிரச்சினைகளின் காரணமாக பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள நேரடிப் பாதிப்பானது 1987 வரை ஏறக்குறைய 50 பில்லியன் ரூபாவாக இருக்கலாமென உலக வங்கிக் குழுவொன்று மதிப்பிட்டுள்ளது.

(II) (அ) இளைஞர்களிடையே வேலையின்மை காணப்படின் அது பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வழி வகுப்பதாக அமையும்.

உற்பத்திச் சாதனங்கள் அருமை யானவை. உழைப்பும் உற்பத்திக் காரணிகளில் ஒன்றாகும். இந்நிலையில் அதனைப் பயன்படுத்தாமல் இருப்பது அருமையான வளங்களை வீணடிப்பதற்குச் சமமானதாகும். ஏனெனில் இழந்த உழைப்பு நாட்கள் திரும்பப் பெற முடியாதவையாகும்.

வேலையில்லாவிடின் வருமானம் பெற முடியாது. வருமானமில்லாவிடில் வறுமையில் தள்ளப்படுவர். எனவே நாட்டில் வறுமை அதிகரிப்பதற்கு வேலையின்மையும் ஒரு காரணமாக அமைகின்றது.

வேலையின்மை காரணமாக வறுமையில் வாடும் இளைஞர்கள் தவறான வழிகளையும் நாடமுற்படுவர். களவு செய்ய முற்படலாம். புரட்சிகள் தோன்றுவதற்கும் வேலையின்மை ஒரு காரணமாக உள்ளது. வேலையின்மை காரணமாக மன நலம் குன்றி விரக்தி ஏற்பட்டு தற்கொலை செய்ய முனையலாம். அல்லது சமூகத்திற்கு பயன்படாத, ஆனால் சுமையை அதிகரிக்கும் நிலைக்கு மாறலாம்.

(ஆ) வேலையின்மை நீக்கப்பட வேண்டுமாயின் எல்லாத் துறைகளிலும் முதலீடு அதிகரிக்க வேண்டும்.

உழைப்புச் செறிவு வாய்ந்த உற்பத்தி முறையினை வேண்டி நிற்கும் தொழில்களில் அதிக கவனம் செலுத்து மாறு தேசிய மட்டத்திலான அபிவிருத்தி உபாயமொன்று வகுக்கப்படல் வேண்டும்.

பிரதேசமட்டத்திலும் பெருமளவு உழைப்பை வேண்டி நிற்கும் தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஊக்கமளித்தல் வேண்டும். உதாரணமாக சிறுகைத் தொழில்களை உருவாக்கல் விவசாயத்தைப் பன்முகப்படுத்தல் ஆகியவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

வினா 3

பின்வரும் அபிவிருத்திகள் ஒவ்வொன்றும் இலங்கையின் பொருளாதாரத்தை எவவாறு பாதிக்கலாம் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(I) இலங்கையின் பாதுகாப்புச் செலவு 1978 இல் ரூபா 500மில்லியனிலிருந்து 1986இல் ரூபா 10000மில்லியனுக அதிகரித்துள்ளது.

(II) 1982 முதல் 1986 வரையான காலகட்டத்தில் வருகை தந்த உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 43 சதவீதத்திஞல் குறைந்துள்ளது.

(III) நாட்டின் சில பகுதிகளில் குறிப்பாக வடமேற்கு மாகாணத்தில் கடும் வரட்சி நிலவுவதாக அறிவிக்கப்படுகின்றது.

(iv) சமூல வெளிநாட்டுப் படுகடன் சேவை விகிதம் 1985 இல் 21 சதவீதத்திலிருந்து 1986 இல் 26 சதவீதமாக அதிகரித்தது.
(1987)

விடை 3

(i) பாதுகாப்புச் செலவு அதிகரிக்காவிடில் அதற்கென மேலதிகமாக ஒதுக்கப்பட்ட பணத்தை அபிவிருத்தியை அதிகளவு தரக்கூடிய, மக்களின் நலத்தை அதிகரிக்கக் கூடிய துறைகளில் முதலீடு செய்திருக்கலாம். இத்தகைய பண்டங்களின் உற்பத்தி இல்லாமல் போனமை பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட நட்டமாகும்.

இராணுவத்தினரின் பாவிப்புக்குத் தேவையான வாகனங்கள் இராணுவ ஆயுதங்கள், உடைகள், சப்பாத்து போன்றன வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இதனுல் அந்நிய செலாவணியை அனுவசியமாக தேவையற்ற வகையில் செலவு செய்ய வேண்டியதாயிற்று. இது சென்மதி நிலுவையின் பாதக நிலையை மேலும் அதிகரிக்கச் செய்தது

இராணுவ நோக்கங்களுக்காக செலவு செய்யப்படும் தொகை நேரடி பண்ட உற்பத்திக்கு உதவி செய்வது மிகவும் குறைவு. இதனுல் இச் செலவு பண வீக்கத்தினை ஏற்படுத்துவதற்கும் ஒரு காரணமாக அமைகின்றது.

(ii) (A) உல்லாசப் பிரயாணத்திஞல் பெறப்படும் வருமானம் சென்மதி நிலுவையின் கட்புலனுகாக் கணக்கில் பதியப்படும். 1982 – 1986 க்கிடையில் பயணிகள் வருகை குறைந்ததால் அந்நிய செலாவணி வருமானம் குறைய சென்மதி நிலுவையின் பாதக நிலையை அதிகரிக்க வழிவகுத்தது.

(B) உல்லாசப் பிரயாணத் தொழிலில் இருந்து பெறக்கூடிய வருமானம், வேலைவாய்ப்பு என்பன குறைவடைந்தன.

(C) உல்லாசப் பிரயாணத்துறையுடன் தொடர்புடைய கைப் பணிகள், (பற்றிக்,) போக்குவரத்து சேவைகள் என்பவற்றின் உற்பத்தி, தொழில் வாய்ப்பு என்பவவை குறைவடைந்தன.

(D) உல்லாசப் பயணிகள் தங்குவதற்கென கட்டப்பட்ட ஹோட்டல்கள், மிகை இயலளவுடன் இயங்கின.

(E) உல்லாசப் பயணிகளுடன் தொடர்புடைய ஹோட்டல்கள் சிற்றுண்டிச் சாலைகள் என்பவற்றினின்றும் பெறப்பட்ட அரசாங்கவரி வருமானம் (BTT) குறைந்தது.

(iii) இலங்கையின் வடமேற்கு மாகாணத்தில் பிரதான உற்பத்திப் பொருட்களாக நெல், தெங்குப் பொருட்கள் என்பன அமைகின்றன. வரட்சி ஏற்படின் அப்பொருட்களின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டு நிரம்பல் குறைய அவற்றின் உள்நாட்டு சந்தை விலைஅதிகரிக்கும். இதன் காரணமாக வறிய தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர்.

தெங்குப் பொருளின் ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்படும். இதனால் ஏற்றுமதி குறையும்.

அரிசி இறக்குமதி செய்ய வேண்டி ஏற்படலாம். இதனால் இறக்குமதி செலவு அதிகரிக்கும்.

பயிர்ச்சேதம் காரணமாக அப்பயிர்களை உற்பத்தி செய்யும் அப் பகுதி மக்களின் வருமானம் குறையும்.

பயிர்ச் சேதத்திற்கான நட்ட ஈட்டை அரசாங்கம் வழங்கின் அரசாங்கத்தின் சமூக சேவை செலவு உயரும்.

(iv) இலங்கையின் கடன் சுமை வேகமாக அதிகரித்துள்ளது என்பதையே இது தெரிவிக்கின்றது. ஏற்றுமதி மூலம் பெறப்படும் வருமானத்தில் 74 சதவீதத்தினையே இலங்கை தனது இறக்குமதிக்கோ, ஏனைய தேவைகளுக்கோ பயன் படுத்த முடியும் என்பதை இது காட்டுகின்றது. மேலும் கடன் சுமை குறைந்த உதவிகளையும், சலுகையடிப்படையிலான கடன்களையும் நாட வேண்டிய தேவையினை இது உணர்த்துகின்றது. ஏற்றுமதியைப் பெருக்கி இறக்குமதியைக் குறைத்து அந்நிய செலாவணியை அதிகரிக்க வேண்டிய நிலைமையையும் காட்டுகின்றது.

வினா 4

(அ) (i) ஒரு பொருளாதாரத்தில் உண்டாகும் அடிப்படையான அமைப்பு மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு நீர் பயன் படுத்தும் நடவடிக்கைகள் யாவை?

(ii) ஏறத்தாழக் கடந்த இரு பத்தாண்டுக் காலத்தில் இலங் கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பிரதான அமைப்பு மாற்றங்களை இனங்காண்க.

(ஆ) ''இலங்கையின் பொருளாதாரம் சேவைப்பகுதியிலேயே மிகுதி யாகத் தங்கியிருக்கின்றது'' இக்கூற்றை விளக்குக. இக்கூற்றி லிருந்து இலங்கையின் பொருளாதாரத்தின் வலிமை பற்றி உய்த்தறியக் கிடக்கும் உட்கிடைக் கருத்துக்கள் யாவை? (1986)

விடை 4

(அ) (i) ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறை, கைத்தொ ழில்துறை, சேவைத்துறை என்பன பெறுகின்ற வீதாசாரப்பங் கில் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாக வைத்து பொரு ளாதார அமைப்பில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து கொள்ள லாம். மேலும் மொத்த வேலை வாய்ப்பில் இத்துறைகள் பெறு கின்ற வீதாசாரப் பங்கில் ஏற்படும் மாற்றங்களும் இதனை அறிவ தற்கு பயன்படுத்தப்படுகின்றன.

(ii) கடந்த இரு தசாப்தங்களில் விவசாயத்துறையின் பங்கு குறிப்பாக பெருந்தோட்ட விவசாயத்தின் பங்கு மொத்த தேசிய உற்பத்தியில் குறைந்து கொண்டு வந்துள்ளது. உதார ணமாக 1970இல் மொத்த தேசிய உற்பத்தியில் சார்பளவாக 35 வீதத்தைப் பெற்றிருந்த விவசாயத்துறை 1986 அளவில் 24 சதவீதத்தைப் பெறுவதைக் காணலாம். இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் பெரும்பங்கினை பெற்றுத் தந்த பெருந்தோட்ட விவசாயத்துறையின் பங்கு 1970 இல் மொத்த தேசிய உற்பத்தியில் 15 வீதமாக இருந்து 1984ல் 6 வீதமாகக் குறைந்தது. 1960 இல் இதன் பங்கு 21 சதவீத மாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இலங்கை யின் ஏற்றுமதி அமைப்பில் பெருந்தோட்ட ஏற்றுமதிகள் பெற்றுவந்த முக்கியத்துவமும் சதவீத அடிப்படையில் குறைந் துள்ளது. 1970 களில் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய 90சதவீதத்தை தேயிலை றப்பர், தெங்கு போன்ற பயிர்கள் மூலம் பெற்ற வருமானமே பிடித்திருந்தது. 1986ல்

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, ...
(... ; 18-8-85)



இதன் பங்கு 41 சதவீதமாகக் குறைந்திருந்தது. 1977 க்குப் பின்னர் சேவைத்துறையின் பங்கு பெருமளவுக்கு அதிகரித்தது. மொத்ததேசிய உற்பத்தியில் சேவைத்துறை பெற்ற பங்கு 1960 இல் 36 வீதமாகவும் 1970 இல் 44 வீதமாகவும் 1986 51 சதவீதமாக இருந்தது.

(ஆ) 1977 க்கு பின்னர் சேவைகள் துறைபெறும் பங்கு மிகவும் கூடுதலாக அதிகரித்துள்ளது. 1985 இன் மொத்த தேசிய உற்பத்யில் சேவைகள் துறை பெற்ற பங்கு 51 சதவீதமாகும். கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கும் விவசாயத்துறையின் வளர்ச்சிக்கும் சேவைகள் துறை பெரும்பங்காற்றுகிறது.

நீடித்த மனித வாழ்வுச் சிறப்புக்கு சேவைகள் துறை வளர்ச்சியடைவது மட்டுமல்லாமல் ஏனைய துறைகளும் வளர்ச்சியடைதல் வேண்டும்.

வினா 5

வெவ்வேறு வகையான கலந்துரையாடல்களில் இலங்கையின் பொருளாதாரத்தை வர்ணிப்பத ; பின்வரும் சொற்றொடர்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சொற்றொடரும் தனித்தனியே துலக்கிக் காட்டும் சிறப்பியல்புகளை இனங் காட்டுவதற்குப் பயன் படுத்தக் கூடிய புள்ளி விபரத் தகவலிற் குறிப்பாகக் கவனம் செலுத்தி இச் சொற்றொடர்கள் ஒவ்வொன்றுக்கும் வரைவிலக்கணம் கூறுக.

(அ) ஒரு இருமைப் பொருளாதாரம்

(ஆ) ஒரு குறைவிருத்திப் பொருளாதாரம்

(இ) முதனிலைப் பொருளாக்கும் பொருளாதாரம்

(ஈ) ஓர் ஏற்றுமதிப் பொருளாதாரம் (1986

விடை 5

(அ) இருமைப் பொருளாதாரம்

இருமைப் பொருளாதாரம் என்பது ஒரு முழுமைப் பொருளாதாரத்தில் குறிப்பிட்ட நேரத்தில் இரண்டு வகையான தன்மையினைக் கொண்ட பொருளாதாரத்துறைகள் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டிராது அருகருகே இயங்குவதைக் குறிப்பிடுகின்றது. 19 ம் நூற்றுண்டில் இலங்கையில் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது இரட்டைப் பொருளாதார நிலைமை இங்கு ஏற்பட்டது. பெருந்தோட்டத் துறையும் கிராமியத்துறையும் இலங்கையில் அரு

[faint library stamp]



கே காணப்பட்ட போதும் நீண்ட காலம் வரை அவ்விருதுறைகளிலும் காணப்பட்ட உற்பத்தி நிலைகள், தொழில் நுட்ப பயன் பாடுகள் நிறுவன ரீதியான நடைமுறைகள் முதலியன குறித்து வேறுபாடுகள் காணப்பட்டன. பெருந்தோட்டத்துறையானது ஏற்றுமதி செய்யும் நோக்குடன் நவீன தொழில் நுட்ப நிருவாக முறைகளைக் கொண்டும் அதிக இந்தியத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியும் உற்பத்தி மேற் கொண்டது. ஆனால் கிராமியத்துறை ஒழுங்கு படுத்தப் படாத, ஏராளமான சுதேசிய விவசாயிகளைக் கொண்டதாயும் குறைந்த முதலுடனும், பாரம்பரிய உபகரணங்களுடனும் சுயதேவையை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வந்தது.

இத்தகைய இயல்புகளை அடையாளம் காண்பதற்கு, பயன் படுத்தக் கூடிய தரவுகள்;.

(1) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைசார்பான சேர்க்கை

(2) துறைகளிடையேயான உற்பத்தித் திறனிலும் தொழில் நுட்பத்திலும் காணப்படும் வேறுபாடுகள்

(ஆ) குறைவிருத்திப் பொருளாதாரம்

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றுவதில் மிகக் குறைந்த மட்டத்தில் செயல்படும் நாடுகளையே குறை விருத்திப் பொருளாதாரம் என்பர். இந் நாடுகள் குறைந்த தலாவருமானத்தைப் பெறும் நாடுகளாகும். எனினும் ஒரு நாடு குறை விருத்தி நாடா வளர்ச்சியடைந்த நாடா என்பதை அறிவதற்கு தலா வருமானம் பற்றிய தரவுமட்டும் போதுமானதல்ல. இதனை விட அப்பொருளாதாரத்தில் கைத்தொழில் துறையின் அபிவிருத்தி குறைவாக இருத்தல் வறுமை நிலையில் மக்கள் பெருமளவு காணப்படுதல், கல்வி கற்றோர் விகிதம் குறைவாக இருத்தல், உயர்ந்த இறப்பு விகிதம், வருமானப் பரம்பலில் அதிகளவு சமமின்மை போன்றனவும் குறைவிருத்திப் பொருளாதாரத்திற்குரிய இயல்புகளேயாகும்.

எனவே ஒரு பொருளாதாரம் குறை விருத்திப் பொருளாதாரமா என்பதை அறிவதற்கு

(1) தலா வருமானம்

(2) மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் வேலைவாய்ப்பிலும் துறை ரீதியான சேர்க்கை

(3) பௌதிக வாழ்க்கைத்தரக் குறிகாட்டி

(4) வருமானப் பரம்பல் போன்ற முக்கியமான தரவுகளைப் பயன்படுத்தலாம்.

(இ) முதனிலைப் பொருளாக்கும் பொருளாதாரம்

விவசாயப் பொருட்கள், கனிப் பொருட்கள், போன்ற முதல் விளைவுப் பொருட்களின் உற்பத்தியில் சிறக்குமியல்பினைப் பெற்ற பொருளாதாரத்தினை இச் சொற்றொடர் குறித்து நிற்கும். அதே வேளையில் இப் பொருளாதாரம் தனது ஏற்றுமதி வருமானத்தில் பெரும் பகுதியை முதனிலைப் பொருட்களை சர்வதேசசந்தையில் விற்பனை செய்வதன் மூலம்பெற்றுக் கொள்ளும். கைத்தொழில் பொருட்களின் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இந் நாடுகள் சிறப்பாக இருக்குமேயொழிய கைத்தொழில் துறை இங்கு வளர்ச்சியடைந்திருக்க மாட்டாது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவை ஏற்றுமதி செய்யும் பொருட்களின் விலைகள் சர்வதேச சந்தையில் அடிக்கடி தளம்பலடைகின்றன. இத்தகைய தளம்பலை, கட்டுப்படுத்தக் கூடிய வல்லமை இப் பொருளாதாரங்களுக்கில்லை.

இத்தகைய தன்மையினை அறிவதற்கு பிரதானமாகப் பயன்படுத்தப்படும் தரவுகள் பின்வருமாறு:-

(1) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சேர்க்கை

(2) வேலைவாய்ப்பின் சேர்க்கை

(3) ஏற்றுமதிகளின் சேர்க்கை

(ஈ) ஓர் ஏற்றுமதிப் பொருளாதாரம்

ஒரு பொருளாதாரத்தினது பல்வேறு நடவடிக்கைகள் ஏற்றுமதிகளில் தங்கியிருப்பின் அதனை ஏற்றுமதிப் பொருளாதாரம் என அழைப்பர். இச் சொற்றொடரானது முதல் விளைவுப் பொருட்களை முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகக் கொண்டு அவற்றின் வருமானத்தில் பெருமளவு தங்கியுள்ள பொருளாதாரங்களையே குறித்து நிற்கின்றது. இப் பொருளாதாரங்களின் தேசிய வருமானம் மூலதனவாக்கம், அரசாங்க வருமானம் இறக்குமதிகளின் அளவு மக்களின் வாழ்க்கைத்தரம் என்பன ஏற்றுமதித்துறை நடவடிக்கைகளிலேயே பெருமளவு தங்கியுள்ளன.

இத்தகைய ஒரு பொருளாதாரத்தினை சிறப்பாக அறிவதற்கு,

(1) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதிகளின் விகிதாசாரம்

(2) ஏற்றுமதிகளின் சேர்க்கை

(3) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறக்குமதிகளின் விகிதாசாரம்

போன்ற தரவுகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

**வினு 6**

(அ) இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தை வாழாதார (சீவனோபாயப் பொருளாதாரம்) என்று வர்ணிப்பதை எவ்வளவு தூரத்திற்குச் சரியெனக் கொள்ளலாம்.

(ஆ) இலங்கையின் பொருளாதாரத்தைப் பொறுத்தளவில் பெருந்தோட்டத்துறைக்கும் கிராமியத்துறைக்குமிடையில் வரலாற்று ரீதியாக மிகச் சில பிணைப்புகளே இருந்து வந்துள்ளன. இக்கூற்றை விமர்சன ரீதியாக ஆராய்க. (1985)

**விடை 6**

(அ) சீவனோபாயப் பொருளாதாரம் என்பதன் கருத்து யாதெனில் குறிப்பிட்ட பொருளாதாரத்தினது பொருளாதார நடவடிக்கைகளில் பெரும்பகுதி சந்தைக்காகவன்றி நுகர்வுக்காக உற்பத்தி செய்யப்படுவதைக் குறிக்கும். இத்தகைய பொருளாதாரங்களில் உற்பத்தி சிறிதளவு நடைபெறுவதனுல் சந்தைக்குரிய மிகை மிகவும் குறைவாக இருக்கும். எனினும் இன்றைய இலங்கையைப் பொறுத்தவரை இக்கருத்து முற்று முழுமையாகச் சரியானது என ஏற்றுக் கொள்வதற்கில்லை. போக்குவரத்து பெருமளவுக்கு விருத்தியடைந்துள்ளதாலும் பணப்புழக்கம் வங்கிப்புழக்கம் விரிவடைந்து வருவதாலும் கிராமங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களில் கணிசமான பகுதி சந்தைகளுக்கு வருகின்றன. உதாரணமாக வரண்டவலயங்களில் உற்பத்தியாகும் நெல், மற்றும் மிளகாய், வெங்காயம் போன்ற உப உணவுப் பொருட்கள் பெரு நகரங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அதேபோன்று நாட்டின் மலைப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள் நாடெங்கும் விற்பனையாவதையும் உதாரணமாகக் கூறலாம்.

(ஆ) இலங்கையில் பெருந்தோட்டத்துறையானது 16ம் நூற்றுண்டின் ஆரம்பபகுதிகளில் (1823) தோற்றம் பெறலாயிற்று. இத்துறைக்கும் கிராமியத்துறைக்கும் முதல், தொழிலாளர், முயற்சி

போன்ற உற்பத்திக் காரணிகளின் மூலமோ அல்லது ஒவ்வொரு துறையும் மற்றதுறையில் உற்பத்தி செய்யப்படுவனவற்றை நுகர்வதன் மூலமோ தொடர்புகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் நீண்டகாலத்திற்கு இத்தகைய தொடர்புகள் இருதுறைகளுக்குமிடையே மிகக்குறைவாகவே இருந்தன.

பெருந்தோட்டத்துறைக்குத் தேவையான முதல், தொழிலாளர், முயற்சியாளர் வெளிநாடுகளில் இருந்தே வந்தனர். இத்துறைக்குத் தேவையான உணவு மற்றும் உள்ளீடுகளும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்டன. பெருந்தோட்டத்துறையின் உற்பத்தியில் பெரும்பகுதி வெளிநாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனால் கிராமியத்துறையுடன் பெருந்தோட்டத்துறை கொண்டிருந்த நேரடித்தொடர்புகள் மிக மிகக் குறைவே.

எனினும் முற்றுமுழுதாக தொடர்புகள் இல்லை என்று கூறி விட முடியாது. தோட்டத்துறை உற்பத்தி செய்த மிகையின் ஒருபகுதி அத்துறை மீதான அரசாங்க வரிகளினூடாகப் பெறப்பட்டு பொருளாதாரத்தின் ஏனைய பகுதிகளுக்கு செலவிடப்பட்டது. இத்தகைய தொடர்பு இங்கு காணப்பட்டதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

## வினா 7

பிரித்தானியக் குடியேற்ற நாட்டுமுறை ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் தாபிக்கப்பட்டமையைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்பட்ட முக்கியமான மாற்றங்கள் எவை? *(1984)*

## வினா 8

(அ) பிரித்தானியாவின் குடியேற்ற நாட்டு அரசாட்சியிலிருந்து மரபுரிமையாகப் பெற்ற இலங்கைப் பொருளாதாரத்தின் பிரதான குணதிசயங்கள் யாவை? *(1983)*

[வினா 7 வினா 8 (அ) ஆகியவற்றிற்கான விடைகள் வினா 1ற்குரிய விடையில் காணப்படும் அம்சங்களையே உள்ளடக்கி இருக்கும். எனினும் வினாவுக்கு ஏற்றவகையில் வசனங்களை ஓரளவுக்கு மாற்றி எழுதுதல் வேண்டும்]

## வினா 8

(ஆ) ஒருகொடுக்கப்பட்ட வருடத்தின் இலங்கைப் பொருளாதார நிலையைப்பற்றி ஒரு முழுமையான அறிக்கையைத் தயாரிக்கும் படி நீர் வேண்டப்படுகிறீர் எனக் கொள்க. அவ்வித அறிக்கையினுள் எவ்வடிப்படைத் தரவுகளை நீர் உள்ளடக்குவீர். (1983)

## விடை 8

(ஆ) கொடுக்கப்பட்ட ஆண்டில் இலங்கையின் பொருளாதார நிலை பற்றிய முழுமையான அறிக்கையினைத் தயாரிப்பதற்கு பின்வரும் அடிப்படைத் தரவுகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

(1) மொத்த தேசிய உற்பத்தியும், தலாவருமானமும் அவற்றின் வளர்ச்சியும்

(2) மொத்ததேசிய உற்பத்தியின் அமைப்பும் அதன் மாற்றமும்

(3) பிரதான துறைகளான விவசாயம், கைத்தொழில், சேவைகள் துறைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள்

(4) சனத்தொகையும் அதன் வளர்ச்சியும்

(5) மனிதவலுப்பயிற்சி, வேலைப்படை, வேலைவாய்ப்பு, வேலையின்மை

(6) வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தகம்

(7) சென்மதிநிலுவை, நாணயமாற்று விகிதப்போக்கு

(8) அரசநிதி

(9) பணநிரம்பல் வங்கி நடவடிக்கைகள்

(10) விலைமட்டமும் கூலிகளும்

(11) பொருளாதாரக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்கள்

## வினா 9

(I) தென் ஆசிய நாடுகள் ஐந்து தொடர்பாக 1985ஆம் ஆண்டிற்கான சில தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | இந்தியா | பாகிஸ்தான் | இலங்கை | நேபாளம் | வங்களாதேசம் |
|---|---|---|---|---|---|
| ஆள் வீத மொத்த தேசிய உற்பத்தி (U. S. டொலர்) | 270 | 380 | 380 | 160 | 150 |
| சராசரி ஆயுள் எதிர்பார்ப்பு (ஆண்டுகள்) | 57 | 51 | 69 | 47 | 49 |
| 1000 உயிர்ப் பிறப்புக்களுக்கான சிசு மரணம்: | 105 | 115 | 36 | 143 | 124 |
| எழுத்தறிவு: (%) | | | | | |
| ஆண்கள் | 57 | 40 | 91 | 39 | 43 |
| பெண்கள் | 29 | 19 | 83 | 12 | 22 |

தென் ஆசிய நாடுகளின் சார்பளவான சமூக, பொருளாதார அபி விருத்தி மட்டங்கள் பற்றி, மேலே தரப்பட்ட தரவுகளில் இருந்து நீர் செய்யக்கூடிய பிரதான முடிவுகள் யாவை? தென் ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையின் சார்பளவான நிலைமையைச் சிறப்பாக ஆராய்க.

(II) ஓர் அபிவிருத்தியடைந்த பொருளாதாரம் பற்றியும் ஓர் அபி விருத்தியடைந்து வரும் பொருளாதாரம் பற்றியும் பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

| | விவசாயம் | கைத்தொழில் | சேவைகள் |
|---|---|---|---|
| (அ) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கீடு (%) | | | |
| இந்தியா | 31 | 27 | 41 |
| ஐக்கிய அமெரிக்கா | 2 | 31 | 67 |
| (ஆ) தொழிற் சேனையின் பங்கீடு (%) | | | |
| இந்தியா | 70 | 13 | 17 |
| ஐக்கிய அமெரிக்கா | 4 | 31 | 66 |

இரண்டு நாடுகளினதும் உற்பத்தி அமைப்பையும் தொழில் அமைப்பையும் ஒப்பிடுக. பொருளாதார வளர்ச்சி காரணமாக, பொருளாதாரம் ஒன்றில் ஏற்படும் அமைப்பு ரீதியான மாற்றங்களைப்பற்றி நீர் யாது கூற முடியும்? (1988)

**விடை 9**

(I) பொருளாதார ரீதியாக தலாவருமானத்தினை அளவீடாக வைத்து நோக்குகின்றபோது தெற்காசியாவில் மிகக்குறைந்த அபிவிருத்தியடைந்த நாடுகளாக நேபாளமும் (160 டொலர்) வங்காளதேசமும் (150 டொலர்) காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் பாகிஸ்தானும் இலங்கையும் (380 டொலர்) கூடிய தலாவருமானம் கொண்ட நாடுகளாகக் காணப்படுகின்றன. இவற்றுக்கு இடைப்பட்ட நிலையில் இந்தியா (270 டொலர்) உள்ளது

சமூகஅபிவிருத்தியினை நோக்குகின்றபோது ஏனைய நாடுகளிலும் பார்க்க இலங்கை முன்னேற்றமான நிலையில் உள்ளது. சராசரி ஆயுள் எதிர்பார்ப்பு ஏனைய நாடுகளை விட இலங்கையில் உயர்வாகவும் சிசுமரணவிகிதம் இப்பிரதேசத்தில் உள்ள ஏனைய நாடுகளை விடக் குறைவாக மிகவும் உள்ளது. கல்வியறிவு விகிதம் குறிப்பாகப் பெண்களின் கல்வியறிவு விகிதம் ஏனைய நாடுகளைவிட இலங்கையில் கூடுதலாக உள்ளது. இந்நிலைமைகள் இலங்கையில் காணப்படுவதற்குரிய முக்கிய காரணமாயமைவன இலங்கை சுதந்திரம் பெற்றுவந்த பின்னர் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட சமூக நலன் சார்ந்த கொள்கைகளேயாகும். சமூக அபிவிருத்தியினைப் பொறுத்தவரையில் இங்குள்ள ஏனைய நாடுகளை விட இலங்கை முன்னணியில் உள்ளதெனலாம்.

(II) இரண்டு நாடுகளினதும் உற்பத்தியமைப்பை நோக்குகின்ற போது இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்விவசாயம் 31%யும் கைத்தொழில் 27%யும் சேவைகள் துறை41% யும் பெறுகின்றன, ஆனுல் அதேவேளையில் அமெரிக்காவில் விவசாயம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2%தினை மட்டுமே பெற ஏனைய இருதுறைகளும் 98%தினைப் பெற்றுக் கொள்கின்றன.

தொழில் அமைப்பைப் பொறுத்தும் இத்தகைய தன்மையைக் காணலாம். இந்தியாவின் வேலைப் படையில் 70 சதவீதம் விவசாயத் துறையிலேயே தங்கியுள்ளது. மிகக் குறைந்தளவினரே (30%) கைதொழில் துறையிலும் சேவைத்துறையிலும் வேலை செய்கின்றனர். ஆனுல் அமெரிக்காவில் 4வீதத்தினர் மட்டும் விவசாயத்துறையில் வேலைசெய்ய ஏனையதுறைகளில் கூடுதலானேர் தொழில் புரிகின்றனர்.

பொருளாதார வளர்ச்சி ஏற்படுகின்ற போது மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் மொத்த வேலை வாய்ப்பிலும் விவசாயத்துறையின் சதவீதப்பங்கு குறைந்து கொண்டு செல்லும். ஏனைய துறைகள் பெறும் பங்கு அதிகரிக்கும். இதற்குப் பின்வரும் காரணங்கள் பொறுப்பாக உள்ளன.

(அ) வருமானம் அதிகரித்துக் கொண்டு செல்ல செல்ல உணவுத் தேவைகள் பெருமளவு பூர்த்தியடைவதால், விவசாயப் பொருட்களுக்கான கேள்வி ஓர் எல்லைக்கப்பால் மெதுவாகவே அதிகரிக்கும், உயர்ந்த வருமான மட்டத்தில் விவசாயப் பொருட்களுக்கான வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி குறைவாக இருப்பதால் வருமானம் அதிகரிக்க அதிகரிக்க விவசாயத்துறையின் உற்பத்தியில் மெதுவான அதிகரிப்பையே காணமுடியும்.

ஆனுல் உணவல்லாப் பொருட்களுக்கான குறிப்பாக கைத்தொழில் பொருட்களுக்கும், மற்றும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, கலாச்சார சேவைகள் போன்றவற்றுக்கான கேள்வி அதிகரிப்பதால் அவற்றின் உற்பத்தி அதிகரிக்க அத்துறைகள் மொத்த உண்ணுட்டு உற்பத்தியில் பெரும் பங்கினைப் பெறும்.

(ஆ) அதே சமயத்தில் பொருளாதாரம் வளர்ச்சியுறும் போது விவசாயத்துறையில் வேலை செய்வோரின் சதவீதப் பங்கும் குறைவடையும். விவசாயத் துறையில் நவீன யந்திரங்கள் காலப் போக்கில் பயன்படுத்தப்பட, பல மனிதர்களுக்குப் பிரதியீடாக அவை அமைய விவசாயத்துறையை விட்டு பல தொழிலாளர்கள் வேறு துறைகளை நாடுவர். அத்துடன் பொருளாதார வளர்ச்சி ஏற்பட விவசாயத் துறையில் உள்ள ஊழியர்களின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதால் குறிப்பிட்ட பொருளாதாரத்திற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய குறைந்த தொழிலாளரே தேவைப் படுவர்.

இக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் 1973ல் அறிமுகப்படுத்தப்பட்ட விரிவாக்க பயிர்க் கடன் திட்டத்தின் நடைமுறையுடன், கூடுதலான பணிகளில் ஈடுபடலாயின. அங்கத்தவர் வைப்புக்களை அதிகரித்தல், உற்பத்தி, நுகர்வு சார்ந்த கடன் வசதி வழங்குதல், எல்லோருக்கும் அடைவு பிடித்தல் மூலம் நிதியுதவி செய்தல், பணக்கொடுப்பனவு, பணப் பரிமாற்றங்கள் போன்றவற்றில் உதவுதல்.

இவ்வங்கிகள் பின்வரும் நோக்கங்களுக்கு கடன் வழங்கி வருகின்றன.

1. உற்பத்தி
    - 1.1 வேளாண்மை
    - 1.2 விலங்கு வேளாண்மை
    - 1.3 குடிசைக் கைத்தொழில்
2. வீடமைப்பு, மின்னூட்டலும், நீர் வழங்கலும்
3. கடன் மீட்பு
4. நுகர்வு
5. வியாபாரமும், பிறவும்

இவற்றில் அதிகமானவை வீடமைப்பு சார்ந்த கடனாக விளங்கின. அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தின் கீழ் குறுங்கால நடுத்தவணைக் கடன்களையும், பயிர்க் கடன்களையும், அடைவு பிடித்தல் கடன்களையும் வழங்கி வருகின்றது.

இவ் வங்கியமைப்பு கிராமிய மட்டத்தில் அதிக தொகையை வைப்பாகத் திரட்டியபோதிலும், குறைந்த அளவு தொகையே கிராமிய மட்டத்தில் கடனாகக் கொடுபட்டுள்ளது. இது கிராமியக் கொடுகடன் நோக்கில் பிரதான குறைபாடாயுள்ளது. இதன்படி கிராமத்துறையின் சேமிப்பு நிதியில் பெரும் பகுதி அத்துறைக்கு வழங்கப்படாது, நகர்ப்புறத்துறைக்கு மாற்றப்படுகிறது. கிராமத்துறையின் தேவைக்கே நிதி போதாது என்ற கோரிக்கை வலுவடையும்போது, அத்துறையின் வைப்பு ஏற்கனவே பல்வேறு மூலங்களில் நிதிபெற்று வளர்ச்சி பெற்றுள்ள நகர்ப்புறத்துக்கு மாற்றப்பட்டு வருவது துறைசார் சமமின்மையை அதிகரிக்கச் செய்வதாகவே அமையும்.

## பொருளியலாளன் இதழைப் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்

**திரு. ந. பேரின்பநாதன்**
பொருளியற்துறை, யாழ். பல்கலைக் கழகம்

**இளம் பொருளியலாளர் நிறுவனம்**
37, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்.

**திரு. மா. சின்னத்தம்பி**
சம்பியன் லேன், கொக்குவில்.

**திரு. எஸ். தண்டாயுதபாணி**
இந்துக்கல்லூரி, திருகோணமலை.

**திரு. கே. ரீ. கே. தம்பையா**
வந்தாறுமூலை, மட்டக்களப்பு.

**பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**

**அன்பு ஸ்ரோர்ஸ், கல்முனை.**

**டானியல் புத்தகசாலை, கொழும்பு - 6.**

ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

18-8-85

பின்னிணைப்பு I

## வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு

**( Non - Resident Foreign Currency Account. NRFC )**

வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு என்பது வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையரால், வெளிநாட்டு நாணயத்தில் சேமிப்பு, நிலையான வைப்புக் கணக்கு வைத்திருத்தலைக் குறிக்கும். இக்கணக்கை ஆரம்பிப்பவர் ஆறு மாதங்களுக்கு மேற்பட வெளிநாட்டில் வசித்திருக்க வேண்டும். அத்துடன் இவர் வெளிநாட்டிலிருக்கும் போதோ அல்லது இலங்கை திரும்பிய 90 நாட்களுக்குள்ளேயோ இக்கணக்கினை ஆரம்பிக்கலாம். இவ்வாறு கணக்கை ஆரம்பித்தவர் இலங்கை திரும்பிய பின் 10 வருடங்கள்வரை இதை தொடரமுடியும். இக்கணக்கின் தொழிற்பாடுகள் வெளிநாட்டு செலாவணிக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவையாகும். இதன் கீழ் வழங்கப்படும் சேமிப்புக்கான வட்டியும் வெளிநாட்டு நாணயத்திலேயே வழங்கப்படும். இக்கணக்கினை வைத்திருப்பவர்களுக்குச் சில வர்த்தக வங்கிகள் கடன்களையும், மேலதிகப் பற்று வசதிகளையும் வழங்கி வருகின்றன.

பின்னிணைப்பு II

## பொறெக்ஸ் கழகம்

(Foreign Exchange Club) என்பதன் சுருக்கமான பதப்பிரயோகமே FOR - EX எனப்படுகின்றது. வெளிநாட்டுச் செலவாணித் தொழிற்பாட்டில் ஈடுபடுபவர்களிடையே நட்புறவையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்கும், இக் கொடுக்கல் வாங்கல்களில் தொழில் நுட்பத் தன்மையை அபிவிருத்தி செய்வதற்குமென உருவாக்கப்பட்டதே பொறெக்ஸ் கழகமாகும். சகல வர்த்தக வங்கிகளுடனும் வெளிநாட்டு செலாவணித் தொழிற்பாட்டில் ஈடுபடுகின்றவர்கள் எல்லோரும் பொறெக்ஸ் கழகத்தில் அங்கத்தவராகச் சேரமுடியும். தாராளமயப் படுத்தப்பட்ட நிதிமுறைமையின் கீழ் பண, மூலதனச் சந்தைகள் அபிவிருத்தியடைந்து வரும் இக்காலகட்டத்தில் இவ்வாறான கழகங்கள் அமைக்கப்படுவதன் மூலமே பணச்சந்தைக்கும், நிதி நிறுவனங்களுக்குமிடையிலான தொடர்பை இலகுபடுத்த முடியும். பொறெக்ஸ் கழகத்தின் தொழிற்பாட்டை இலகுபடுத்துவதற்காக மத்திய வங்கி அறவியல் சட்டம் (Code of ethics) ஒன்றை வரைந்துள்ளது. இதனை நிர்வகிப்பதற்காக குறிப்பாக இச்சட்ட திட்டங்களுக்கு உட்படாத அங்கத்தவர்களையும், மற்றும் அங்கத்தவர்களிடமிருந்து கிடைக்கும். முறைப்பாடுகளையும் கவனிப்பதற்காக சந்தை நடைமுறைக்குழு (Market Practices Committee) என்ற அமைப்பினைத் தாபித்து அதனூடாக பொறெக்ஸைக், கண்காணித்து வருகின்றது. பொறெக்ஸ் கழகம் 1983 ஆம் ஆண்டிலேயே தாபிக்கப்பட்டதால் இன்னமும் ஒரு பரீட்சார்த்தக் கட்டத்திலேயே இருப்பதனால் இதுபற்றிய மதிப்பீடும் கடினமானதே.

# PORULIYALALAN

YOUNG ECONOMISTS ASSOCIATION

Published By :
Young Economists Association
37 Press Lane
Kokuvil
Sri Lanka.